ஆகஸ்ட் மாத

# தாக்கம்

மலையக மக்கள் மனங்களில்...

ஒரு படைப்பு வாசகனுக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது
எத்தனை பேர் எத்தனை முறை வாசிக்கிறார்களோ அத்தனை முறை அது புதிதாக பிறக்கிறது



இதழ் 01

## மீண்டும் வி.எல். பேசுகிறார்

மறந்துக் கொண்டே இருப்பது மக்களின் இயல்பு
நினைவுப்படுத்திக் கொண்டே இருப்பது எமது பணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாக்கம்

அரசியல் சமூகவிஞ்ஞான இதழ்

**தலைமை பொறுப்பாசிரியர்**
செ.பார்த்தீபகாந்தன்
B.A (Spi.pol.sce) Dip.in. journalism &Mass media

**உதவி ஆசிரியர்கள்**
சு.சுரேஸ்குமார் (BA.Read)
யசோக்குமார் (BA.Read)

**ஆசிரியர் குழு**
செ.துசியந்தன்
திவியாராஜன்
தாமரைச் செல்வி

**ஆலோசனைக் குழு**
வி.எஸ்.பெரைரா
சிவனையா செல்வராஜா
கணபதி கனகராஜ்
ராமையா பாலகிருஸ்ணன்
சி.எஸ்.காந்தி

**கணினி அச்சு, பக்க வடிவமைப்பு**
எஸ்.தீபன்
எஸ்சுரேஸ்

**அச்சுப் பதிப்பு**
மெக்ஸ் வோர்த் -0777278277

**பிராந்திய காரியாலய முகவரி**
தாக்கம்
மலையகப் பேரவை
155 1/1, டிம்புல வீதி,
ஹட்டன்



தொலைபேசி -0759575659 /0719504269
E-Mail : thakkam_tamil magazine@gmail.com
msspkanthan@gmail.com




## ஆட்கள் தேவை
## மீண்டுமொரு தேர்தலுக்கான கட்சி விளம்பரம்
## (மலையகத்தவர் விரும்பத்தக்கது)

விளம்பரம் ஒட்ட ஆட்கள் தேவை
வீதி வீதியாய் ஒட்டுதல் வேண்டும்
களத்தில் குதிப்பது போலே இங்கு
கரிசனையோடு பணியாற்ற வேண்டும்
நாளுக்கு ரூபா முன்னூற்றி யைம்பது
நாவு நனைக்க சாராயமும், சாப்பாடுமுண்டு
காளைகள் போல துணிவு வேண்டும்
இரண்டு கட்சிகளுக்கு வேலை செய்ய தந்திரம் வேண்டும்
சாதாரண மக்களும் தேவை..!
உயர்தரம் பயின்ற ஆசான்களும் தேவை..!

வேலையில்லா கூட்ட மதிகம்
வேதனை போக்க என்ன மார்க்கம்?
காலையிலெழுந்தால் மதி மயக்கம்
மாலையானால் மது மயக்கம்
இரண்டையும் சேர்த்த கலவை வேண்டும்
இதயமற்ற மனங்கள் வேண்டும்
கூலி வேலையும் யார்தான் கொடுப்பார்?
காலி, காடையர் வேலையான போதும்
மாலையில் வரும் துணிந்த எண்ணம்
போதை முடிந்தபோது அடங்குவது எங்ஙனம்?

இந்த நிலையில் விளம்பர மோட்ட
இனியுமிங்கு மறுப்பார் யாரோ?
சந்து பொந்து எல்லாம் நுழைந்து
சாக்கடை, குப்பை, கூளம் விடாது
பந்து போன்று அங்கு மிங்கும்
பணிகள் ஓடி செய்யும் வீரம்
விந்தை புரியும் மனிதர் நீங்கள்
விளம்பர மொட்டத் தகுதி உள்ளோர்..!

வி.எல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே

தாக்கத்தின் பயணம் 2

வி.எல்.பேசுகிறார். 3

அதிகாரப் பரவலாக்க முன்னெடுப்புக்களும் மலையக தமிழ் மக்களும் 5

மறைந்தும் மறையாத மலையக உரிமைப் போர்.. 9

தாக்கம் தந்தவை... 11

மேதினத்தில் தொழிலாளர் மனதில் பதிக்க வேண்டிய சிந்தனைகள் 13

பொய்யர்களின் பிரதிநிதி 17

வீட்டுக்கு ரொட்டி.! நாட்டுக்கு திருஷ்டி..! 17

ஸ்ரீ றங்காவின் சாதனை நீடிக்குமா? 18

கண்ணான கண்மணிக்கு கதை கேட்க ஆசையில்லை 19

கவனிக்கப்படுகின்றீர்கள் 23

காரணகாரியம் 24

சி.வி.வேலுப்பிள்ளையின் வாழ்நாளில் சில சம்பவங்கள் 25

மாடசாமி பூசாரியின் கேள்விப்பதில்கள் 28

கருத்துக் களம் 31

இளம் எழுத்தாளர்களே.!

நீங்களும் தாக்கத்தினூடாக எழுத்தாளராக அறிமுகமாகலாம். உங்கள் ஆக்கங்களையும், அத்துடன் உங்களால் உறுதிப்படுத்திய புகைப்படம், குறிப்பு ஆகியவற்றை எமது தாக்கம் காரியாலயத்துக்கு அனுப்பிவைக்கவும்.நிச்சயமாக பிரசுரமாகும்.

ஆ-ர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாக்கத்தின் பயணம்

மனித தோற்றம் முதல் இன்றுவரை மனிதன் தன்னோடு இணைந்த வகையில் தன்னை சுற்றி நடக்கும் சம்பவங்கங்களையும்; செயற்பாடுகளையும், நடவடிக்கைகளையும் பற்றி அறிந்துக் கொள்ள பேரார்வம் கொண்டு வருகின்றான். அவனுடைய நாகரீக வளர்ச்சியும், அறிவின் ஆற்றலும், இந்த ஆர்வத்தினை மேலும் விரிபுப்படுத்தியுள்ளன. மனிதன் இன்று மிக வேகமான காலவோட்டத்தில் பயணித்துக் கொண்டிருந்தாலும் சமுதாய நிழலில் அவனை நிஜப்படுத்தி செல்லவே விரும்புகின்றான்.

சமூதாய அந்தஸ்து அல்லது கௌரவம் தனிமனித நிலையில் தனது செல்வாக்கை காட்டிநிற்பதே காரணமாகும். சமூதாய, அந்தஸ்து இல்லாத தனிமனிதனின் சிறப்பு, சிறப்பானதாக கருதமுடியாது. நாகரீகம் என்ற ரீதியில் சமூதாய அல்லது சமூக நிலைபாடு மேலைதேய, கீழைதேயத்தினால் வேறுப்படுத்தப்பட்டு இருக்கின்றது. மேலைத்தேய நாகரீகங்கள் தனி மனித செயற்பாட்டில் அதிக ஆர்வம் காட்டி, சமூக சமுதாய நிலைப்பாட்டை வீழ்ச்சியடைய செய்திருக்கின்றன. ஆனால் கீழைத்தேய மரபு அதன் கலாச்சாரத்தின்பால் ஒருங்கிணைக்கப்பட்ட சமூக, தனிமனித மரபினை மேல்நிலைப்படுத்தியிருக்கின்றன. எனவே கீழைத்தேய நாகரீக நாடுகளில் தனிமனித செல்வாக்கு கௌரவம் என்பவற்றை சமூக அலகுடனே தொடர்புப்படுத்தி காண வேண்டியுள்ளது.

எனவே சமூதாய நலனுடன் கூடிய எதிர்பார்க்கையுடன் இந்த சஞ்சிகையானது தனது பிரவேசத்தினை ஆரம்பித்திருக்கின்றது. ஒவ்வொரு சமூகமும் ஏதோ ஒரு வழியில் தனது முன்னேற்றத்தினையே குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றன. மலையக சமூகமானது அன்று தொட்டு இன்று வரை ஒரே அடிப்படையான தளத்திலே நகர்ந்துக் கொண்டிருக்கின்றது. அண்மையில் கலாநிதி ஏ.எஸ்.சந்திரபோஸ் குறிப்பிடுகையில் சமூக பரிமாணத்தின் மாற்றத்திற்கான அரசியல் தளம் உருவாக்கப்பட்டுள்ளது என எதிர்வு கூறியுள்ளார். ஆனால் இது மலையகத்திற்கு புதிதல்ல. பல சந்தர்ப்பங்கள் கைகூடியிருந்த சந்தர்ப்பங்களை கைநழுவிய அரசியல் தளம் மீண்டும் அதற்கான வாய்ப்பினை பெற்றிருப்பது அதன் சாணக்கிய தன்மையிலே தங்கியுள்ளது. எனவே "சமூக தளத்தினை ஸ்திரப்படுத்த முற்படும் போதே அரசியல் தொடர்பான தளம் ஸ்திரமாக அமையும்" என்பதே எமது நோக்கு. இதற்கான வழிமுறைகள் தொடர்பாக பலவாறான விதர்புரைகள் பல மட்டங்களிலும் கூறப்பட்டு வருகின்றன. ஆனபோதும் அபிவிருத்தி பின்னடைவுகளை இன்னும் தவிர்க்க முடியாதளவே அவதானிக்கப் படுகின்றது.

இதழியல் என்பது "மக்களைப் பற்றி மக்களுக்கு, மக்களுக்காக செய்திகளை அறிவிப்பதை அடிப்படையாகக் கொண்டது. இதனை திரு. லெனின் மதிவானம் குறிப்பிடுகையில் "பெருமளவில் விற்பனையாகின்ற மக்களின் இரசனையை கீழ்மைப்படுத்தி வணிக நோக்கத்தினையே முதன்மையாக கொண்டு வெளிவருகின்ற பத்திரிகைகளுக்கு மாறாக கொள்கை உறுதியுடன் இலக்கிய பிடிப்புடனும், யாவற்றுக்கு மேலாக சோதனைகளையும், சவாலையும் எதிர்கொள்கின்ற ஆற்றலையும் கொண்டு வருகின்ற பத்திரிகைகளே சஞ்சிகைகள், சிறுபத்திரிகைகள் என நாம் அழைக்கின்றோம்" என்கின்றார். எனவே சமூக ரீதியிலும், சமூதாய ரீதியிலும் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு வெளிவருகின்ற சஞ்சிகைகளில் தாக்கம் ஆரம்பகாலம் தொட்டு அப்படியான கொள்கை நிலைபாட்டுடனே வெளிவந்திருக்கின்றது என்பதினை நாம் இவ்விடத்திலே நினைவு கூற வேண்டும். மலையக மக்களிடையே அரசியல் தொடர்பான விழிப்புணர்வுகளையும், அரசியல் விமர்சனங்களையும் கொண்டுவந்த தாக்கம் பல்வேறு மட்டங்களிலும், பல நாடுகளிலும் வரவேற்பை கொண்டது. ஒரு சாரரால் இப்படியான தகவல்களையும், அரசியல் உண்மையையும் மலையக மக்களால் புரிந்துக்கொள்ள முடியுமா? என்ற கேள்விகளுக்கு பதில் தந்தனவாக அதன் வாசகர்களின் பங்களிப்பு காணப்பட்டது. எனவேதான் மீண்டும், மலையக சமூகத்தின் நிலைபாடு தொடர்பாக மலையக மக்கள் தெரிந்துக் கொள்ள வேண்டும் என்ற உயரிய சிந்தனையின் அடிப்படையில் இச்சஞ்சிகை தொடக்கப்படுகிறது. இதில் இடம்பெறும் அனைத்து விடயங்களும் மலையக சமூகத்தின் எழுச்சியை பிரதானமாகக் கொண்டு செயற்படுத்தப்படும்.

நாளுக்கு நாள் இடம்பெறுகின்ற நடைமுறைச்சிக்கல்கள் வாழ்க்கை நடைமுறைகள், சமூக நிலைபாடு என்பன சமூகத்தில் பெரிதும் பாதிப்பை செலுத்துகின்றன. இவை ஏதோ ஒரு வழியில் தனிநபரை பாதிப்படையச் செய்கின்றன. எனவே இவர்களைக் கருத்திற் கொண்டு அவர்களின் திறமைகளையும், ஆளுமைகளையும் வெளிக்கொணர்வதாய் இச்சஞ்சிகை முன் நிற்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வி.எல். மீண்டும் பேசுகிறார்.

யார் இவர்?

உங்களில் பலருக்கு தெரிந்திருக்கும் இளம் தலைமுறையினருக்கு தெரியாமல் இருக்கும். மலையகம் மறந்திருக்கும் ஆனால் மலையகத்தை மறக்காமலிருக்கும் மனிதர்களில் இவரும் ஒருவர். தனிமனிதனாய், ஓர் இலக்கியவாதியாய், ஒரு தொழிற்சங்கவாதியாய், ஒரு சமூக ஆர்வலராய், தற்போதைய மலையக தலைமைகளை அன்றே ஒன்று சேர்க்க துணிந்த மாவீரராய் மூன்று தசாப்தங்களாக உம்முடன் வாழ்ந்துக் கொண்டிருப்பவர்தான் இந்த வி.எல்.பெரைரா.

இவர் ஆரம்பகாலத்தில் விவசாய விடுதலை முன்னணி எனும் தொழிற்சங்கத்தின் ஸ்தாபகராகவும், பொது செயலாளராகவும் இருந்தார். இதன் பின்னர் மலையக பேரவையை ஸ்தாபித்து 2004ம் ஆண்டு வரையும் தனது சேவையினை மலையகத்துக்காக செய்தவராவார். இவரது இலக்கிய பணிகள் இவரது அறிவினை புடம்போட்டு காட்டவல்லன. குறிப்பாக மலையக சார் விழிப்புணர்வுக்காக தன்னுடைய ஆக்கங்களை படைத்தார். இவரால் உருவாக்கப்பட்டு கொண்டு நடத்தப்பட்ட மாதாந்த சஞ்சிகையான தாக்கம் அன்றைய காலக்கட்டத்திலும் சரி, இன்றும் சரி சிறப்பானதாக காணப்படுகின்றது. வியாபார நோக்கத்திற்காக வந்த சஞ்சிகைகளைக் காட்டிலும் பொதுநலனை அடிப்பபடையாகக் கொண்டு வந்த சஞ்சிகைகள் மலையகத்தை பொறுத்தவரை மிகவும் குறைவானதாகும். இந்நிலையிலும் அரசியல் தொடர்பான விழிப்புணர்வு எனும் நோக்கத்துக்காகவே வெளிவந்தது. தவிர்க்க முடியாத காரணத்தினால் பல ஆண்டுகள் தாக்கம் வெளிவரவில்லை. வி.எல். பெரைராவினது பொதுநலதிட்டங்கள், பணிகள் பல ஆண்டுகள் சற்று ஸ்தம்பித்துவிட்டது.

ஆனால் அவரது கொள்கைகளும், பணிகளும் இன்றும் மலையகத்துக்கு அத்தியாவசியமான தொன்றாக காணப்படுகின்றது. ஆரம்ப காலம் தொட்டு மலையகத்தின் விடிவுக்காக அவர் முன்வைத்த தீர்க்க தரிசனமாக கருத்துக்கள் இன்றும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. மலையகம் பரிணாமத்தின் வளர்ச்சியிலே பின்நிற்பது ஏனைய சமூக நிலைப்பாட்டிலிருந்து பின்தள்ளப்பட்டுள்ளது என்பதினை எடுத்துக் காட்டுகின்றது. சமூக, அரசியல், பொருளாதார முன்னெடுப்புகளில் மலையகம் சாதித்துள்ள நிலையென்ன? என்பது இன்னும் பல ஆண்டுகள் வரை நீடிக்கும் நிலையிலுள்ளது.

வி.எல் முன்வைத்த கருத்துக்கள் தெய்வீகத்தனமானது. குறிப்பாக 1989ம் ஆண்டுகளிலே மலையகத்தின் ஐக்கியம், ஒருமைப்பாடு மேலோங்க வேண்டுமெனின் அரசியல் ரீதியாக ஒருங்கிணைவதே வழி என்றார். அதனையே இன்றும் அநேக சிந்தனைவாதிகளும், அரசியல் அவதானிகளும், புத்திஜீவிகளும் வேண்டிநிற்கிறார்கள். இப்படியான தீர்க்கதரிசன சிந்தனையாளரின் கருத்துக்களை, திட்டங்களை நம் முன்னெடுக்க வேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது. எனவே யார் இதனை செய்வார்கள்? யாருக்கு இந்த பொறுப்பு போன்ற விடயங்களை மறந்த அரசியல் நகர்வுகளே இன்று மலையகத்தில் காணப்படுகின்றது. இவைகளுக்கான தீர்வு என்ன? என்பது பற்றி மலையக மக்களும், அரசியல்வாதிகளுமே சிந்திக்க வேண்டியவர்களாய் இருக்க வேண்டும்.

### கடந்த பல வருடங்களுக்கு முன்னர் மலையக அரசியல் தலைவர்களை ஓரணி திரள அழைத்தவர்தான்

# வி.எல். இன்றும் அழைக்கிறார்

தேசிய அரசியலைப் பற்றிப் பேசுமுன்னர் மலையகம் தொடர்பாகவும் அதன் அரசியல் வகிபங்கைப் பற்றியும் பேசியாக வேண்டும். 1989ம் ஆண்டுகளில் காணப்பட்ட தேசியப் பிரச்சினைக்கும் இன்றைய தேசியப் பிரச்சினைக்குமிடையில் நிறைய வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆனால் மலையகத்தைப் பொறுத்தவரை அன்றுள்ள பிரச்சினைகள்தான் இன்றும் காணப்படுகின்றது. இது இன்னும் அதே வட்டத்துக்குள் வாழ்கின்றோம் என்ற நிலையையே காட்டுகின்றது. அதன் அடிப்படையில் அமைந்த பிரச்சினைகள்தான் புதிய பரிணாமம் பெற்றிருக்கின்றன. அதை தவிர பெரியளவிலான மாற்றங்களை கொண்டிருப்பதாக இல்லை. இது இவ்வாறிருக்க சிறுபான்மையினருக்கும் பிரதிநிதித்துவத்தை வழங்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் பிரதிநிதித்துவ தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நிலை மாறி இன்று தொகுதிவாரி தேர்தல் முறைக்கான பிரேரணைகள் முன்மொழியப்பட்டு வருகின்றன. இந்நிலையில் மலையக தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தைக் காட்டும் நுவரெலியா மாவட்டம் இந்த தொகுதிவாரி முறைக்கு உட்படுமாயின் அந்த நிலைபாடும் கேள்விக்குறியதாகவே அமைகின்றது. இது இப்படியிருக்க மலையக தொழிற்சங்கங்களின் பயணம் ஐக்கியத்து மாறாகவே அமைகின்றது. இது மேலும் கேள்வியடைய வைக்கின்றது.

இந்தநிலையில் பலமான அரசியல் தளம் ஒன்றை நமக்குள் ஏற்படுத்திக் கொள்வது காலத்தின் தேவையாகவிருக்கிறது. மலையகத்தில் முன்பு காணப்பட்ட ஒரு பலமான அமைப்பு சிதறடிக்கப்பட்டுள்ளதை விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இந்த நிலைக்கு யார் காரணம்? 1994ம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் மலையகத்தில் தனித்துவமான கட்சியாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மட்டுமே இருந்தது. இதன் பிற்பட்ட காலப்பகுதியில் தோற்றம் கண்ட பிளவுகள், இன்று பல பிரிவுகளாக கொண்ட சிறு கட்சிகளையும், தொழிற்சங்கங்களையுமே காணமுடிகின்றதே தவிர ஆக்கபூர்வமான செயற்பாட்டுக்கு வித்திடும் தன்மையை காணமுடியாதுள்ளது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் இருந்து பிரிந்து வந்த கட்சிகள் தங்களின் தனித்துவ கொள்கை மாறுதல்களில் இருந்து பிரிந்து வந்தனவா? என்பது பலரதும் கேள்வி. ஆனால் அது வெளிபகட்டுக்கான தோரணைக்கு மட்டுமே அமைந்தது தவிர உண்மை அதுவல்ல. பதவி மோகம், அந்தஸ்தினை பேணிக்கொள்ளல், பணத்தகராறுகள் என்பனவே காரணமாக அமைந்திருக்கின்றன. இது எத்தகைய பலனைத் தரபோகிறது என்ற கெள்விக்கு இன்று பதில் கிடைத்திருக்கிறது. மலையக கட்சிகளுக்கிடையில் ஒருமைப்பாடு இன்மை, பலமான தொழிலாளர் அமைப்பு இன்மை, பேரம்பேசும் திறன் இன்மை போன்ற இன்னோரன்ன பிரச்சினைகளைத் தொற்றுவித்துள்ளது. எதிர்கட்சிகள் என்ற வரிசையில் அமர்ந்துக் கொண்டு ஆளும் தரப்பு எடுக்கும் எல்லா நடவடிக்கைக்கும் வாதம் பேசி, ஒரு வரட்டு வாதத்தினை உருவாக்கி அதனை இல்லாமல் செய்யும் திறனே மலையக எதிர் தரப்பினரிடம் காணக்கூஎய பண்பாயிருக்கின்றது. எனவே அதனைவிடுத்து ஒரு செயற்பாட்டு அனைவரினது ஆலோசனையின் பேரில் முன்னெடுக்கும் திட்டமே மலையகத்தின் அபிவிருத்திக்கு தேவைப்படுகின்றது. இன்றைய காலத்தின் தேவை அனைத்து கட்சிகளும் ஒரு இணைக்கப்பாட்டுக்கு வந்து அதன் மூலம் எதிர்காலத்தில் மலையகத்தின் அரசியல் அபிவிருத்தி பின்னடைவிலிருந்து காப்பாற்றுவதே ஆகும். அரசின் நேரடியான அரசியல் பார்வைக்கு மலையகமும் தள்ளப்படுமாயின் சிறுபான்மையின உரிமை கேள்விக்கிடமாகும். இதற்கான சூழ்நிலைகள் தொடங்கிவிட்டன. எனவே மலையக தொழிற்சங்கங்கள், கட்சிகள் தங்கள் விரோதங்களை மறந்து மலையக வாழ்வுக்காக உங்களை தயார்படுத்தி கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தாக்கம் அறிமுக விழா

மலையக இளைஞர் பேரவையின் மாதாந்த வெளியீடான மலையக அரசியல், சர்வதேச செய்திகளையும் தெளிவாகத் தரும் "தாக்கம்" சஞ்சிகையின் அறிமுக விழா, கண்டி கிளையினரால் 14.10.1990 அன்று கண்டி, சிட்டிமிசன் மண்டபத்தில் நடைபெற்றது. மலையக இளைஞர் பேரவையின் கண்டிக்கிளை அமைப்பாளர் திரு. இரா.அ.இராமன் அவர்களின் வர வேற்புரையுடன் விழா ஆரம்பிக்கப்பட்டது.

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் அ.அருணாசலம் தலைமையில் இவ்விழா நடைப்பெற்றது. அவர் தனது உரையில், தமிழ் பேசும் மக்களின் குறை தீர்க்க "தமிழில் அரசியல், சமூக, பொருளாதார சர்வதேச துறைகள் சார்ந்த விடயங்களைத் தாங்கி வருவதற்கோர் இதழ் இல்லை என்னும் கருத்தை "தாக்கம்" நிறைவு செய்யும் என்று எதிர்பார்க்கலாம்" என்றார். அவர் தொடர்ந்து பேசுகையில்:-

"ஆங்கில சஞ்சிகைகள் போன்று இதுவும் வளர்ச்சியடைய வேண்டும். தமிழ் இலக்கியம் வளர தமிழ் மக்களிடையே தமிழார்வம் துளிர்க்க வேண்டும். தமிழ் அன்னையை தமிழ் மைந்தனே பேணிகாக்க வேண்டும். தமிழின் பால் பற்றுதலும் பாசமும் கொண்டு தமிழைத் தாங்கி வரும் நூல்களைத் தமிழினம் வாழ்விக்க முன்வர வேண்டும். இந்த வழியில் இன்றைய சமுதாயத்தின் தேவைகளை உணர்ந்து வெளிவரும்" தாக்கம்" இதழை நாம் கைத்தூக்கி விடவேண்டும் என்றார்.

திரு. எஸ். ஜீவராஜ் தனது அறிமுகவுரையில், தாக்கம் சஞ்சிகை பற்றியும், அதன் உள்ளடக்கத்தைப் பற்றியும்,தாக்கம் சஞ்சிகையின் நோக்கத்தைப் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். இதனை அடுத்து மலையக சமூக, பொருளாதார ஆய்வகத்தின் தலைவர் திரு. ஆர் பார்த்திபன் ஆய்வுரை நிகழ்த்தும் போது தாக்கம் சஞ்சிகையை விரிவாக ஆராய்ந்தார். அதிலுள்ள ஒவ்வொரு ஆக்கங்களையும் விமர்சித்தார். அவர் தனது உரையில் 'தரம் கூடியதாக உள்ளப்படியினால் சாதாரண மக்களுக்குப் புரியும் நடையிலும், அவர்களது சூழலில் உள்ள குறைகளை வெளிச்சத்துக்கு கொண்டு வருவதாகவும் அமைய வேண்டும்" என்றார்.

அடுத்து ஆய்வுரை செய்த பிரபல சட்டத்தரணியும் ஆங்கில, தமிழ் இலக்கிய ஆர்வலருமான எஸ். எஃப். ஸவாஹிர் அவர்கள் தாக்கம் சஞ்சிகை பற்றி நீண்டதொரு ஆய்வினை செய்தார்.

இவ்விழாவில் பிரதம அதிதிகளாக, சத்தியோதய முதல்வர் வண.பிதா போல் கெஸ்பர்ஸ் அவர்களும், அகில இலங்கை சமாதான நீதவானும், மத்திய மாகாண இந்துமா மன்றத் துணைத் தலைவருமான திரு. நாகலிங்கம் இரத்தினசபாபதி ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

அடுத்த, "எட்டடிக் குச்சிக்குள்ளே பத்து உசுருக எப்படி வாழுமுங்க?" என்ற தலைப்பில் கவியரங்கு நடைபெற்றது. கவிஞர் கண்டி இராமசந்திரன், எஸ்.பி செல்வராஜும் கவிதை வாசித்தார்கள்.

அதனையடுத்து மலையக இளைஞர் பேரவைப் பொதுச் செயலாளரும், "தாக்கம்" சஞ்சிகையின் ஆசிரியருமான திரு. வி.எல். பெறைரா அவர்கள் பதிலுரை ஆற்றினார். இறுதியாக கவிஞரும், மக்கள் கலை இலக்கியப் பேரவையின் தலைவருமான முத்துசம்பந்தர் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரப் பரவலாக்க முன்னெடுப்புக்களும் மலையகத் தமிழ் மக்களும்

இரா.ரமேஸ்

## I. அறிமுகம்

முப்பதாண்டுக்கால நீண்ட வரலாற்றைக் கொண்ட சிவில் யுத்தம் முடிவடைந்துள்ள அதேநேரம் அரசியல் தீர்வினை நோக்கிய பயணமும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. சகல சமூகத்தவர்களையும் தேசிய அரசியல் நீரோட்டத்துக்குள் அரவணைத்து அரசியல் அதிகாரமிக்க ஆட்சி முறை ஒன்றினை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டிய பொறுப்பு அரசிற்கு ஏற்பட்டுள்ளது. மறுபுறமாக, அண்மைகால அரசியல் மாற்றங்களும் தேசிய சிறுபான்மை இன எழுச்சியும் தேசிய அரசியலில் அவர்களுக்குள்ள முக்கியத்துவமும் சிறுபான்மை இன உரிமை போராட்டங்களும் நாகரீகமான அரசியல் தீர்வு ஒன்றிற்கான அதிகரித்த தேவையினை ஏற்படுத்தியுள்ளது என்பது வெளிப்படையான யதார்த்தமாகும். இத்தகையதோர் பின்புலத்திலேயே இலங்கையின் நிருவாக ஆட்புலத்துக்குள் அதிகாரப் பரவாலாக்கம் குறித்த கருத்தாடல்கள் மிக அதிகமாகவே இடம்பெற்று வருகின்றன. ஒருபுறம் சர்வ கட்சி பிரதிநிதிகள் குழுவும் மறுபுறமாக அரசியல் கட்சிகளும், சிவில் சமூக அமைப்புகளும் இப்பணியில் ஆழமாக ஈடுபட்டு வருவதினை கண்டுக்கொள்ள முடிகின்றது.

13 வது சீர்திருத்தத்தின் மூலம் அரசியல் தீர்வினை முன்வைப்பதில் அரசாங்கம் அதிக கரிசணைக் காட்டி வருகின்றது. பிரிதொரு வகையில் கூறுவதாயின் தற்போதைய மாகாண சபை முறையில் காணப்படும் குறைபாடுகளை களைந்து அதனூடாக அரசியல் தீர்வினை முன்வைப்பதே அரசாங்கத்தின் உள்ளார்ந்த நோக்கமாகும். எவ்வாறாயினும், 1980 களில் அரசியில் தீர்வு குறித்து நிலவிய சூழமைவுக்கும் தற்போது உள்ள சூழமைவுக்குமிடையே பிரமாண்டமான வேறுபாடுகள் உண்டு. இன்று மோதல் தீர்வு என்பது பல்பரிமாணம் பெற்றுள்ளதுடன் அரசியல் தீர்வில் இலங்கைத் தமிழர்களை மாத்திரமின்றி இந்திய வம்சாவழித் தமிழர்களையும் முஸ்லிம்களையும் உள்வாங்க வேண்டிய தேவையொன்று காணப்படுகின்றது. சகல சமூகத்தினரதும் அரசியல் அபிலாசைகளையும் எதிர்பார்ப்புகளையும் கருத்துகளையும் மனங்கொண்டு அதிகாரப் பரவலாக்கத்தை ஏற்படுத்தவேண்டிய தேவையொன்று காணப்படுவதுடன் மறுபுறமாக, சகல சிறுபான்மை அரசியல் கட்சிகளும் இத்தகையதோர் நிலைக்கு தம்மை தயார் படுத்தவேண்டிய அவசரத் தேவையொன்றும் காணப்படுகின்றது.

பலரின் கருத்துப்படி இத்தகையதோர் தீர்வு பூரணத்துவமிக்க ஒரு தீர்வாக அமையும் என்றும் நாட்டில் ஆழமாக வேரூண்டியுள்ள இன ரீதியிலான கசப்புணர்வினையுயம் பகைமையினையும் களைந்து இனங்களுக்கிடையில் கூடிவாழும் எண்ணத்தை ஏற்படுத்த வழிவகுக்கும் எனவும் பேசப்படுகின்றது.

எனவே, புதிய அரசியல் தீர்வானது இந்நாட்டில் வாழும் சகல இனக் குழுக்களும் தமது பாரம்பரியத்தை, கலாசாரத்தை பேணிப்பாதுகாப்பதற்கான சூழலையும் தமது அரசியல் தலைமைகள் மூலம் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் தமக்கென ஒரு அரசியல் அலகினையும், கட்டமைப்பினையும் கொண்டிருக்கவும் அதனை நிர்வகிக்கவும் வழிசெய்வதாக அமைய வேண்டும். இத்தகைய எல்லா ஏற்பாடுகளும் இந்நாட்டில் சுமார் 200 வருடங்களுக்கு மேலாக பரந்தும் செறிந்தும் வாழ்ந்து வருகின்ற மலையகத் தமிழ் மக்களுக்கும் கிடைக்க வழிசமைக்க வேண்டும்

ஆகவே, இக்கட்டுரையானது இலங்கையின் அரசியல் தீர்வுக்காக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அதிகார பரவலாக்கல் ஏற்பாடுகளில் மலையகத் தமிழ் மக்களின் வகிபங்கு, அபிலாசைகள், எதிர்காலம் மற்றும் எதிர்பார்ப்புக்கள் ஆகியவற்றை ஆய்வு செய்வதாக அமைந்துள்ளது.

## II. கடந்தகால அதிகார பரவலாக்க முன்னெடுப்புக்களும் மலையகத் தமிழ் மக்களும்:

உண்மையில் சுதந்திரத்தின் பின் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் பல தடவைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆயினும் இவற்றில் மலையகத் தமிழ் மக்கள் ஒரு பொருட்டாக கருதப்படவில்லை. குறிப்பாக திம்பு பேச்சுவார்த்தையின் போது இம்மக்களின் பிரஜாவுரிமைப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என வடகிழக்கு அரசியல் தலைமைகள் அழுத்தங்களை முன்வைத்தன. சுதேசிய அரசியல்வாதிகள் பிரஜா உரிமை விடயத்தில் கரிசணை செழுத்துவதற்கு இத்தகைய அழுத்தங்கள் வழிசெய்தது. ஆயினும் இக்காலக் கட்டத்தில் மலையகத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் மற்றும் அதிகார பகிர்வுக் குறித்த கருத்தாடல்கள் இடம்பெறவில்லை.

இலங்கையில் அரசியல் அதிகாரத்தை பரவலாக்குவதற்கான பிரயத்தனங்கள் 1957ம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தத்துடன் ஆரம்பித்தது. அதனைத் தொடர்நது 1965ம் ஆண்டு டட்லி - செல்வா ஒப்பந்தமும், 1981ம் ஆண்டு மாவட்ட அபிவிருத்தி சபையும் 1987ம் ஆண்டு மாகாண சபை முறையும் நல்ல உதாரணங்களாகும். இவற்றைவிட 1991ம் ஆண்டு பிரதேச சபை முறையும் அறிமுகம் செய்யப்பட்டது. அத்துடன், 1994ம் ஆண்டு புதிய அரசியல் யாப்பு வரையும் முஸ்தீபுகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதனோடு இணைந்த வகையில் அதிகார பரவலாக்க முன்னெடுப்புகளும் இடம்பெற்றன. இங்கு சுவாரஸ்யமான விடயம் யாதெனில் மேற்கூறிய எந்தவொரு ஏற்பாட்டிலும் மலையகத் தமிழ்கள் குறித்த கருத்தாடல்கள் இடம்பெறவில்லை என்பதாகும். மாகாண சபைகள் பெருந்தோட்டப் பகுதிகளில் சேவை செய்வது குறித்த எத்தகைய சட்ட விதிகளும் இடம்பெறவில்லை என்பதுடன் மறுபுறமாக இம்மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் புதிய பிரதேச சபைகளும் உருவாக்கப்படவில்லை.

தேர்தல் தொகுதி எல்லைகளை மீள் நிர்ணயம் செய்த சந்தர்ப்பங்களில் மலையக தமிழர்களின் அரசியல் பலத்தை, அரசியல் பிரதிநித்துவத்தை சிதைவடையச் செய்யும் நோக்குடன் சிங்கள மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களுடன் மலையக தமிழர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். நுவரெலியா- மஸ்கெலியா மற்றும் அம்பகமுவ தேர்தல் தொகுதிகளைத் தவிர வேறு எந்த தேர்தல் தொகுதிகளிலும் இம்மக்கள் பெரும்பான்மையாக இல்லை. கண்டி, பதுளை, கேகாலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் மலையக தமிழர்கள் செறிந்து வாழ்ந்தாலும் அவர்களுக்கென ஒரு தேர்தல் தொகுதியில்லை. ஆகையால் இப்பிரதேச மக்களின் அரசியல் பலம் படிப்படியாக வீழ்ச்சியடைந்து வருவதுடன் அரசியல் ரீதியாக எழுச்சி பெற முடியாத நிலையும் தோற்றம் பெற்றுள்ளது.

“உண்மையில் இலங்கையில் நிர்வாக அதிகாரத்தை பன்முகப்படுத்தும் பிரயத்தனங்கள் ஓரளவு வெற்றியளித்துள்ளன. இதன் விளைவாக மாவட்ட செயலகங்களும் பிரதேச செயலகங்களும் விஸ்தரிக்கப்பட்டன. ஆயினும் இத்தகைய ஏற்பாடுகள் மலையக தமிழர்களை முழுமையாக உள்வாங்கவில்லை. நிர்வாக சேவையினைப் பெற்றுக்கொள்வதில் தொடர்ந்தும் பல அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். நுவரெலிய மாவட்டத்தில் சுமார் 3,91,374 மலையக தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். ஆயினும் இங்கு செயற்படுகின்ற பிரதேச செயலகங்கள் இம்மக்களின் தேவைகளை முழுமையாக உள்வாங்கும் வகையில் காணப்படவில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இதற்கப்பால் அரசியல் அதிகாரத்தை பரவலாக்கும் முயற்சி பாரிய வெற்றி தரவில்லை என்பது பொதுவான கருத்தாகும். இதற்கு கடந்த கால அனுபவங்கள் சிறந்த உதாரணமாகும். எவ்வாறாயினும் மலையக தமிழ் மக்கள் மாகாண சபை, மற்றும் உள்ளுராட்சி அதிகார சபைகளின் கீழ் உள்வாங்கப்பட வில்லை என்பது குறிப்பிடதக்க விடயமாகும். இதன் விளைவாக இவ்வமைப்புகளின் மூலம் மேற்கொள்ளப்படும் சகல அபிவிருத்தி பணிகளையும் உரிமைகளுடன் பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதுடன் இச்சமூகத்தின் குறைவிருத்திக்கும் இது ஒரு முக்கிய காரணியாக அமைந்துள்ளது.

ஆகவே, இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்து பேசப்படும் இத்தருணத்தில் இம்மக்களின் எதிர்காலம், அரசியல் அபிலாசைகள், எதிர்பார்ப்புகள் குறித்து அதிக கரிசனை காட்ட வேண்டியுள்ளது.

19ம் நூற்றாண்டிலிருந்து சுமார் 200 வருடங்கள் காடாய் கிடந்த மலைப்பிரரேதசங்களை செம்மையாக்கி அதன் மூலம் நாட்டின் பொருளாதார கட்டுமாணத்தில் முக்கிய பங்குதாரர்களாக செயலாற்றி வருகின்றார்கள். வரலாற்று ரீதியாக மலைநாட்டின் புவியியல் பரப்பை மையப்படுத்தி பரம்பரை ரீதியாக வாழ்ந்து வருவதுடன், அதனை தமது வாழ்விடமாகவும் தாயமாகவும் கொண்டுள்ளனர். ஏனைய இனக்குழுக்களிலிருந்து பெரிதும் வேறுபட்டதும் தனித்துவமானதுமான கலாசார விழுமியங்களையும், பண்பாட்டு பாரம்பரியங்களையும், மரபுகளையும் பேச்சு மொழியையும், பொருளாதார கட்டமைப்பினையும் கொண்டுள்ளனர். நாட்டின் மொத்த சனத்தொகையில் இவர்களின் பங்கு 5.1 வீதமாகும். "இவர்கள் நுவரெலியாவில் செறிந்தும் (55.9%) ஏனைய மாவட்டங்களில் செறிந்தும் பரந்தும் வாழ்ந்து வருகின்றனர்."

வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் இம்மக்கள் மலையக தமிழர். இந்திய வம்சாவழித் தமிழர் என இனங்காணப்படுவதுடன் இவர்களது தாயகப் பிரதேசம் மலையகம் எனவும் அடையாளப்படுத்தப்படுகின்றது. இம்மக்களின் இத்தகைய உணர்வுளை, எதிர்பார்ப்புக்களை, நம்பிக்கைகளை கவனத்திற் கொண்டு தேசிய சர்வதேசிய அங்கீகாரத்தை நாடும் நோக்கத்துடன் அரசியல் தீர்வு குறித்த பேச்சுக்களிலும் அதிகார பரவலாக்கம் குறித்த பேச்சுகளிலும் பங்கேற்க வேண்டும். நாட்டில் தற்போது காணப்படும் சூழலில் மலையகத் தமிழர்களின் எதிர்காலம் குறித்து ஆழமாக சிந்திக்க வேண்டியுள்ளது. இச்சமூகத்துடன் தொடர்புடைய சகல தரப்பினரும் இது குறித்து பொது கலந்துரையாடல்களில் ஈடுபட வேண்டும்.

## III. சமகால அதிகார பரவலாக்க முன்னெடுப்புகளும் மலையகத் தமிழ் மக்களும்

உண்மையில் இம்மக்கள் ஒரு குறிப்பிட்ட நிலப்பிரதேசத்தில் செறிவாக இன்மையால் அது அதிகார பரவலாக்கத்திற்கு சிக்கலாக அமையலாம் என்பது பலரின் கருத்தாகும். "ஆயினும் தற்கால உலகில் இவ்வாறு பரந்தும் செறிந்தும் வாழும் சிறுபான்மை இனக்குழுக்ளுக்காக நிலத்தொடர்பற்ற அதிகார பரவலாக்க (Non territorial power devolution) ஏற்பாடுகள் பினபற்றப்படுகின்றன. அத்துடன், தற்கால உலகில் தேசிய (National) மட்டத்திலும் பிராந்திய (regional) மட்டத்திலும் உள்ளுர் (local) மட்டத்திலும் அதிகார பரவலாக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன." இலங்கையிலும் இததகையதொரு பொறிமுறையே பேசப்பட்டு வருகின்றது. மலையக தமிழ் மககளைப் பிரதிநிதித்துவ படுத்தி அதிகார பரவலாக்கல் பேச்சுகளில் ஈடுபடுபவர்கள் பின்வரும் விடயங்களை மனங்கொள்வது அவசியமாகும்.

1. மலையக தமிழ் மக்களை தேசிய இனமாக அங்கீகரித்தல் (தமது இன, மத, வரலாற்று அடையாளங்களை பாதுகாத்துக் கொண்டு வாழ வழிசெய்தல்)
2. சமூக, பொருளாதார ரீதியாக பின்தங்கிய சமூகம் என்பதை ஏற்றுக்கொள்ளுதலும் அதற்கான கொள்கை திட்டங்களை வகுத்தலும்.
3. இலங்கையின் பொருளாதார கட்டுமானத்தில் முக்கி பங்குதாரரகள் என்பதை ஏற்றுக்கொள்ளல்.
4. மனித அபிவிருத்தி மற்றும் சமூக குறிகாட்டிகள் ஆகியவற்றில் காணப்படும் எதிர்மறையான வளர்ச்சியினை சரிசெய்வதற்கு கொள்கை திட்டங்களை வகுத்தல்.
5. சிறுபான்மை இனங்களுக்காக தேசிய ஆணைக்குழு ஒன்றினைத் தாபித்தல் (National Minority Commission).
6. சிறுபான்மையினர் நலக்காப்பீடுகளை (minorities safequards) ஏற்படுத்தி அவற்றை உத்தரவாதப்படுத்துதல்.
7. அரசியல் பிரதிநிதித்துவத்தை பாதுகாத்தல் மற்றும் ஒதுக்கீட்டு அசனங்களை (reserved seats) வழங்க ஏற்பாடு செய்தல் (அரசியல் பிரதிநிதித்துவம் இல்லாத மாவட்டங்களை மையப்படுத்துதல்)
8. சுதந்திர நீதித்துறை ஒன்றினை உருவாக்குதல்.
9. மலையக தமிழ் மக்களின் கலாசார அடையாளங்களை பாதுகாப்பதற்காக தேசிய கலாசார சபையொன்றினை (national cultural council) உருவாக்குதல்.
10. அரசு மதச்சார்பற்றது என்பதை உறுதிசெய்தல்.
11. நிர்வாகத்தை பண்முப்படுத்தல் மற்றும் மலையகப் பிரதேசங்களில் புதிய பிரதேச செயலகங்களை உருவாக்குதல்
12. சீரான மற்றும் சமமான அதிகார பரவலாக்கம்
13. "சிறுபான்மையினருக்கான தடுப்பானை அதிகாரம்" (minority veto)

புதிய அரசியல் தீர்வு திட்டம் மற்றும் அதிகார பரவலாக்க யோசனைகள் முன்வைக்கப்படும் போது மேற்கூறிய விடயங்களை மனங்கொள்வது அவசியமாகும். அத்துடன் கடந்த கால படிப்பினைகளையும் பாடமாக கொண்டு செயலாற்ற வேண்டும். குறிப்பாக "சுதந்திரதத்தின் பின்னர் மலையக சமூகத்தின் இருப்பிற்கும் பாதுகாப்புக்கும் ஏற்பட்ட அச்சுருத்தல்கள் இன ஒடுக்கல் நடவடிக்கைகள், பிரஜாவுரிமை பறிப்பு, நாடற்றோர் என்ற முத்திரையுடன் மூன்று தசாப்த காலம் அனுபவித்த துன்பங்கள், மாறாத வடுக்கள், இனப்படுகொலைகள், கட்டமைக்கப்பட்ட இனக்கலவரங்கள், தோட்டக்காணி அபகரிப்பு, திட்டமிட்ட குடியேற்றங்கள், இலவசகல்வியில் புறக்கணிப்பு, அரச இயந்திரத்துக்குள் உள்வாங்கப்படாமை, பொதுநிர்வாகத்தில் ஓரங்கட்டப்பட்டமை, தேசிய அபிவிருத்தியில் புறககணிப்பு, அபிவிருத்தி திட்டங்கள் என்ற பெயரில் மேற்கொள்ப்பட்ட இனசுத்திகரிப்பு, நிர்வாக உள்ளுராட்சி எல்லைகளை மாற்றியமைத்து மேற்கொண்ட இன அழிப்பு முயற்சிகள் ஆகிய அனுபவங்ளை மனங்கொண்டு செயலாற்ற வேண்டும். இத்தகைய அசாதாரண சூழ்நிலைகள் எதிர்காலத்தில் இடம்பெறாதிருப்பதற்கான சரியான மனிதபாதுகாப்பு பொறிமுறையொன்றினை உருவாக்க வேண்டும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக தமிழ் மக்கள் அரசியல் ரீதியாக சிந்திக்கவும் எழுச்சி பெறவும் சரியான தருணம் ஏற்பட்டுள்ளது. இன்று அதிகார பரவலாக்கம் குறித்த கருத்தாடல்களில் மலையக அரசியல் கட்சிகள் பங்கேற்கின்றன. இவர்கள் தூரநோக்கு சிந்தனைகளுடன் தமது முன்மொழிவுகளை முன்வைக்க வேண்டும். ஐக்கிய இலங்கைக்குள் தனித்துவம் மிக்க இனமாகவும் அரசியல் அதிகாரமிக்க சமூகமாகவும் மலையக தமிழ் மக்கள் வாழும் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். அரசியல் தீர்வு குறித்து கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக செயலாற்றி வரும் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவில் பங்கேற்று வரும் மலையக அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஒருசில சிறப்பான முன்மொழிவுகளை தூரநோக்க சிந்தனையுடன் முன் வைத்துள்ளார்கள். "குறிப்பாக, மலையக தமிழர்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொள்வதற்கான கருத்தொருமைப்பாடு சகல அரசியல் கட்சிகளாலும், ஏற்றுக் கொள்ளப் பட்டிருப்பதாக அறிய முடிகிறது. அத்துடன் இம் மக்களுக்காக தனியான நிருவாக அலகொன்றை அமைப்பது குறித்தும் பேசப்பட்டு வருகின்றது".

***அரச அலுவலகங்களில் மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரிதொரு பிரச்சினையே மொழி பிரச்சினையாகும்.***

***மலையக தமிழ் மக்கள் அரசியல் ரீதியாக சிந்திக்கவும் எழுச்சி பெறவும் சரியான தருணம் ஏற்பட்டுள்ளது. இன்று அதிகார பரவலாக்கம் குறித்த கருத்தாடல்களில் மலையக அரசியல் கட்சிகள் பங்கேற்கின்றன. இவர்கள் தூரநோக்கு சிந்தனைகளுடன் தமது முன்மொழிவுகளை முன்வைக்க வேண்டும்.***

உண்மையில், இத்தகைய ஏற்பாடுகள் பெரிதும் வரவேற்கத் தக்கதாகும். இவற்றினை நடைமுறைப் படுத்துவதில் அரசின் உத்தரவாதம் பெரிதும் அவசியமாகும். இதனையும் தாண்டி இலங்கை நிர்வாகப் பொறிமுறைக்குள் இம்மக்கள் முழுமையாக உள் வாங்கப்படுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இவை இம்மக்கள் தேசிய நீரோட்டத்துக்குள் உள்வாங்கப்படுவதற்கு மிகவும் அடிப்படையாகும். மத்திய அரசின் மூலமும் மாகாண மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகளின் மூலமும் இம்மக்களுக்கு சென்றடைய வேண்டிய சேவைகள் குறித்து சட்ட ரீதியான ஏற்பாடுகள் வறையப்பட வேண்டும்.

குறிப்பாக கல்வித்துறையில் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியத் தேவை காணப்படுகின்றது. இது விடயத்திலும் மத்திய மற்றும் உள்ளூர் அரசாங்கங்களின் கடப்பாடுகள் குறித்து பேசப்பட வேண்டும். மலையக சமூகத்தை பொருத்தவரை தனியான பல்கலைக்கழகம் ஒன்றுக்கான நீண்ட கால இடைவெளியொன்று காணப்படுகின்றது. இச்சமூகத்தின் ஒட்டு மொத்த அபிவிருத்தியிலும் இத்தகைய தொரு பல்கலைக்கழகம் பாரிய பங்காற்றும் என்பதில் ஐயமில்லை. மறுபுறமாக, பல்கலைக்கழக அனுமதி விடயத்தில் ஒரு விசேட கோட்டா முறையினை அல்லது அனுமதிக் கொள்கைகள் குறித்தும் சிந்திக்க வேண்டும். இவை அரசியல் திட்ட ரீதியாகவும் உறுதிசெயய்யப்பட வேண்டும்.

இதற்கப்பால் சமூக பாதுகாப்பு மிகவும் அடிப்படையானதாகும். இன்று இம்மக்கள் பல மனித பாதுகாப்பு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருககின்றனர். "பெரும்பான்மை மக்கள் செறிந்து வாழும் மாவட்டங்களில் இன ரீதியான வன்முறைகளுக்கு உட்பட்டு வருகின்றனர்". மறுபுறமாக தென் மாகாணத்தில் வாழும் மலையக தமிழர்கள் தமது இன அடையாளத்தை இழந்து வருவதுடன் தொடர்ந்தும் அச்சத்துடன் வாழ்கின்றனர். ஏதோவொருவகையில் விரும்பியோ விரும்பாமலோ பிற இனத்தின் அடையாளத்தை ஏற்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலை தொடருமாயின் தென்மாகாணத்தில் மலையக சமூகத்தின் இன அடையாளங்கள் அழியும் அபாயம் ஏற்படலாம். அத்துடன், அரசியல் ரீதியாக இம்மக்கள் எழுச்சி பெறுவதனை தடை செய்யக்கூடிய அம்சமாகவும் இது அமைந்துவிடும். ஆகவே இத்தகைய விடயங்கள் குறித்தும் அதிகார பரவலாக்க பேச்சுக்களின் போது கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

பிரிதொரு முக்கிய விடயம் யாதெனில் மலையக மக்களின் மனித உரிமைகள் பிரச்சினையாகும். "விசேடமாக தோட்டத்துறைக்கு வெளியில் புலம்பெயர்ந்து தொழில் செய்து வரும் இளைஞர் யுவதிகள் தொடர்ந்தும் பல மனித உரிமை பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். நாட்டில் பதட்ட சூழ்நிலை ஏற்படும் போது எதேச்சையாக கைது செய்யப்படுவதுடன், நீண்ட காலம் காரணமின்றி தடுத்து வைக்கப் படுகின்றனர். சில சமயங்களில் சித்திரவதைக்கும் உட்படுகின்றனர். அதிகமான கைதுகள் பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் அவசரகால சட்டங்களின் கீழ் இடம்பெறுகின்றன. இவை அரசியல் திட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை வெகுவாகவே பாதித்து விடுகின்றன". ஆகையால், இத்தகைய அடிப்படை பிரச்சினைகளுக்கான மாற்று வழிமுறைகள் குறித்தும் சிந்திக்க வேண்டும்.

விசேடமாக, தொழில் வாய்ப்பு சம்பந்தபட்ட விடயங்களிலும் கரிசணை காட்ட வேண்டும். மத்திய மற்றும் மாகாண சபைகளின் கீழ் வழங்கப்படும் அரசத் தொழில்களில் இன விகிதாசாரத்தின் அடிப்படையில் தொழில் வாயப்புக்களை பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் சாதாரண கல்வி நிலையினைக் கொண்டுள்ள இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பினை பெற்று கொடுக்கும் நோக்கோடு மலையகத்தை அண்டிய பிரதேசங்களில் கைத்தொழில் பேட்டைகளை அமைத்தல் ஆடை தொழிற்சாலைகளை அமைத்தல் வாழ்க்கை தொழில் பயிற்சி லையங்களை விஸ்தரித்தல், சுயதொழில்களை ஊக்குவவித்தல் ஆகியனவும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

அரச அலுவலகங்களில் மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரிதொரு பிரச்சினையே மொழி பிரச்சினையாகும். அதிகமான அரச அலுவலகங்களில் சிங்கள மொழி பேசும் அதிகாரிகள் பணியாற்றி வருவதுடன் அவர்கள் தமிழ் மொழியில் பேசக்கூடிய ஆற்றல் உள்ளவர்களும் இல்லை. சுருங்கக்கூறின் தமிழ் மொழியில் கருமமாற்றும் அரச அதிகாரிகள் மலையக பிரதேசங்களில் மிகக்குறைவாகும். இதனால் அரசசேவையினைப் பெற்றுக் கொள்வது பெரும் சவாலாகியுள்ளது. பிரிதொரு வகையில் கூறுவதாயின் தாய் மொழியில் அரசக் கருமங்களை ஆற்றுவதற்குள்ள உரிமையினை மட்டுப்படுத்துவதாக அமைந்துள்ளது. ஆகையால் இருமொழிக் கொள்கையினை சீரான முறையில் ஆமுல் படுத்துவது குறித்தும், தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் தமிழ் மொழியில் பேசக்கூடிய அதிகாரிகளை நியமிப்பது குறித்தும் தமது முன்மொழிவுகளில் குறிப்பிடல் மிகவும் அவசியமாகும். "உதாரணமாக பதுளை மாநகர சபையில் மொத்தமாக 450 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். இதில் ஒருவர் மாத்திரமே தமிழ் மொழியில் பேசக்கூடியவராவர். ஹட்டன் பொலிஸ் நிலையத்தில் மொத்தமாக 250 பொலிசார் உள்ளனர். இதில் 10-20 பேர் வரையிலேயே தமிழ் பேசக்கூடியவர்கள். கண்டி பதிவாளர் நாயக காரியாலயத்தில் மொத்தமாக 60 பேர் பணி புரிகின்ற போதும் ஒருவரேனும் தமிழ் மொழி பேசக்கூடியவர் அல்ல. நுவரெலியா ஆதார வைத்தியசலையில் மொத்தமாக 450 பேர் பணி புரிகின்றனர் ஆயினும் இதில் 85 பேர் மாத்திரமே தமிழ் மொழியில் பேசக்கூடியவர்கள். அதேபோல இரத்தினபுரி உயர் நீதிமன்றில் 60 பேர் பணிபுரிகின்றனர். இதில் ஒருவர் கூட தமிழ் மொழியில் பணியாற்ற கூடியவர் அல்ல" ஆகவே மொழி விடயத்தில் இத்தகைய அம்சங்கள் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**இளைஞர்கள்**
**அரசியலை அறிந்திருக்க வேண்டியது முக்கியம் ஆனால் அரசியல் வாதியாக இருக்க கூடாது**
**MGR**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## IV. முடிவுரை

எல்லாவற்றுக்கும் அப்பால் 13 வது சீர்திருத்தத்திலுள்ள குறைகளை களைய அழுத்தங்களை கொடுக்க வேண்டும். குறிப்பாக அதன் தோல்விக்கு காரணமாகவுள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். மத்திய அரசின் கட்டுபாடு இன்றி போதிய நிதியுடன், அதிகாரத்துடன் சுதந்திரமாக செயற்பட கூடிய இடமாக மாகாண சபைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். இத்தகைய விடயங்களை மேற்கொள்ளும் போது 13வது சீர்திருத்தத்தில் மலையக தமிழ் மக்களுக்கான சட்ட ரீதியான ஏற்பாடுகள் குறித்தும் சிந்திக்க வேண்டும். இன்னொரு வார்த்தையில் கூறுவதாயின், 13 வது சீர்திருத்தத்தினை முழுமையாக அமுல்படுத்தி அதனூடாக தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கம் அரசாங்கத்திடம் இருப்பதனால் அதற்கேற்ற வகையில் மலையக அரசியல் கட்சிகள் தம்மை தயார் படுத்த வேண்டும். மாகாண சபைக்கு இன்று வழங்கப்படாத அதிகாரங்கள் மற்றும் மேலதிக அதிகாரங்கள் வழங்கப்படும் போது அதில் மலையக மக்களின் அபிலாசைகள் குறித்தும் உரிமைகள் குறித்தும் சரியான முன்மொழிவுகளை சமர்பிக்க வேண்டும். இப்பணி மலையக அரசியல் தலைமைகளுக்கு மாத்திரமன்றி அது சார்ந்த சிவில் அமைப்புகளுக்கும், புத்தி ஜீவிகளுக்கும் உண்டு. இவர்கள் யாவரும் ஒன்றிணைந்து இத்தகையதொரு முன்மொழிவினை ஒத்தக்கருத்துடன் தயாரிக்க வேண்டும்.

இதுவரை பார்த்த விடயங்களை உள்வாங்கியதாக அம்முன்மொழிவு அமையுமாயின் அது இம்மக்களின் சுபீட்சமான வாழ்க்கைக்கு பெரிதும் புத்தூக்கம் அளிக்கும். இதற்காக பொது கலந்துரையாடல்களையும் பயற்சி பட்டறைகளையும் நடாத்தி புதிய ஆலோசனைகளையும் கருத்துகளையும் பெற்றுக்கொள்ள முடியும். சகல தரப்பினரையும் உள்வாங்கிய வகையில் கருத்தொருமைபாட்டுடன் ஒருங்கிணைந்த அணுகுமுறையினைப் (Holishtic approach) பயன்படுத்தி ஒரு பொதுவான முன்மொழிவினை சமர்ப்பிக்கலாம். அதிகாரப் பரவாலாக்கம் குறித்து பேசும்போது பிரிதொரு முக்கிய விடயத்தினை குறிப்பிடுவது பொருத்தமாகும். அதாவது சமூக பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினர்களுக்கு சில நாடுகளில் அம்மக்களின் சமூகப் பொருளாதரா நிலையினை மேம்படுத்துவதற்காக அரசியல் அமைப்பு மற்றும் சட்டத்தின் முன் யாவரும் சமம் ஆகிய சட்ட ரீதியான தடைகளைத் தாண்டி சில விசேட ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக இந்தியாவில் சாதி, பரம்பரை மற்றும் தொழில் அடிப்படையில் பின்தங்கியுள்ள தலித் மக்களுக்காக நியாயமான பாரபட்சக் கொள்கையும் (policy of positive discrimination) அதேபோன்று ஒதுக்கிட்டுக் கொள்கைகளும் (reservation policies) காணப்படுகின்றன. மறுபுறமாக அமெரிக்காவில் வாழும் கருப்பின மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்காக நேரொத்த நடவடிக்கைகளும் (affirmative action) பிரித்தானியாவில் இத்தகைய பின்தங்கிய சிறுபன்மை இனக் குழுக்கழுக்காக ஒரு பக்கசார்பான கொள்கைகளும் (partial policies) காணப்படுகின்றன. ஆகவே மலையக தமிழ் மக்களும் பலதசாப்த காலமாக சமூக பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்கள் என்ற வகையில் இத்தகைய விசேட கொள்கைத் திட்டம ஒன்றினை வகுக்க வேண்டும்.

ஆகவே, தொகுத்து நோக்கும்போது தற்கால சூழமைவில் பல வாதப்பிரதி வாதங்களுக்கு உள்ளாகிவரும் அதிகாரப்பரவலாக்கம் என்ற அம்சமானது இலங்கையில் வாழும் சகல சிறுபான்மை இனங்களுக்கும் பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது என்பது வெளிப்படையான யதார்த்தமாகும். அதேவேளையில், இந்த அதிகார பரவலாக்க முன்னெடுப்புகளானது மலையகத் தமிழ் மக்களை பொறுத்தவரையில் அது அவர்களின் ஒட்டுமொத்த எதிர்காலத்தையும் தீர்மானிப்பதாக அமையும் என்பது மனங்கொள்ளவேண்டிய பிரிதொரு முக்கிய விடயமாகும். காரணம் இம்மக்களை தேசிய நீரோட்டத்துக்குள் இணைவதற்கும், அறிவு சார் பொருளாதாரத்தை நோக்கி நகர்வதற்கும் அவசியமான சட்ட ரீதியான ஏற்பாடுகளை தற்போது மேற்கொண்டுவரும் அரசியல் தீர்வுக்கான அதிகார பரவலாக்கத்தில் உட்புகுத்துவதற்கான பொருத்தமான காலம் மற்றும் வாய்ப்பு ஏற்பட்டிருப்பதனாலாகும். இத்தகையதொரு வாய்ப்பு பல ஆண்டுகளுக்குப் பின்னர், குறிப்பாக, துயர் தோய்ந்த வரலாறுகளை அனுபவித்த பின்னர் கிட்டியிருப்பது பிரிதொரு சிறப்பம்சமாகும். இவற்றைவிட இக்கட்டுரையில் கலந்துரையாடப்பட்டுள்ள வேறு பல விடயங்களும் இதனை நியாயப்படுத்துவதாக அமைந்துள்ளன. ஆகவே இத்தகைய விடயங்ளை கருத்திற் கொண்டு மலையக அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள், புத்தி ஜிவிகள் மற்றும் மலையகத் தமிழ்மக்கள் செயற்படுவது வரலாற்றுத் தேவையாகும்.

### அரசனும் ஆண்டியும்



மாவீரன் அலெக்சாண்டர் மாபெரும் வெற்றிகளை அடைந்து ஊர் திரும்பும் வழியில் ஓர் ஆண்டியைக் கண்டான். நீ யார்? என்று அதட்டிக் கேட்டான். ஆனால் அந்த ஆண்டி சிறிது அச்சமும், கவலையும் இன்றி 'நீ யார்? என்று திருப்பிக் கேட்டான். அலெக்சாண்டர் ஆத்திரமடைந்து நீ யார் என்பதை முதலில் சொல், பிறகு என்னைப் பற்றித் தெரிந்து கொள்வாய் என்றான். 'நான் உலகத்தின் சக்கரவர்த்தி என்று அமைதியாகச் சொன்னான் ஆண்டி.

அதைக் கேட்ட அலெக்சாண்டர் திகைத்து உலகத்தை வெல்ல நான் எவ்வளவோ கஷ்டப்படுகின்றேன். நீயோ மிகவும் அலட்சியமாக உலகத்தின் சக்கரவர்த்தி என்கிறாயா? இதென்ன வேடிக்கை? என்றான்.

'வேடிக்கை ஒன்றும் இல்லை. ஒரு சக்கரவர்த்தியின் லட்சணத்தைக் காணவேண்டுமானால் அவனது முகத்தைப் பார் அதில் அமைதி தாண்டவமாட வேண்டும். அச்சமோ, ஆத்திரமோ, படபடப்போ இருக்கக்கூடாது என்று ஒரு அறிஞர் கூறியுள்ளார். என் முகத்தில் இதிலெல்லாம் இருப்பதால்தான் என்னை உலகத்தின் சக்கரவர்த்தி என்று கூறிக்கொள்கிறேன் என்றான் அந்த ஆண்டி.

ஆண்டியின் முகத்தை உற்றுப் பார்த்த அலெக்சாண்டர் தன் பிழையை உணர்ந்து, ஆண்டிக்குத் தலைவணங்கினான். அறிவுக்கு முன்னே வீரம் தலைவணங்கியது.

### முத்தான ஐந்து முத்துக்கள்

அகதிக்குத் தெய்வமே துணை

அகத்தி ஆயிரங்காய் காய்தாலும் புறத்தி புறத்தியே

அக்காள் உள்ள வரையில் மச்சானுறவு.

அசைந்து தின்கிறது மாடு, அசையாமல் தின்கிறது வீடு

அதிகாரி வீட்டுக் கோழிமுட்டை குடியானவன் வீட்டு அம்மியை உடைத்ததாம்.

& & & & & & & & & & & &

**இத்தகைய விடயங்ளை கருத்திற் கொண்டு மலையக அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள், புத்தி ஜிவிகள் மற்றும் மலையகத் தமிழ்மக்கள் செயற்படுவது வரலாற்றுத் தேவையாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மறைந்தும் மறையாத மலையக உரிமைப் போரின் பின்னணி

## அமரர். பெ.சந்திரசேகரனைப் பற்றி

"(மூத்த அரசியல் பிரமுகர் பி.ஏ.காதர் லண்டனிலிருந்து)

சுயமரியாதையைப் பற்றி பேசுபவனும் தமிழனே! சுயமரியாதையை கெடுப்பவனும் தமிழனே என்பது பல வரலாற்று பரிமாணங்களிலிருந்து உணர்ந்துக் கொள்ளலாம். சுயமரியாதையை வளர்த்து வாழ்ந்த மலையக தலைவர்களும் ,ருக்கிறார்கள். கெடுத்து வாழபவர்களும் எம்மோடு இருக்கிறார்கள். சுயமரியாதையோடு பிறந்து, கொள்கை வீரனாய் வாழ்ந்து, அரசியல் தியாகியாய் மறைந்து, வாழ்ந்துக் கொண்டிருக்கும் தலைவர்களில் அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமானுக்கு பிறகு அமரர். பெ. சந்திரசேகரனே!.

உப்பு சப்பில்லாத கொள்கைவாதிகள், கொள்கைகளே இல்லாத அரசியல்வாதிகள் வாழ்ந்துக் கொண்டிருக்கும் இன்றைய மலையகத்தில், உள்ளுணர்வோடு கொள்கை வீரனாய் வாழ்பவர்கள் அரிது. கொள்கைகள் யாருக்கு வேண்டுமானாலும் தோன்றலாம். தோன்றிய கொள்கையை செயற்படுத்தி வெற்றி காண்பவனே சமூகம் ஏற்றுக் கொள்ளும் மாவீரன். அவன்தான் பெ. சந்திர சேகரன். தனியே காசுகளை விட்டெறிந்து கட்சி வாங்கும் தலைவர்கள், கட்சி வாங்கி காட்சிப்படுத்தும் தலைவர்கள், காட்சிப்படுத்தி தொண்டர் பெறும் தலைவர்கள், குவிந்துக் கிடக்கும் மலையக அரசியலில், இவர்களெல்லாம் மலையகத்தின் வழி வந்தவர்களா? என்று ஒவ்வொரு மனங்களும் ஆதங்கம் படுகின்றது. இந்நிலையில் அமரர் பெ. சந்திரசேகரன், ஒரே தமிழ் தேசியக் கொள்கையின் மூலம், மலையகத்தின் உரிமையை பெற்றுக்கொடுக்க முன்வந்தவராவார். இவரின் கொள்கைகள் வரலாற்றுப் போற்றும் சுவடுகள். பொருளாதார பூமியில், வியாபார அரசியல் வாதிகளால் காட்டிக் கொடுக்கப்பட்ட தலைவன். இன பற்றோடு வாழ்ந்தவன் அவன். அரசியலுக்கு அப்பால் மறைமுக பழிவாங்கல்கள், மறந்து விட்ட மலையக மக்கள், எல்லாம் மலையக தலைவனை இழக்க வைத்த பாவத்தையும், பழியையுமே சுமந்திருக்கிறன. இதற்கு பதில் கூறும் நாட்கள் மிக அண்மையிலே எமக்கு புலப்படும்.

இலக்கியம் காலத்தின் கண்ணாடி, அதுபோல அரசியலும் வரலாற்றின் கண்ணாடியாகவே கருதப்படுகிறது. மலையக மண்ணை நேசிக்கும், சுவாசிக்கும் எந்த ஜீவனும் அமரர். பெ. சந்திரசேகரன் என்ற அரசியல் மேதையை மறந்துவிடுவதுமில்லை, சாவதுமில்லை. இவரை மறந்து முன்னெடுக்கப்படும் புதிய அரசியல் பிரவேசங்கள், வரலாறு தெரியாத அரசியல் பயணமாகவே இருக்க முடியும். பயணங்கள் முடிவதில்லை என்பது அமரர் பெ.சந்திரசேகரன் வகுத்த கொள்கைகளுக்கு மாத்திரமே இருக்க முடியும்.! பல பழசாறுகள் என்றுச் சொல்லி கலந்துக் கொள்ளும் புதுக்கலவையல்ல மலையக அரசியல். தனக்கே தனித்துவமான சமூக, கலாச்சார பண்பாட்டினையும் கொண்டது மலையக சமூகம். இதில் மேக்கப் பூசிவரும் தலைவர்களுக்கு சேறு பூசும் காலம் வரும். அப்போது அவர்கள் ,இப்போதுபோல் இங்கிருப்பவர்களாக இருப்பதுவுமில்லை. அமரர்.பெ.சந்திரசேகரனின் வரலாற்று பயணங்கள் மலையக மக்கள் ஒவ்வொருவருக்கான அரசியல் வரலாறாகவே இருக்க முடியும். எனவே அவருடைய வரலாற்று பயணங்களின் சுவடுகளை எம்மோடு மூத்த மலையக அரசியல் பிரமுகர் பி.ஏ.காதர் பகிர்ந்துக் கொள்கிறார்.

-வித்தியார்த்தி-



திரு.பி.ஏ.காதர் அவர்கள் மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவர். 70 களில் இலங்கை ஆசிரியர் சங்கத்தில் ஈழத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகக் குரலெழுப்பியவர். இலங்கை ஆசிரியர் சங்கம் மட்டும்தான் தமிழ்ப் பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமையை வலியுறுத்தி தெற்கில் சிங்கள மக்கள் மத்தியில் பிரச்சாரம் மேற்கொண்டது. அதற்கான பிரேரணையை முன்மொழிந்தவர் பி.ஏ.காதர் அவர்களே. இலங்கையின் இடதுசாரி அரசியலில் விரல்விடு எண்ணக்கூடிய மார்க்சிய ஆய்வாளர்களில் இவரும் ஒருவர். இரண்டு தடவை சிறை சென்று ஏழு வருடங்களைச் சிறையிலேயே வாழ்ந்தவர். ஈழத் தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் அனைத்துத் தளத்திலும் தீர்க்கமான பங்கு வகித்தவர். மலையக மக்களின் போராட்டத்தை தொழிற்சங்க வாதம் என்ற தளத்திலிருந்து அரசியல் தளத்திற்கு நகர்த்திய வரலாற்றுப் பாத்திரம் காதருக்கும் உண்டு. மலையக மக்கள் குறித்தும், சுய நிர்ணய உரிமை குறித்தும் இவரின் நூல்கள் அறியப்பட்டவை. திரு.சந்திரசேகரம் அவர்களின் மறைவை ஒடுக்குமுறைக்கு எதிரான மலையக மக்களின் போராட்டங்களின் பகைப்புலத்தில் ஆய்வுசெய்கிறார்.

## பின்னணி

70 களிலே அடிக்கடி மாறிய நாட்டின் புறச் சூழலோடு சந்திர சேகரனின் வளர்ச்சியை நாம் பார்க்கவேண்டும். ஆரம்பத்தி அவர் சண்முகதாசனின் கருத்துக்களால் பாதிக்கப்பட்டார். ஆனால், பிற்காலத்தில் மலையகத்திலே தேசிய ஒடுக்குமுறை ஸ்ரீமா ஆட்சியில் உக்கிரமடைந்தபோது அதற்கு எதிராக தலைமை கொடுக்க தவறியதால் சண்முகதாசனின் கட்சி தனிமைப்பட்டுப் போனது. ஒரு புறத்தில் அவர் கல்விகற்ற ஹட்டன் வர்க்கப் போராட்ட சித்தனையின் குவிய மையமாக அமைந்திருந்த அதேசமயம் அவர் வாழ்ந்த தலவாக்கலை தேசிய இனப்பிரச்சினையின் குவிய மையமாக மாறியிருந்தது.

சந்திரசேகரனின் மனதை உறுத்திய தேசிய இனப்பிரச்சினை தொடர்பான கேள்விக்களுக்கு சண்முகதாசனின் தலைமையிடம் பதில் கிடைக்கவில்லை. அதன் பின்னர் அவரது அபிமானம் தேசியவாதிகளை நோக்கி திரும்பியது.1972 இல் அமுலாக்கப்பட்ட நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் அமைச்சர் கொப்பேகடுவ மலையகத்தில் ஆடிய கோரத்தாண்டவத்தை நாங்கள் இங்கு நினைவு கூர வேண்டும். கொப்பேகடுவின் நிலச் சீர் திருத்ததின் குழந்தை தான் சந்திரசேகரனை என ஒருவிதத்தில் கூறமுடியும்.

அவரது அரசியல் பயணம் மலையக மண் யாருக்குரியது? மலையக மக்களின் தேசிய அடையாளம் என்ன? அவர்களது இனஒடுக்கு முறைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு யாது? ஆகிய மூன்று அடிப்படை கேள்விகளுக்கு. விடைகாணும்.. தேடலில்.. இருந்து ஆரம்பமானது.

**தோட்ட தொழிலாளர் குடியிருக்கும் நிலம் கண்டிசிங்களவர்களுக்கு சொந்தமானது.**

கோப்பியும் தேயிலையும் பயிர் செய்வதற்காக அவர்கள் துரத்தியடிக்கப் பட்டு அவர்களிடமிருந்து அபகரிக்கப்பட நிலமே இது. அதனை மீட்டு சிங்களவர்களுக்கு மீண்டும் திருப்பிக் கொடுப்பதே தனது லட்சியம் என ஸ்ரீமா ஆட்சியில் அமைச்சர் கொப்பேகடுவ மேடைதோறும் முழங்கினான். சிங்கள இனவாதம் தமிழ் தோட்ட தொழிலாளருக்கு எதிரரக தூண்டிவிடப்பட்டது. அந்த சித்தாந்தத்திற்கு அடிமையான அப்பாவி சிங்கள மக்கள் கூட தமிழ் தோட்ட தொழிலாளரை ஆக்கிரமிப்பாளராகவும் தமது நிலத்தை அபகரித்த கொள்ளைக் காரர்களாகவும் கருதத் தொடங்கினர். அவர்களை அடித்துத் துரத்திவிட்டு "தமக்குச் சொந்தமான தமது மூதாதையரிடமிருந்து அபகரிக்கப்பட்ட நிலத்தை மீட்டெடுப்பது தமது தேசிய கடமை" என நம்பத் தொடங்கினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இதன் விளைவாக சிங்கள கடையார்களால் பூண்டுலோயா பகுதியிலிருந்த சில தோட்டங்களிலிருந்து தமிழ் தோட்ட தொழிலாளர் ஓரிரவுக்குள் அடித்து விரட்டப்பட்டனர். கம்பொல பகுதியிலிருந்த டெல்டா சங்குவாரி தோட்டங்களில் தி.மு. ஜயரத்னவின் கடையர்களால் தமிழ் தோட்ட தொழிலாளர்கள் வாழ்ந்த லயன்கள் தீக்கிரையாக்கப்பட்டன. நடு தெருவிலே ஓட்டாண்டிகளாய் அவர்கள் தூக்கி எறியப்பட்டனர். வாழ்ந்த வீட்டையும் செய்த தொழிலையும் கண்மூடி திறப்பதற்குள் பறிகொடுத்துவிட்டு அவர்கள் வீதியெங்கும் பிச்சை எடுத்துத் திரிந்தனர் தொண்டமானுக்கு சொந்தமான பல தேயிலைத் தோட்டங்கள் கூட தேசிய மயம் என்ற பெயரில் பறித்தெடுக்கப்பட்டன. மலையகமெங்கும் பதற்றமும் பீதியும் அராஜகமும் தலைவிரித்தாடியது.

இதன் உச்சகட்டமாக அப்போதுதான் அரசியலில் பிரவேசம் செய்திருந்த ஸ்ரீமா பண்டாரநாயக்கவின் மகன் கொப்பே கடுவையின் மருமகன் அனுர பண்டாரநாயக்க அடுத்த தேர்தலில் நுவரெலிய மஸ்கெலிய தேர்தல் தொகுதியில் போட்டியிடுவதற்காக முஸ்தீபு செய்து வந்தான். தனது வாக்கு வங்கியை விரிவாக்கிக் கொள்ளும் பொருட்டு தலவாக்கொலைக்கு அருகே தேயிலை பயிர் செய்யப்பட்டிருந்த டெவன் தோட்டத்தில் பெருமளவு நிலத்தை சுவீகரித்து ஆயிரக்கணக்கான சிங்கள குடியேற்ற வாசிகளைக் குடியேற்ற முயன்றான். இக்குடியேற்றம் இடம் பெற்றிருந்தால் அந்த பகுதி தமிழ் தோட்ட தொழிலாளர்களின் பாதுகாப்பு பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும். இந்நில அபகரிப்பை அப்பகுதி மக்கள் தீரத்தோடு எதிர்த்து தடுத்து வந்தார்கள். அந்நிலத்தை அளக்க வந்த நில அளவையாளர்கள் வழி மறிக்கப்பட்டு திருப்பியனுப்பப் பட்டனர்.

அதுவரை சிங்கள காடையர்கள் வன்முறையில் இறங்கினால் அவர்களுக்கு அஞ்சி ஓடுவதுதான் வழக்கமாக இருந்து வந்தது. டெவன் தோட்டம் அந்த வரலாறை மாற்றியது. காடையர்களின் வன்முறைக்கு வன்முறை மூலம் பதில் கொடுக்க டெவன் தோட்ட தொழிலாளர்கள் துணிந்தனர். விரட்டியடிக்கப்பட்ட நில அளவையாளர்கள் ஹட்டன் பொலிசாரின் பாதுகாப்போடு திரும்பிவந்து நிலத்தை அளக்க முயன்றனர். அவ்வளவுதான். மலைமேடுகளில் இருந்து தோட்டத் தொழிலாளர் கற்களால் தாக்கத் தொடங்கினர். அவர்கள் மனதில் துணிச்சலைத் தூண்டி முன்னால் நின்று போராடி இந்த அதிசயத்தை செய்த வீர இளைஞன் பொலிசாரின் துப்பாக்கி வேட்டுக்கு பலியாகி அம்மண்ணில் வீழ்ந்தான். அவனது பெயர்தான் சிவனு லட்சுமணன். அவனது உயிர் அந்த இடத்தில் பிரிந்தது. அவனது இரத்தத்தால் சிவந்தது அந்த மண் மாத்திரமல்ல முழுமலையகமும் தான்.

சிவனு லட்சுமணனின் வீர மரணம் தூங்கிக்கிடந்த மலையகத்தை தட்டி எழுப்பியது. அதற்கெதிரான ஆர்ப்பாட்டங்கள் வேலை நிறுத்தங்கள் மலையகமெங்கும் நடைபெற்றன. கொப்பே கடுவையினதும் அநுர பண்டாரநாயக்கவினதும் கனவு இவ்வாறுதான் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு இவ்வாறான நிலக்கொள்ளை தடுத்து நிறுத்தப்பட்டது. ஆனால் சிங்கள இனவாதிகள் சிவனு லட்சுமணனினை அவன் இறந்த பின்னரும் கூட மன்னிக்கத் தயாராக இருக்கவில்லை. அவனது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு தமது வீரவணக்கத்தையும் அனுதாபத்தையும் செலுத்துவதற்காக அலையலையாய் அங்கு திரண்ட ஆயிரக்கணக்கன தொழிலாளர்களை தலவாக்கலையில் வைத்து ஒரு சிங்களக் காடையர் கும்பல் அடித்துக் கலைத்தது.

சிவனு லட்சுமணனன் படுகொலையைக் கண்டித்து ஊர்வலம் சென்ற தமிழ் மாணவர்கள் சிங்கள தீவிரவாதிகளால் பொலிசார் துணையோடு தாக்கப்பட்டனர். இதை தடுத்து நிறுத்த மலையக மக்களுக்கு துணிச்சலுடன் தலைமை கொடுக்க எந்த தலைமையும் இல்லாத அந்த அரசியல் நிர்வாணகோலத்தை இளம் சந்திரசேகரன் ஆத்திரத்தோடு அவதானித்துக் கொண்டிருந்தான். இன்னும் பல சிவனு லட்சுமணன்களை உருவாக்க வேண்டும் வேண்டும் என அவன் அன்று தீர்மானித்தான்.

அதுவே சந்திரசேகரனை நேரடியாகப் பாதித்து அவரை அரசியலில் பிரவேசிக்கத் தூண்டிய வரலாற்று திருப்பமாகும்.

அதுவே சந்திரசேகரனை நேரடியாகப் பாதித்து அவரை அரசியலில் பிரவேசிக்கத் தூண்டிய வரலாற்று திருப்பமாகும்.

## தலைவன் மடியிலே அரசியல் கற்றவன்


P.Chandrasekaran

பெரியசாமி சந்திரசேகரன் 16.04.1957 இல் தலவாக்கலையில் பிறந்தார். அவருடைய தந்தையார் பெரிய சாமி அவர்கள். அவர் தலவாக்கலை பஞ்சலிங்கம் ஸ்டோர்ஸின் உரிமையளர். எனவே அவர் நடுதர வசதியான குடும்பத்தில் பிறந்தவர். இவருடன் உடன் பிறந்தவர்கள் ஐந்து சகோதரிகள். இவர் மாத்திரமே ஆண்பிள்ளை. பஞ்சலிங்கம் ஸ்டோர்ஸ் ஒரு புடவைக் கடையாக இருந்தாலும், நகை ஈடுபிடிக்கும் பிரிவு ஒன்றும் அதில் இருந்தது. அத்துடன் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட தமிழ் புத்தகங்களும் சஞ்சிகைகளும் அதில் விற்கப்பட்டன. இலத்திரன் ஊடகங்கள் அரங்கிற்கு வராத அந்த காலகட்டத்தில் அச்சு ஊடகங்களின் செல்வாக்கே ஏகபோகம் செலுத்தியது. சந்திரசேகரனிடம் தமது புத்தகடைக்கு வரும் சஞ்சிகைகளையும் புத்தங்களையும் ஆர்வத்தோடு படிக்கும் பழக்கம் சிறுவயது முதலே இருந்து வந்தது. கடைசிவரை அவரிடம் இந்த பழக்கம் தொடர்ந்தது.இவரது ஆரம்ப கல்வி தலவாக்கலை சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் தொடங்கியது. அதன் பின்னர் ஹட்டன் ஹைலன்ட்ஸ் கல்லூரியில் முடிவடைந்தது.இவருக்குப் பதினெட்டு வயதாகும் போதே அவரது தந்தையைப் பறிகொடுத்தார். குடும்பச் சுமைகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழலில் அவர் தனது கல்வியை க.பொ.த உயர் தரத்துடனேயே நிறுத்திக் கொள்ள நேர்ந்தது. இவர் பாடசாலையில் திறமைமிக்க மாணவனாகவும் விளையாட்டு வீரராகவும் சிறந்த பேச்சாளராகவும் நல்லதொரு கவிஞனாகவும் திகழ்ந்தார்.இவரது சிந்தனை ஓட்டத்தைச் இவர் கல்விகற்ற காலகட்டமும் அப்போது அங்கு நிலவிய அரசியல் சூழ்நிலையும் செப்பனிட்டன. இவர் கல்விகற்ற ஹட்டன் ஹைலன்ட்ஸ் கல்லூரியில் தான் மலையக தேசியவாதத்தின் முன்னோடியான மலையக இளைஞர் முன்னணியின் ஸ்தாபகரான காலஞ்சென்ற இரா.சிவலிங்கம் அதிபராக பணியாற்றினார். இவர் அப்போது தொண்டமானை கடுமையாக விமர்சனம் செய்து கொண்டிருந்தார். அவர் விதைத்த மலையக தேசியவாதம் சந்திரசேகரனை நிரந்தரமாகப் பாதித்தது.அதே வேளை சந்திரசேகரனுடைய தந்தைக்கும் மறைந்த சௌமியமூர்த்தி தொண்டமானுக்குமிடையே தனிப்பட்ட நட்பு இருந்தது.

சந்திரசேகரன் குழந்தையாக இருந்த போது தொண்டைமானின் மடியில் அவர் விளையாடியிருக்கிறார். அவரது கடைக்கும் வீட்டிற்கும் தொண்டைமான் பல தடவை விஜயம் செய்திருக்கிறார். ஆகவே சிறு வயதிலிருந்தே தொண்டைமானை அவருக்குத் தெரியும். அவர்மீது ஒரு அபிமானம் அடிமனதில் இருந்து வந்தது. மறுபுறத்தில் 1970 களில் இவர் கல்விகற்ற ஹட்டன் நகரம், மறைந்த சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சண்முகதாசனின் கோட்டையாகத் திகழ்ந்தது. அங்கு அதன் செங்கொடிச் சங்கம் தலைமையகத்தைக் கொண்டிருந்தது. இங்கு தான் சண்முகதாசனின் மகள் ராதா மருமகன் டாக்டர் தம்பிராஜா மற்றும் மறைந்த கரவை கந்தசாமி உள்ளிட்ட பல முக்கிய உறுப்பினர்கள் வாழ்ந்தனர் துடிப்பாக செயற்பட்டுக் கொண்டிருந்தனர். தோட்டத் தொழிலாளர்களிடையே விழிப்புணர்வை உருவாக்குவத்தில் செங்கொடிச்சங்கம் அக்காலத்தில் முக்கிய பங்காற்றியது. அத்துடன் அப்பகுதியில் கல்விகற்ற அனைத்து இளைஞர்கள் மனதிலும் கருத்தியல் தாக்கத்தை அது ஏற்படுத்தியது. புதிய செங்கொடிச் சங்கத்தின் சிவப்பு நிறம் எல்லோருடைய மனதையும் செம்மைப் படுத்திக்கொண்டிருந்த காலகட்டம் அது. அக்காலகட்டத்திலே பல்வேறு கருத்தரங்குகள், கல்விவட்டங்கள், கலை கலாச்சார முன்னெடுப்புக்கள் போன்ற எல்லாத் துறைகளிலுமே சண்முகதாசனின் முத்திரை பதிந்திருந்தது. அதன் தாக்கம் சந்திரசேகரனின் மனதிலும் பதிந்தது.அத்துடன் சர்வதேச அளவில் புரட்சிகர தேசியவாத சிந்தனைகள் மேலோங்கியிருந்த 70 களின் தாக்கமும இவரைப் பாதித்தது. அவர் மாணவனாக இருந்த காலப்பகுதியில் ஹைலண்ட்ஸ் கல்லூரியில் "கனல்" என்ற பெயரில் கையெழுத்துச் சஞ்சிகை ஒன்று புதிய சிந்தனைக் கொண்ட மாணவர்களால் வெளியிடப்பட்டது. அச்சஞ்சிகை குழுவில் சந்திரசேகரனும் ஒருவர். கனலில் இவர் வடித்த கவிதைகள் கனல் கக்கின. சமூக அநீதிக்கு எதிரான ஆத்திரமும் அதற்கெதிராக போராடவேண்டும் என்ற தீவிரமும் அவற்றில் வெளிப்பட்டன. அப்போது நான் ஒரு ஆசிரியனாக தலவாக்கெலை பகுதியிலே பாடசாலை ஒன்றில் பணிபுரிந்து கொண்டிருந்தேன். இலங்கை ஆசிரியர் சங்கத்தின் துணைத்தலைவராகவும் இருந்தேன். தலவாக்கெலை வரும்போதெல்லாம் சந்திரசேகரனுடன் பஞ்சலிங்கம் ஸ்டோர்ஸில் தங்கிவிடுவேன்.என்னோடு அவர் மார்க்ஸிசம் பற்றியும் உள்நாட்டு சர்வதேச அரசியல் நிலைமை பற்றியும் ஆர்வத்தோடு கலந்துரையாடுவார். அவருக்கு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் இனவாதத்திற்கு எதிரான கொள்கைம மீது தனி மரியாதை இருந்தது. இச்சங்கத்தைச் சேர்ந்த பல இடதுசாரி சிங்கள ஆசிரியர்கள் இவருக்கு நண்பர்களாயினர்.

*தலைவனின் வாழ்க்கைப் பயணம் தொடரும் ......*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாக்கம் தந்தவை




## இலங்கை-இந்திய ஒப்பந்தம் நீடிக்குமா?

1987ம் ஆண்டு ஜுலை மாதம் 29ம் திகதி கைசாத்திடப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த இந்திய அமைதி காக்கும் படை இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது. புதியதொரு தெம்புடன் தமிழ் ஈழம் படைக்கும் முதல்படியாக அநேக பேர்களால் விமர்சிக்கப்பட்டது. யாழ்பாணத்தில் பிரபாகரனால் மாபெரும் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தம் திடீரென இந்திய அமைதி காக்கும் படைக்கும், தமிழ் ஈழ விடுதலை புலிக்கும் இடையில் யுத்தம் ஒன்றுக்கு வழிவகுத்தது.

பரந்த நலநோக்குடன் இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கும், இந்தியாவின் கௌரவத்திற்கும்,பிராந்திய அமைதிக்கும், உறுதிக்கும், குந்தகம் விளைவிக்கும் எந்தவொரு முயற்சியையும் இந்த ஒப்பந்தம் முறியடிக்கும் என வெளிவிவகார அமைச்சர் திரு.டிக்சிட் கூறியுள்ளார். அதனால் யுத்த நிறுத்தமும், அதேநேரத்தில் ஒரு தீர்வுமே ஆகும்.




## மலையகத்தின் நெருக்கடி குறித்து திரு. தொண்டமான் - வி.எல். சந்திப்பு

1987ம் ஆண்டு நவம்பர் மாதம் 13ம் திகதி அமரர் தொன்டமானை திரு வி.எல் தாக்கம் இதழ் பேட்டிக்காக சந்தித்திருந்தார்.மலையக வரலாற்றில் மிக முக்கிய கதாநாயகனான அமரர். கௌரவ. தொண்டமான் இருந்து வந்தவர். இவரின் பிடிவாத கொள்கைகள் சமூக நலனுக்காகவே வரலாற்றில் இருந்துவந்திருக்கின்றன. எனினும் மாறான சக்திக்கு மலையக சமூகம் பாதிப்படைய கூடாது என்ற எண்ணம் தொண்டமானுக்கு அதிகமாக இருந்த காலப்பகுதி.

சிங்கள குடியேற்றம் தொடர்பாக அனுகிய போது:- காமினி திசாநாயக்கவின் கூற்றுப்படி, ஐந்து தோட்டங்கள் இணைக்கப்பட்டு உடை தாயாரிப்பு கூடம், கோழிப்பண்ணையாக மாறலாம். இது பாதிப்பை ஏற்படுத்துமா? எம்மிடையே கட்டுபாடும், உறுதியும் இல்லாத வரை என்றும் எமக்கு ஆபத்துதான்.

நேரு-மேனன் உறவும் தீவிரவாத போக்கும்

அபூர்வ உருவங்களில் தோன்றும் ஆவிகள்.

"காமக் குரு" என பெயர் பெற்ற ரஜனீஷ் யோகியார்.




## ஈழத் தமிழர் பிரச்சினையில் கருணாநிதியின் நிலை என்ன?

1987ம் ஆண்டு இலங்கை-இந்திய சமாதான ஒப்பந்தத்திற்குப் பின்னர் அமைதி கிடைத்ததா? இலங்கை இராணுவத்தை விட இந்திய இராணுவம் மூர்க்கமாக நடந்துக் கொண்டதே? இதுதான் இந்திய வடக்கு-கிழக்கு மக்களுக்கு செய்த உதவியா? நாடாளுமன்றத்தில் வெறும் வார்த்தைகளை மாத்திரம் அள்ளிவீசி மக்களுக்கு உணர்ச்சி ஊட்டுகின்ற தலைவனாக மாத்திரம் இருக்ககூடாது. தன் சொல்லுகின்ற வார்த்தைகளுக்கு உயிர் கொடுப்பவனாக தலைவன் இருக்க வேண்டும். தி.மு.காவின் எம்.பி யான திரு கோபால்சாமி (இன்று அ.தி.மு.கா உறுப்பினர்) இலங்கை விஜயம் பல திகில்களை இந்தியாவுக்கு வழங்கியிருந்தன. இதில் மு.கருணாநிதியின் வகிபங்கு கணிசமான அளவு காணப்பட்டது என மறைமுக தகவல்களில் அடிப்பட்டன.

## ராஜீவ் கொலையின் பின்னர் தமிழ் ஈழப் பிரச்சினை

இலங்கைத் தமிழர்களுக்கு என்றுமில்லாத ஒரு நெருக்கடி இன்று தோன்றியுள்ளது. இந்நெருக்கடிக்குப் பல காரணங்களை முன்வைக்கலாம். ஒன்று தமிழீழ விடுதலைப்புலிகள் ஏனைய தீவிரவாத இயக்கங்களை இணைக்காது தமிமீழ வீடுதலையை தம்மால் மாத்திரமே வாங்கிக் கொடுக்க முடியுமென்ற நிலைபாட்டில், ஏனைய இயக்கங்களை ஒதுக்குதல், இரண்டாவது, உபாய ரீதியில் பல தவறுகளை செய்துள்ளமை. மூன்றாவது ராஜீவின் கொலை தமிழீழ விடுதலைப்புலிகளை சர்வதேச ரீதியாகப் பாதித்துள்ளது. இதன் காரணமாக இலங்கை வாழ் தமிழர்களையும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றன.







## அதிகார பரவலா? தமிழ் ஈழமா?

1987ம் ஆண்டு இலங்கை இராணுவத்திற்கும், தமிழ் தீவிர வாதிகளுக்கு இடையில் நடந்த யுத்தம், இலங்கையின் தேசிய பிரச்சினையில் ஒரு திருப்பு முனையாகும். வடக்கு-கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக வடமராட்சியில் தமிழ் தீவிரவாதிகளுக்கு எதிராக நடந்த போர் வெளியுலக பார்வைக்கு தமிழ் மக்களின் அழிவிற்கு வழிவகுத்ததாகத் தோன்றினாலும் இந்த யுத்தம் இறுதிவரை நடக்க இந்திய இடம் கொடுத்திருந்தால் தமிழ் ஈழம் பிறக்கவழி பிறந்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாக்கம் தந்தவை




### தேசிய பிரச்சினையில் மலையகம்

இலங்கை தேசியப் பிரச்சினையில் மலையகம் சம்பந்தம் இல்லையா? தமிழ் ஈழப் பிரச்சினை ஆரம்பமாவதற்கு முன்னரே மலையகம் தேசிய பிரச்சினையாகத்தகன் இருந்தது. ஆனால் மலையகத்தில் தலைமை கொடுத்த தலைவர்கள் முதலாளித்துவ பிற்போக்கு உடைமைவாதிகளாக இருந்ததால்; இது இருந்த அடிமை நிலையைத் தொடர வழி செய்தது.

பலஸ்தீன அரபு மக்களின் விடுதலைப் போராட்டம்:, பலஸ்தீன விடுதலை இயக்கத்தினை இல்லாதொழிப்பதற்கும், மேற்கு கரை, கோலான் குன்றுகள் ஆகிய பகுதிகளிலே இஸ்ரவேல் ஆதிக்கத்தினை ஏற்படுத்துவதற்கு எதிர்ப்பு, சவூதி அரேபியா, ஜோர்தான், லெபனான், ஆகிய நாடுகளின் ஒன்றிணைந்து ஐக்கிய இராஜ்ஜியம் சார்ந்த கூட்டிணைப்பை ஏற்படுத்தின.




### ஒடுக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள்

தோட்டப்புற தமிழ் மக்களின் வரலாறு அன்று தொட்டு இன்று வரை கொடுமை நிறைந்ததாகவே காணப்படுகின்றது. ஒடுக்கப்பட்ட மக்கள் 1824ம் ஆண்டில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட போதிலும் அதற்கு 100 வருடங்களுக்குப் பின்னே அவர்கள் தமக்கென ஒரு தொழிற்சங்கத்தை அமைத்துக் கொண்டார்கள். 1927ம் ஆண்டு மஹாத்மா காந்தி இலங்கைக்கு விஜயம் செய்தபோது சீனியும் பாலும் இரண்டறக் கலப்பதை போல், சிங்கள மக்களுடன் ஒன்றிணையும்படி இந்திய வம்சாவளி தமிழ் மக்களுக்கு அறிவுரை வழங்கினார்.

லிபியாவின் புரட்சியும், அதன் பின்னணியும்: அமெரிக்காவுக்கும், பல வல்லரசு நாடுகளுக்கும் பல பீதிகளை ஊட்டும் லிபியா ஜனாதிபதி கேர்னல் கடாபி.

### இந்தியாவின் உளவு அம்பலம்- 4
### "இலங்கைத் தீவிரவாதிகளுக்கு தமிழ் நாட்டில் 'றோ' (RAW) பயிற்சி

**இந்திய உளவுப் பணியகங்கள் முக்கிய மூன்று நிகழ்வுகள் தொடர்பாக முன் கூட்டியே தகவல்களைத் தரத்தவறி விட்டன. இந்நிகழ்வுகளில் ஒன்று இந்திரா படுகொலை.**







### இந்தியர்களுக்கு இத்திறன் இல்லை

**இந்தியாவிலுள்ள ஒரு நாசக்கார குழு, எல்.ரி.ரி.ஈயின் உதவியோடு இப்படுகொலையை நிகழ்த்தியிருக்கிறது. இந்தியாவிலோ குறிப்பாகத் தமிழ் நாட்டிலோ இருக்கக்கூடிய தீவிரவாதக் குழுக்கள் இவ்வாறான ஒரு செயரல செய்து முடிக்கும் சுய திறன் கொண்டவையல்ல. இந்தியாவின் முன்னால் ராஜீவ் காந்தி பயங்கரவாதத்திற்கு பலியாகியுள்ளார்.**

### இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு சென்றவர்களின் சோகக்கதை

1964ம் ஆண்டு சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் படி தாயகம் திரும்பியவர்களின் ஒரு பகுதியினர் இந்திய கோடைக்கானலில் அல்லலுற்று அயராத துயரத்தோடு கொத்தடிமைகளாக இருக்கும் பரிதாப காட்சிகள் மனதை மரணிக்க செய்கின்றன. இலங்கையில் அரை நிலை அடிமைகள் என்றால், கோடைக்கானலில் மலையக மக்கள் முழு அடிமைகளாக இருக்கிறார்கள்.

1987ம் ஆண்டு தொடக்கம் 1991ம் ஆண்டு வரை மலையகத்தை மையமாக வைத்து தாக்கம் வெளிவந்தது. உலக அரசியல் விவகாரங்களை நடைமுறை சிக்கலுடன் பகிர்ந்துக் கொண்ட இலங்கை சஞ்சிகைகளில் தாக்கமே முதன்மை வகித்தது.

உலக நடப்புகளையும்,உலக அரசியலையும், மலையக மக்கள் புரிந்துக் கொள்வார்களா? என்ற கேள்விகளுக்கு தாக்கம் அக்காலங்களில் பதிலுரைத்தது. அதன் வாசகர்கள் அரசியல் தெளிவுமிக்கவர்களாக காணப்பட்டார்கள்.

1990ம் ஆண்டுகளில் மேலைத்தேய முறைகளுக்கு சவால் விடுக்கும் வகையில் அதன் அச்சுப் பதிப்பு இலங்கையில் காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேதினத்தில் தொழிலாளர் மனதில் பதிக்க வேண்டிய சிந்தனைகள்

## ..........மேதின நினைவு தினத்தில் வி.எல். பெரைரா




மலையகத்தில் மேதின விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. நாலாபுறங்களிலுமிருந்து, ஊர்வலங்கள் கிளம்புகின்றன, ஊர்வலங்களில் கோஷங்கள் எழுப்பப்படுகின்றன, ஆரவாரங்கள் ஓங்கி ஒலிக்கின்றன, ஆடல்களும் பாடல்களும் இடம்பெறுகின்றன. இவ்வாறிருக்க தொழிலாளர்களின் உரிமைகளுக்காகக் குரல் எழுப்பப்படுகின்றனவா? எழுச்சிப்பாடல்கள் இசைக்கப்படுகின்றனவா? இல்லவே இல்லை.

ஒரு தொழிற்சங்கத்தின் ஊர்வலம் கிளம்புகின்றது. இதில் மாற்றுத் தொழிற்சங்கவாதிகளைத் தாக்கி கோஷங்கள் எழுப்புகின்றார்கள், கிண்டல் செய்கின்றார்கள். தம் தொழிற்சங்கத் தலைவரை இராஜா என்கிறார்கள். இன்னொருவரை சாமி என்கின்றார்கள். ஒரு சிலர் தென்னிந்திய நடிகர்களாகவும் கருதப்படுகின்றார்கள். இவர்களின் பார்வையில் மற்றவர்கள் வில்லன்கள் போலும். இந்த இலட்சணத்தில்தான் மலையகத்தில் தொழிற்சங்க ஊர்வலங்கள் கிளம்புகின்றன. இவற்றால் சமூக உணர்வுகள் நிலைத்தோங்குமா? சமூக விடிவுக்கு வழிப்பிறக்குமா? சுய சிந்தனைக்கு இடமுண்டா?

### அறிவு மயக்கமும், மது மயக்கமும்.

மேதின விழாக்களுக்குப் போட்டா போட்டியில் ஆட்களைத் திரட்டுகிறார்கள். போக்குவரத்துக்காக வாகனங்களை அமர்த்துகின்றார்கள். பம்பரம்போல் சுழன்று காரியமாற்றுகின்றார்கள். வாகனங்களில் ஏறி கூடிசெல்வோர் செய்வதென்ன? வழிநெடுகிலும் எதிர்தரப்பினர் மீது வசைப்பாடுகின்றார்கள். குரோத விரோத கோஷங்களை எழுப்புகின்றார்கள். "டப்பாங்" கூத்து ஆடுகிறார்கள். இவர்களுக்கு அறிவு மயக்கம் ஒரு புறம், மது மயக்கம் மறுபுறம்.

இவற்றால் மக்கள் சுய சிந்தனை பெறுவார்களா? அறிவுத் தெளிவு பெறுவார்களா? சமூக உணர்வைக் கட்டிக் காப்பார்களா? வர்க்க உணர்வை வளர்ப்பார்களா? இவற்றிலிருந்து ஓர் உண்மை புலனாகின்றது. இந்த தொழிற்சங்கம், மலையக மக்களைத் தொடர்ந்து அறியாமை அந்தகாரத்திற்குள் ஒடுக்கி வைக்க முனைகின்றது. இதற்கான தந்திரோபாயங்களைக் கையாளுகின்றது. சுரண்டல் வாதத்தைத் தொடர்ந்துங் கடைபிடிக்க முனைப்போடு செயல்படுகின்றது.

கூலிக்கு ஆள்பிடிப்பு, ஆட்கள் சேகரிப்பு, கூலிக்கு மாரடிப்பு, அர்த்தமற்ற கோஷங்கள், டப்பாங் கூத்துக்கள் ஆகியவற்றால் மலையகம் விழித்தெழுமா? மக்கள் சுய சிந்தனை பெறுவார்களா? தம்கட்சிக்கென சுயமாக ஒரு கொடியை உருவாக்குவதற்குச் சுய சிந்தனை இல்லாதவர்களால் எப்படி மலையகத்தை மாற்றியமைக்க முடியும்? மேதின விழாவிற்காக பெருவாரியான பணம் கொட்டி இறைக்கப்படுகின்றது. தொழிலாளர்களின் மேம்பாட்டுக்கான உருப்படியானத் திட்டங்களுக்காக இதை செலவிடக்கூடாதா?

### மலையகத் தலைமைகள் சொல்வதென்ன?

தேர்தல்கள் முடிந்தாகிவிட்டது. வழமைப்போல் வெற்றிவாகை சூடியாயிற்று என்ற சந்தோஷம் ஒரு புறம் இருக்க மறுபுறம் செலவழித்த பணங்களை எப்படி மீள பெறுவது என்ற சிந்தனையே இப்போது மேலோங்கியுள்ளது. வாக்குறுதிகள் வேறு கொடுத்தாயிற்று மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற கட்டாயப்பாடு ஏனெனில் முன்பு ஏமாற்றியது போல் இப்போது இருந்து விட முடியாது. மக்கள் உசாராகிவிட்டார்கள். இந்த தடவைகள் மக்கள் பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற மலையக மக்களின் உயரிய சிந்தனையின் பெயரிலே தெரிவு செய்யப்பட்டவர்களாகவே தொழிற்சங்க தலைவர்களும், தலைவர்களும் இருக்கின்றார்கள். இந்த நிலையை உடைத்தெறிய கூடிய நேரம் அவர்களுக்கு இருக்காது என்ற உண்மை பொருந்திய பயங்களும் ஒரு பக்கம். இந்த நிலையிலும் மேதினங்களில் இவர்கள் தொல்வதென்ன? தோட்ட தொழிலாளர்களுக்கு தாம் குடியிருக்கும் லயக் காம்பிராக்கள் சொந்தமாக்க வேண்டும், சம்பள உயர்வுகள், என அறைகூவல் விடுக்கிறார்கள். இதுதான் இவர்களின் கோரிக்கைகள். மலையகத்தில் காணப்படும் ஒவ்வொரு லயனுக்கும் ஒரு வரலாறு உண்டு. அநேக லயன்கள் 150 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டவை. புறாக்கூடுகளைப் போல சிறு சிறு அறைகளைக் கொண்டவை. காலத்துக்கொவ்வாதவை. குடியிருப்புக்கு இலாயக்கற்றவை. தேர்தல் பிரச்சாரம், தேர்தல் போஸ்டர்கள் ஒட்டியவர்களுக்கு தெரிந்து என்ன செய்வது தலைவர்களுக்குதான் வெளிச்சம்.





ஓர் அறைக்கு ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பலர் முடங்கக்கூடிய நிலை. இவை ஓட்டையும் உடைசலுமான லயன்கள். இந்தப் பழைய லயன்களைத் திருத்திதருமாறு அன்று தொட்டு இன்றுவரை தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்து வருகின்றன. இதுவும் பழைய பல்லவிதான். காரியம் கைகூட வில்லை. இந்த இலட்சணத்தில் பழைய வீடுகள் தாம் தொட்ட தொழிலாளர்களுக்குச் சொந்தமாக்க வேண்டுமா? இப்போதே நிருவாகங்கள் இவற்றைத் திருத்திக் கொடுக்க முன்வருவதில்லை. தொழிலாளர்களுக்குச் சொந்தமான பின்னர் இவற்றைத் திருத்திக் கொடுக்க நிருவாகங்கள் முன்வருமா? என்ன? புதிய வீடமைப்பு திட்டங்கள் பழைய லயன்களுக்கு பதிலாகவா? புதிய தலைமுறைகளின் வருகைக்கா?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**"உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்"**

**"நீங்கள் இழப்பதற்கு உங்கள் கைவிலங்குகளை தவிர வேறொன்றுமில்லை".**



ஏன் தொழிலாளர்கள் நவீன வீடுகளில் குடியிருக்கக் கூடாதா? அவர்கள் மேம்பாடு எய்தக்கூடாதா? ஓட்டை லயன்களை இவர்களால் திருத்த முடியுமா? இன்று சீமெந்து உட்பட்ட தளபாடங்களின் விலைகள் வி'ம்போல் ஏறிவிட்டன. இதனால் அற்பசொற்பத் திருத்தங்களை மேற்கொள்வதற்குக் கூட தொட்ட நிர்வாகங்கள் மலைக்கின்றன, பின்வாங்குகின்றன, தட்டிக்கழிக்கின்றன. வாழ்க்கை செலவுகள் அபரிமிதமாக உயர்ந்து விட்டன. இந்நிலையில் ஓட்டை லயன்களைத் திருத்துவதற்கு தொழிலாளர்கள் எப்படிச் செலவழிப்பார்கள்?

நவீன வீடுகள் வேண்டாம், குடியிருக்கும் ஓட்டை லயன்களை சொந்தமாக்குங்கள் என்கின்றார்களே? என்ன விவேகம். சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்க மாட்டான் என்ற கதைக்கு ஒப்பான விடயமாகுமிது. ஆனால் 1992ம் ஆண்டு பெருந்தோட்டத் தொழிற்துறை அமைச்சராயும், பாதுகாப்பு அமைச்சராயுமிருந்த, மறைந்த திரு. ரஞ்சன் அவர்களை நாங்கள் சந்தித்த போது அவரது அமைச்சில் சந்திப்பு நடைப்பெற்றது. தொழிலாளர்கள் தொடர்பாக பல்வேறு விடயங்களைப்பற்றி உரையாடியபோது, ஒரு கட்டத்தில் அமைச்சர் "தோட்டத் தொழிலாளர்களுககு நவீன வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். இதற்குவெளிநாட்டு உதவிகள் கிடைத்துள்ளன" எனக் குறிப்பிட்டார். இது கேட்டு மகிழ்ச்சி அடைந்தோம். ஆனால் அதன் நிலைபாடு இன்னும் கேள்விக்குறியாகியிருப்பது வேடிக்கையே. 2010ல் கூட இன்னும் 35 சதவீதத்தினை வீடமைப்பு திட்டங்கள் பூர்த்தியாக்கவில்லை என்பது கவலைக்குரியதே?

## எழுச்சிக் கீதங்களா? இயக்கப்பாடல்களா? நகைச்சுவைக் கூத்துகளா?

வாணி ஜெயராமும் பாடலாம், டி.எம். சௌந்தரராஜனும் பாடலாம், ஹரிகரனும் பாடலாம் இலங்கைப் புகழ் அம்சத்வேணியும் பாடலாம், கூத்துப் பட்டறைகளும் நடக்கலாம். மலையக மேதின மேடைகளில்தான் ஆம் எழுச்சிக் கீதங்களா? இயக்கப்பாடல்களா? கொள்கை விளக்கப்பாடல்களா? எமது அபிலா'களை வெளிக்கொணரும் உணர்ச்சிக் கீதங்களா? நகைச்சுவைக் கூத்துகளா? இவற்றால் மலையக மக்கள் சுய சிந்தனை பெறுவார்கள்களா? இதற்காக வாரி இறைக்கப்படுகின்றது. கடந்த மேதினங்களில் தென்னிந்திய காமெடி ஜம்பவான்கள் பலர் பலதரப்பட்ட மேதின மேடைகளில் வந்து கலக்கியிருந்தார்கள். அதிலே தலைவர் உட்பட்ட தோழர்களும் மெய்மறந்திருந்தார்கள். இந்த தேர்தலில் ஏனைய தொழிற்சங்க மேடைகளில் தலைவர்களே காமெடியாளர்களாக வரவேற்கப்பட்டிருந்ததாக தகவல்கள். மக்கள் புகட்டிய பாடங்கள் அரசியல் பரீட்சைக்கு முக்கியமானவை.

ஆபிரிக்க மக்களின் உரிமைக்காக அங்கு நெல்சன் மன்டேலோ போராடியிருந்தார். இதே சந்தர்ப்பத்தில் பீஜித் தீவில் வாழும் இந்திய வம்சாவளியினர் தம் உரிமைக்காக அங்கு போராடிவருகின்றார்கள். ஹொங்கொங்கில் வாழும் இந்திய வம்சாவளியினர் தம் உரிமைக்காக குரல் கொடுக்கின்றார்கள். அமெரிக்காவில் வாழும் கறுப்பின மக்களுக்களின் உரிமைக்காக அங்கே மெல்கம் எக்ஸ் மாட்டின்லூதர் கிங் ஆகியோர்கள் போராட்டங்களை நடத்தியுள்ளார்கள். உலக நாடுகளில் ஒடுக்கப்பட்ட மக்கள் இன்று பரவலாக உரிமைக்குரல் எழுப்பி வருகின்றார்கள். மன்னர் யுகம் மாறிவிட்டது. இது மக்கள் யுகம், ஜனங்கள் யுகம், ' நாயகம் தலைமை நாயகன். தலைவன் இங்கு நிகழ்ந்த ஊர்வலங்களில் ஒரே கூச்சல் காட்டு கூச்சல். "எங்கள் இராஜா" "எங்கள் இராஜா" அனேகர் வாய்கிழியக் கத்தினர். ஏகாதிபத்திய இராஜாவா? ஏதேச்சதிகார இராஜாவா?

## அன்றும், இன்றும் இதே கேள்வி..?

1992ம் ஆண்டு காலப்பகுதி மேதினங்களில் இடம் பெற்ற இதே பிற்போக்கான கொள்கைகள் இன்னும் அதாவது 2010ம் ஆண்டு வரை தொடர்ந்துக் கொண்டிருப்பது எமது பலவீனமான தொழிலாளர் பலத்தை காட்டுகின்றதே தவிர ஒன்றுமில்லை. தோட்டப் புறங்களிலுள்ள தொழிலாளருக்கு சாராயம் , சாப்பாடு வாங்கிக்கொடுத்து அரசாங்க பஸ்களில் நகரத்தை (Town) சுத்திக் காட்டுவதாகவே இன்றைய மேதினங்கள் இருக்கின்றன. மேதினங்களில் தலைவர்கள் பேசும் போது தொண்டர்கள் குடிபோதையில் கைத்தட்டுவதும், விசில் அடிப்பதும் தலைவனின் மரியாதைக்கு இழுக்கு என்பது அவர்களுக்கு தெரிவதில்லை.

அதன் பின்னணியில் தொழிலாளர்களின் உரிமைப்பற்றி பேசுவது எங்ஙனம் சாத்தியமாகும் என்பது மலையகத்துக்குத் தான் வெளிச்சம். இப்படியாக தொடர்தேட்சியாக பேசிவரும் மலையக தலைமைகளின் கொள்கைகளால்தான் மலையகம் இன்னும் இருளிலே தங்கியிருக்கின்றது. மலையகத்தில் இன்று தேர்தல் பிரசுரங்களுக்கு வழங்குகின்ற வாக்குறுதிகள் என்ன?

தோட்ட வீடமைப்பு, மலசலக்கூடம், வீட்டுகூரை, தண்ணீர் வசதி, மின்சார வசதி, சம்பள உயர்வுபோன்ற தொடர்தேட்சையான பஜனைப் பாடல்கள்தான். மலையகத்தை பொறுத்த வரை தொடர்ந்து ஆட்சி பீடத்திலே வீற்றிருக்கும் தலைவர்களே அதிகமாக இருக்கின்றார்கள். அதற்கு காரணம் ஆளும்தரப்புடன் இருப்பதால்தான் அபிவிருத்தி செயற்பாடுகளை செய்துக்கொள்ளலாம் என்பதே மூலசூத்திரமாக அமைகின்றது. அது சரிதான் மலையக அரசியல் தாங்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்துக்கொள்ளும் எதிர்பார்ப்பு அரசியலை பெற்றுக்கொள்ளுவதற்கு பல நூற்றாண்டுகளை கடந்திருக்கின்றது. இதன்படி தேசிய அரசியலில் மலையகத்தை தேசிய ரீதியில் இணைத்து சுயம், நிர்ணயம், உரிமை போன்ற எண்ணக்கருக்களில் தாங்களை நிலைநிறுத்துவது தொடர்பாக எப்படி சிந்திக்கப்போகின்றது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நவ காலனித்துவத்தை இந்தியா மலையகத்தில் கடைப்பிடிக்கின்றது என்ற குற்றசாட்டு நீண்ட வரலாற்றைக் கொண்டது. இந்தியாவின் முதலாளித்துவ போக்கு அதன் வழிவந்த உறவுகளையே நசுக்குகின்றது**

இந்தியாவிலிருந்து பாடகர்களாகவும், சினிமா கலைஞர்களாகவும், வந்து போகும் மேதின கோமாளிக்காரர்களின் நடுவே, மலையகத்தின் எதிர்காலம் தொடர்பாக அக்கறை கொண்ட இந்திய அரசியல்வாதிகள் யாரெனும் ஒருவர் இருக்கின்றாரா? இப்படி கேட்கும்போதுதான் ஞாபகம் வருகிறது, இலங்கையில் சுற்றுலாவை மேற்கொண்டிருந்த இந்திய தமிழ் அரசியல்வாதிகளின் மலையக பிரவேசம் மலையக மக்களின் அக்கறையாக இருந்த ஒன்றல்ல என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். ஆனபோதும் ஞாபக மருந்தால் தயாரிக்கப்பட்ட கோதுமை மா ரொட்டியைதான் உண்பது போல, மலையக மக்கள் குறிப்பிட்ட காலப்பகுதியில் இடம்பெற்ற நிகழ்வுகளை உடனடியாக மறக்கின்றார்கள் என்பதுதான் கசப்பான உண்மையாகவிருக்கிறது.

இதன் உண்மைதான் என்ன? இலங்கையில் காணப்படும் தனியார் தேயிலைத் தோட்டங்களை நிர்வகிக்கின்ற கம்பனிகள் பெருபாலானவை இந்தியாவினுடையது. அதன் மூலம் இந்தியா அதிகமாக அந்நிய செலவாணியைப் பெறுகின்றது. இத்தோட்டங்களில் அதிகமாக வேலை செய்யும் தொழிலாளர்கள் இந்தியா வம்சாவழி தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே தோட்ட தொழிலாளர்களின் தெளிவு, சிந்தனை, ஒற்றுமை, ஐக்கியம் என்பன கம்பனிகளுக்கும் அதன் இலாபத்துக்கும் பாரிய அச்சுறுத்தலாக அமையும் எனவே அவை தாங்களின் கருவியாக தொழிற்சங்கங்களையே பயன்படுத்துகின்றன. இதற்கான ஆதரபூர்வமான விடயங்களை தொழிற்சங்கங்கள் தேர்தல் காலங்களில் மக்கள் முன்னே தவறவிட்டிருக்கின்றன. அதிகமான செலவுகளில் தேர்தல் பிரசாரம், இந்தியா முறையிலான நவவஞ்சகமாக தேர்தல் முறை, இந்திய திரைப்படத்தில், அரசியல்வாதிகளிடமிருந்து வே'டி, சால்வை, சீலை, கடிகாரம், அன்னதானம் பெற்றுக்கொண்ட காட்சியை பார்த்த மலையக தொழிலாளர்களிடையே, தாங்களும் கதாபாத்திரமாக பங்கெடுத்தது மகிழ்ந்தது இந்த பாராளுமன்ற தேர்தலில்தான்.! அதனை வழிநடத்தியிருந்தவர்கள், இந்த இந்தியா தனியார் தோட்ட கம்பனிகள் என்பது அவர்களுக்கு தெரியாமல் போனதிற்கு, இலங்கை சாராயத்தின் போதை மட்டுமல்ல, அது சும்மா கிடைத்தது என்ற ஒரு விதமான போதையும்தான் காரணம்.

இந்தியா பல உதவிகளை இலங்கைக்கு செய்தது, என்பது கடந்த கால இலங்கை தமிழரின் வரலாற்றிலிருந்து நன்றாக புரிந்துக் கொண்டுள்ளோம். இப்படியான உதவிகளை மலையகத்துக்கு எப்போதும் செய்துவிடக் கூடாது என்பதில் மலையக புத்திஜீவிகள் அக்கறையாக இருக்கின்றார்கள். இந்தநிலையில் மக்களுக்கு தெரியாத மக்கள் சேவைகளை, மக்களுக்கே அதுதானா? என்ற கேள்விகுறியாகும் உதவிகளை, நமது அரசியல்வாதிகள் சொல்லக்கேட்டு மலையக தோட்டத் தொழிலாளர்கள் வியப்புக்குள்ளாகியிருக்கிறார்கள் காலனித்துவம் கடந்துவிட்ட நிலையில், மேலைத்தேய பொருளாதார முறை என்ற திறந்த பொருளாதாரத்தையும், ஜனநாயத்தையும் கட்டிப்பிடித்துக்கொண்டிருக்கும் இந்தியா, தனது தனியார் தோட்டக் கம்பனிகள் மூலம் அதனை தனது பொருளாதார வல்லரசு பலத்தைக் காட்ட முனைகின்றது. இதன் மூலம் தேசம் கடந்த காலனித்துவத்தை மலையகத்தில் செயற்படுத்துகின்றது.

**தோட்ட துரைமார்களும், மலையக தலைவர்களும் இந்தியாவின் ஏஜென்டுகளா? என்ற வினாவுக்கான விடையோடு அடுத்த மாதம் சந்திப்போம்.**

எவை எவைகளை
எவனவன் செய்கின்றானோ!
அவை அவைகளின் நன்மை தீமைகளை
அவனவன் அனுபவிப்பான்..!

யோகி..

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்
வாழ்க்கையே ஒரு சந்தர்ப்பந்தான்!
இதில்
யார் துணிவுடன் செயல்பட முடிகிறதோ
அவரே தூரங்களைக் கடந்து செல்கிறார்..!



**அடுத்த இதழில் சர்வதேசிய அரசியல் விடயங்களையும் தாக்கம் அவதானிக்கும்.**

## எழுதுவது அவ்வளவு சுலபமா?



பிரபல எழுத்தாளர் ஸ்டீபன் லீகாக் என்பவரைத் தேடி ஒரு நண்பர் வந்தார்.
வந்தவர் லீகாக்கிடம் தானும் அவரைப் போல ஒரு எழுத்தாளர் ஆக வேண்டும் என்றும், எழுதுவது கடினமான செயலா? எளிதான ஒன்றா? என்றும் கேட்டார்.
உடனே லீகாக் சொன்னார் "எழுத்தாளர் ஆக வேண்டும் என்றால் ஒரு பேனாவையும், பேப்பரையும் எடுத்து வைத்தக்கொண்டு, உங்களுக்கு தோன்றுவதை எழுதுங்கள் அவ்வளவுதான்.
வந்தவர் ஆச்சிரியமாக கேட்டார்" அட எழுதுவது அவ்வளவு சுலபமா?
லீகாக் சொன்னார் " ஆமாம்... எழுதுவதென்றால் அவ்வளவுதான். ஆனால் தோன்றுவது என்று ஒன்றிருக்கின்றதே அதுதான் மிகவும் கஸ்டம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத்தை செம்மைப்படுத்தும் அதிகாரபகிர்வுடன் கூடிய பொது ஒருமைப்பாட்டுணர்வு இலங்கையில் ஒரு கண்ணோட்டம்

~வித்தியார்த்தி ~

மக்கள் ஆணையுடன் கூடிய அதிகார ஆட்சி நடைமுறைப்படுத்தப்படும் முறைகளில் நாடுகளுக்கு நாடு வேறுபாடு காணப்படுகின்றன. ஜனநாயகம் என்ற தொனியில் இன்று காணப்படும் நாடுகளில் தாராண்மைவாத கொள்கைகள் கொண்ட அரசியலமைப்புடனே செயல்படுகின்றன. அரசியலமைப்புடன் கூடிய அதிகார முறைமை அல்லது அரசாங்க நடைமுறைகள் ஸ்ரோங்கின் வரலாற்று ரீதியான செயற்பாடாகவே காணப்படுகின்றது. அரசியலமைப்பு என்பது வரலாற்று ஆட்சி முறைகளில் பல்வேறான ஆட்சி முறைகளுக்கு வலிகோலியிருந்தாலும், நவீன யாப்பு முறைகளான ஒற்றையாட்சி, சமஸ்டி அல்லது கூட்டாட்சிக்கே வலிசமைத்தது. இவ்வாறான நடைமுறைக்குள் உள்வாங்கப்படும் அரசியலமைப்பை பொறுத்து நாடுகளின் ஆட்சி முறைகள் வேறுபடுகின்றன.

இலங்கை ஒரு கையில் பயங்கரவாதம் அல்லது யுத்தம் என்பதினையும்? மறு கையில் ஒற்றையாட்சியா? சமஸ்டியாட்சியா என்ற விடயங்களை சுமந்து வந்தே! இன்றைய போரற்ற காலகட்டத்தை எட்டிப்பிடித்திருக்கிறது. இந்நிலையில் பயங்கரவாதம் அல்லது யுத்தம் என்பதினை முடிவுக்கு கொண்டு வந்திருக்கும் இக்கால கட்டத்தில் தேசிய ஒருமைப்பாட்டினை கட்டியெழுப்ப வேண்டிய கடமை இலங்கை அரசுக்கு காணப்படுகின்றது. ஒரு விடயம் முடிகின்ற போது இன்னொரு விடயம் தொடங்கப்படுகின்ற வரலாற்று உண்மையை இன்றைய இலங்கை அரசியல் நகர்வுகள் காட்டுகின்றன.

அரசியலமைப்பு மாற்றம் தொடர்பான அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் வெற்றி, அரசியலமைப்பு மாற்றத்துக்கு வெளிபடையாக வலிகோலியுள்ளதாக கருதப்படுகின்றது. இருந்தபோதிலும், பயங்கரவாதத்தின் பின்னணியில் அதிகார பகிர்வு என்ற விடயம் பிரதேசத்தக்கான அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்கான ஒரு போராட்டமாகவே இருந்து வந்ததினை இவ்விடத்தில் யாரும் மறுப்பு சொல்ல முடியாது. இந்த போராட்டத்தை அரசு பயங்கரவாத போர்வையால் இல்லாதொழித்தாலும், தேசத்தின் அபிவிருத்தியில் தேசிய ஒருமைப்பாடு மிக முக்கியமானதாக கருதப்படுகின்றது. தேசிய ஒருமைப்பாட்டை கட்டியெழுப்ப இலங்கையில் அதிகார பரவலாக்கம் மிக முக்கியமனதாக இருக்கின்றது. இந்நிலையில் சிறுபான்மையினரின் உரிமையை விரிபுபடுத்தல், பல்லினத்தன்மையை வளர்த்தல் போன்ற அத்தியவசிய தேவைகளும் அதிகார பகிர்வில் உள்ளடக்கப்படுகின்றது. சர்வதேசத்தின் ஜனநாயகப் பண்பை ஏற்றுக்கொள்ள வேண்டிய தேவை தொடர்பான அழுத்தங்களும் அதிகமாகிவிட்டன. இவ்வாறான விடயங்களைக் கவனத்தில் கொண்ட இலங்கை அரசு அவசர அவசரமாக அரசியலமைப்பு மாற்றத்தின் மூலமான அதிகார பகிர்வை மேற்கொள்ள முயற்சிக்கிறது.

அதிகார பகிர்வு மூலமாக இலங்கையில் எதிர்காலத்தில் இடம் பெறப்போகும் இன்னொரு அதிகார முரண்பாட்டுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான நீண்ட கால திட்டமிடல்களாகவே அரசியலமைப்பு மாற்றம் இடம்பெற வேண்டும் என்பது அனைவரினதும் எதிர்பார்ப்பாகும். இதன்படி, அரசியலலைப்பு செயற்படப்போகும் விதம், அதிகார பரவலாக்கம், தேசிய ஒருமைப்பாட்டின் ஆரோக்கியம் தொடர்பான விவாதங்கள் நாளுக்கு நாள் தேசிய மட்டத்திலும், சர்வதேசிய மட்டத்திலும் அதிகரித்துள்ளன. ஆட்சி முறைகளில் மாற்றம் கொண்டு வராமல், அதன் உள்ளடகத்திலே மாற்றம் கொண்டு வருவது அரசு அவதானிக்கின்ற முக்கிய விடயமாகும். இதனடிப்படையிலே, அதிகார பரவலாக்கம் என்ற ஒன்றையே தனது அடிப்படை தளமாக கொண்டுள்ளது. அதிகார பரவலாக்கம் தொடர்பாக பல முன்னேற்பாடுகள் காலத்துக்கு காலம் பல்வேறு மாதிரிகளில், கருத்துக்கள் வெளிவந்தாலும், பல்லின மக்கள் வாழும் இலங்கையில், பெருபான்மையினருக்கு சாதகமாக முறையில் தீர்மானிக்க வேண்டும் என்கின்ற விடாபிடிகள், அரசின் முன்னேற்பாடுகளை தோல்வியடைய செய்திருக்கின்றன.

சமஸ்டி முறையிலான ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ள இலங்கை அரசு, ஒற்றையாட்சி முறையிலமைந்த, அதிகார பரவலாக்கத்தினை முன்வைக்கவே விரும்புகிறது. இதற்கு முன் 13ம் அரசியலமைப்பு சீர்த்திருத்தம் கொண்டுவரப்பட்ட போதும் அதிகார பகிர்வு என்பது ஒரு நிகழ்ச்சி நிரலாகவே காணப்பட்டது. மாகாணசபை ஆக்கத்திற்கு அந்நாளில் எதிர்ப்பு தெரிவித்த பேரின மக்களும், 17வது அரசியலமைப்பு திருத்தத்தின் போது பேரணைகளை கிழித்தெரிந்த எதிர்கட்சிகளும் இன்று இலங்கையில் வேறுபாடான கருத்தை முன்வைப்பது ஆட்சி அதிகாரத்துக்கான ஒரு வரட்டு போட்டியாகவே அமைந்திருக்கின்றதே தவிர, ஜனநாயகம் என்ற பண்பை கொண்டு நடத்துகின்ற ஒரு ஆட்சி நாடாக இலங்கை அமைந்திருக்கவில்லை என்பதை காட்டுகிறது.13ம் அரசியலமைப்பு சீர்த்திருத்தம் மாகாணசபை அதிகாரத்தை வலுப்படுத்துவதற்காகவே உருவாக்கப்பட்டிருந்தது. ஆனாலும் அதன் செயற்பாட்டு விதம் மத்திய அரசுக்கே அதிகார பலத்தை குவித்துள்ளதை காட்டுகின்றது. இதுவரை காலமும் எந்த வகையிலும், சிறுபான்மை மக்கள் அதிகார பரவலாக்கத்தில் திருப்தியடையவில்லை என்பது மிக முக்கியமான உண்மையாகும்.

இலங்கையில் சிறுபான்மையினர் இல்லை, எல்லோரும் பெரும்பான்மையினரே" ஸ்ரீ லங்கா ஜனாதிபதி

இதுவரை பிராஜவுரிமை இழந்திருந்தோம்~ வீடு வாசல் இழந்திருந்தோம் ~ இப்போது கட்சி இழந்திருக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறுகள் என்று தன்னை தூக்கிக்காட்டும் மலையக தொழிற்சங்கங்கள் செய்த துரோகங்கள் வரலாறுகளாக இருப்பதில்லையா?
எண்ணிப்பார்ப்பார் யாரிங்கே?

உலக நாடுகள் மனித உரிமை மீறல்களில் இலங்கைக்கு இன்று சவாலான நிலையை தந்திருக்கின்றன. இதிலிருந்து தன்னுடைய இராஜதந்திரத்தினையும், சர்வதேச உறவுகளையும் மீண்டும் பேணிக்கொள்ள அதிகாரபகிர்வுடன் கூடிய அரசியலமைப்பு மாற்றத்தினை உலக நாடுகளின் முன்னால் கொடிப்பிடித்து காட்டுகின்றது. 13ம் அரசியலமைப்பு சீர்த்திருத்தத்திற்கு நடுநிலமை வகித்த இந்தியாவானது, இன்னொரு அதிகார பரவலாக்கத்திற்கு தலையிட வேண்டிய நிர்பந்தம் காணப்படுகின்றது. யுத்தத்தின் வெற்றிக்கு உறுதுணையாக நின்ற இந்தியாவுக்கு இலங்கை அடங்கி செயற்படவேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது. மீண்டும் இந்தியாவின் அனுசரணையுடனே இந்த அதிகார பரவலாக்கத்துக்கான முன்னேற்பாடுகள் செய்யப்படுவதினை இலங்கை எதிர்பார்க்கின்றது. இதன் மூலமாகதான் உலக நாடுகளுக்கு தமது நியாய பூர்வத்தினை சரிசெய்யும் ஓர் உத்தியென கருதுகின்றது. இது இவ்வாறிருக்க அவசர அவசரமாக முடிவெடுக்கப்படும் இத்தீர்வு தமிழர்களுக்கு கண்துடைப்பு நிகழ்வாகவே கருத முடியும் என பல்வேறு தரப்புகளும் தன் ஐயத்தினை வெளிபடுத்தி வருகின்றன.

இதனை நிருபிக்கும் வகையில், இலங்கை அரசால் முன்னெடுக்கப்படும் தேர்தல் எல்லை மீள் நிர்ணயம் அமைந்திருக்கிறது. சிறுபான்மையின் மக்களின் பிரதிநிதிகளை, பிரதிநிதித்துவ தேர்தல் முறையிலிருந்து மேலும் குறைக்கவே இந்த திட்டம் அமைக்கப்படுகின்றது என்பது பலரதும் வகைசாடல்களாகும். இந்நடைமுறையானது "கொடுப்பது போல் கொடுத்து பறிக்கும், கண்ணன் திருவிளையாடல் எனக் கொள்ள முடியும். இது அந்நாளிலே ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் சிங்களமயமாக்க கனவு இன்று நனவாகும் சாத்தியப்பாடு இடம்பெற்றுள்ளது. சிறுபான்மை மக்கள் அதிக வாழும் பிரதேசத்தினை ஊடுருவி விதைக்கப்பட்ட சிங்கள குடியேற்ற திட்டங்கள் தேர்தல் எல்லை மீள் உருவாக்கத்தில் போது பாரிய பாதிப்பை சிறுபான்மையினருக்கு ஏற்படுத்தும் என்பது வரலாறுகளின் தீர்க்க தரிசனமாக சிந்தனையாகும். இச்சிந்தனை சிறுபான்மையின மீதான பாதிப்பை மேலும் விரிவுப்படுத்துகின்றது.

# பொய்யர்களின் பிரதிநிதி

**1944ம் ஆண்டு காலக்கட்டத்தில் ஜெர்மன் நாட்டின் சர்வாதிகாரியான ஹிட்லருக்கு பொய்யன்றி வேறொன்றும் அறியாத பிரசார தலைவன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் கோபெல்.!. இவன் ஒரு பொய்யை பல தடவை திருப்பி திருப்பி சொல்லுவதால் அவை மெய்யாகின்றது என்று பொய் சொல்லுவதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தான். திருவாய் மலர்ந்தால் அலங்கார சொற்களில் கற்பனையில் உதிக்கின்ற பொய்கள் அதன் காரணமாக ஜெர்மன் மக்கள் அவன் சொல்கின்ற அனைத்தும் உண்மை என்று நம்பினார்கள். அத்துடன் திறமையான பேச்சாளன். அதன் காரணமாக மக்கள் சிந்திக்கும் தன்மையை இழந்தார்கள். பகுத்தறிவுக்கு இடமில்லாமல் போயிற்று. ஜெர்மன் மக்கள் மோசம் போனார்கள்.**

**இதுபோன்ற மலையக தொழிற்சங்க பிரதிநிதிகளில் பல கோபெல்கள் எம்மிடையே கோபாலனாக இருக்கிறார்கள். இவர்களை நம்பினால் ஜெர்மன் மக்கள் மோசம் போனது போல மலையக மக்களும் மோசம் போக வேண்டிவரும் என்பதற்கு சமிக்கையாக மலையக தொழிற்சங்க வாதிகளின் பொய்கள் மேலாங்கி வருவதினை காணக்கூடியதாக இருக்கிறது.**

**வீட்டுக்கு ரொட்டி நாட்டுக்கு திருகஷ்டி**

## அண்மைக்கால அரசியல் பார்வை

ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவிருக்கும் அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பான வாத பிரதிவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரத்தில் ஐக்கிய தேசிய கட்சி அரசியலமைப்புக்கும்,வரவு - செலவு திட்டத்திற்கும் நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு ஆர்பாட்டங்களை செய்து வருகின்றது.
அரசியலமைப்பு திருத்தம் ஜனாதிபதியின் ஆயுட் காலத்தை நீடித்துக் கொள்ளவும், தற்கால சூழ்நிலையில் சர்வதேசத்திடம் தன்பெயரை ஜனநாயக நாடாகவும், சிறுபான்மையினருக்கு மீண்டுமொரு கண்துடைப்பாகவும் கருதியே அந்த அரசியலமைப்பை உருவாக்க முயற்சிக்கின்றது என குற்றம் சாட்டுகின்றது. இந்த சந்தர்ப்பத்தில் வரவு-செலவு தொடர்பான விவாதங்களும் சூடுப்பிடித்துள்ளன. இந்த நிலையில் ஐ.தே.க, அரசியலமைப்பில் 17வது திருத்த சட்டம் இல்லாமல் செய்யப்பட்டிருக்கிறது, இது முக்கியமாக இதுவரை இருந்து வந்த யுத்தத்திற்கான மூலவேராக அமைந்த மிக முக்கிய காரணியாக அமைகின்றது. இதனை இல்லாது செய்வதன் மூலம் ஐக்கியமான இலங்கையை அமைக்க முடியும் என வாதிடுகின்றது. குறிப்பாக ஐ.தே.க அரச சேவைகள், பொலிஸ், நீதி சேவைகள் போன்ற ஆணைக்குழுக்கள் சுயாதீனமாக அமைக்கப்பட வேண்டும், இது தொடர்பான வாதங்களே இன்று மேலோங்கியுள்ளது.
இது இப்படியிருக்க, இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை ரத்து செய்யப் போவதற்கான சாத்தியக்கூறுகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் அரம்ப கட்டத்தில், இலங்கையின் அபிவிருத்தி முன்னெடுப்புகள் வெகுவாக பாதித்துள்ளது. இதன் போது சுமார் 570 பில்லியன் ரூபா வருடாந்த ஏற்றுமதி வருமானம் பாதித்துள்ளது. இதனைத் தொடர்ந்து இலங்கையின் ஏற்றுமதி வருவாய்கள் சர்வதேச சந்தை கேள்விக்குறியாகியுள்ளது. குறிப்பாக இலங்கையில் ஏற்றுமதி தொழிலை மையமாக வைத்த தொழில்களில் நாட்பது ஆயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் தமது வேலையை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.
எவ்வாறிருப்பினும் இவ்வாறான சிக்கலுக்கு அரசாங்கம் முகங்கொடுக்கத் தயாராகவுள்ளதாகவும், இதற்கான அனைத்து வழிகளையும் தன்னகத்தே கொண்டிருப்பதாக அரசாங்க தரப்பு கூறிவருகின்றது.
சர்வதேச தரப்பில் இலங்கை அரசாங்கத்துக்கு பல சவால்கள் விடக்கப்பட்டுள்ளன.

1. ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை பெற ஐரோப்பிய ஒன்றியத்தின் 15 நிபர்ந்தனைகள்.
2. ஐ.நா வின் விசேட நிபுணர் குழு.
3. அமெரிக்காவின் 'தொழிலாளர் உரிமை மீறல்' குற்றச்சாட்டுக்கள்.
4. இலங்கையின் இராஜதந்திர உறவுகளின் மாற்றம், ரஸ்யா, சீனா, ஈரான், சூடான் போன்ற நாடகளுடனான அதித உறவு.
5. அணிசேரா நாடுகளின் போக்குக்குள் ஆதிக்கம். போன்ற இன்னோரன்ன நடவடிக்கைகள் மேலைத்தேய நாடுகளின் ஆழப் பார்வையை ஏற்படுத்தியுள்ளது. **(21ம் பக்கம் பார்க்க)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ றங்காவின் சாதனை நீடிக்குமா?

இலங்கை பல தேர்தல்களை உள்வாங்கிய ஒரு நாடாகும். ஆனால் மலையகமானது எத்தனையோ தேர்தல்களிலும் பங்குப்பற்றுவதற்கான வாய்ப்பினை பெற்றுக்கொள்ளாத ஒரு சமூகமாக காணப்பட்டது வேதனைக்குறிய விடயமாகும். இருப்பினும் குறிப்பிட்ட காலப்பகுதிகளுக்குப் பிறகு தேர்தலில் பங்குகொள்ளும் வாய்ப்பினை பெற்றுக்கொண்டது. இதற்கு பிறகு பல தேர்தல்களில் தாங்களும் பங்காளிகளானர்கள். இலங்கையின் ஜனாதிபதிகளையும், பிரதமர்களையும், தீர்மானிக்கின்ற ஒரு முக்கியமானதொரு பகுதியாக தாங்கள் இருந்த போதும், தங்களைத் தாங்களே தர்மானித்துக் கொள்ள முடியாத நிலைமை இன்றும் காணப்படுகின்றது.

இந்நிலையில் கடைசியாக முடிவடைந்த பாராளுமன்ற பொதுத்தேர்தலானது பல திருப்பங்களை மலையகத்திற்கு சொல்லிக்கொடுத்தது. மலையகம் ஆரம்பம் முதலே தங்களுக்குள் தாங்களே மாற்றம் வேண்டும் என்று கூறிக்கொண்டிருந்த மலையக தலைமைகளுக்கு மத்தியில் புதியதொரு திசையிலிருந்தும் மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்த முடியும் என்ற சித்தாந்தத்திற்கு செயலுருவம் கொடுத்துள்ளார் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ றங்கா அவர்கள். இவரின் வருகை குறித்தும், வெற்றிக் குறித்தும் பல வேறு கருத்துக்கள், பல மட்டங்களிலும் கூறப்பட்டன. நுவரெலியா மாவட்டத்திலுள்ள வட கிழக்கைச் சேர்ந்த வாக்களார்களினதும், சக்தி தொலைக்காட்சி மற்றும் சக்தி வானொலி என்பனவற்றின் பின்புலத்தினாலேயே வெற்றி பெற்றார் என்ற கருத்து மேலோங்கியிருந்தது. எவ்வாறாயினும் நுவரெலியா மாவட்டத்தின் வாக்காளர்களினாலே ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவரே ஸ்ரீ றங்கா என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் தொழிற்சங்கத்தை மையப்படுத்திய அரசியல் பிரதிநிதித்துவமே இதுவரை காலமும் இழையோடியிருந்தது. ஆனால் இம்முறை தொழிற்சங்க அரசியலை விட்டு தன்னால் கட்சி ரீதியாக அரசியலில் தமிழ் மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார் றங்கா. இன்று மலையகத்தில் ஏறத்தாழ 15 லட்சம் மக்களில் சுமார் 250,000 மக்களுக்கு குறைவானவர்களே தோட்ட தொழிலாளர்களாக இருக்கின்றார்கள். மலையக தோட்ட தொழிலாளர்களை மையப்படுத்தியதாகவே மலையக மக்களின் வாழ்க்கை அமைந்துள்ளது. இருப்பினும் ஏனைய பதின்மூன்று லட்ச மக்களின் உரிமைக்கான தேவைகளை பூர்த்தி செய்வதற்காக எந்தவொரு அரசியல் கட்சியும் அதிக சிரத்தை கொள்வதில்லை என்பதே மலையகத்தில் தொடர்ந்து வந்த குற்றசாட்டாகும். இந்த குற்ற சாட்டினை இல்லாமல் ஒழிப்பதற்காகவே தோற்றம் பெற்றவரா? ஸ்ரீ றங்கா, என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டியதொன்றாகும்.



இதத்தனை தேர்தலில்களிலும் மலையக மக்கள், சோத்துபார்சலுக்கும், சாராய போத்தலுக்கும் சோரம்போனவர்கள் என்ற சிந்தனையை மாற்றி, இத்தேர்தலில் மலையக மாணவர்களின் எதிர்கால நிலைமை மற்றும் இளைஞர்களின் எண்ணக்குமுறல் என்பவற்றை கருத்திற் கொண்டு ஸ்ரீ றங்காவை வெற்றிபெற செய்துள்ளார்கள். இனிவரும் காலங்களிலும் சோரம்போகும் நிலையா? சுயசிந்தனையா, மக்களிடம் நிலைத்து நிற்க போகின்றது என்பதனை மலையகத்துக்கு ஸ்ரீறங்காவால் செய்யப்போகும் சேவைகள் தீர்மானிக்கப் போகின்றன. இன்று தேர்தல்களில் பிரசாரங்களுக்காக செலவிடப்படுகின்ற தொகையினைக் கொண்டு மலையகத்தில் வேறு பல புதிய அபிவிருத்தி மாற்றங்களை செய்யமுடியும். தேர்தல்களில் அநாவசிய மற்றும் ஆடம்பர செலவுகளை புறந்தள்ளி, மக்களோடு மக்களாக ஒன்றிணைந்து புதியதொரு அத்தியாயத்தைத் தோற்றுவித்துள்ளார். எதிர்வரும் காலங்களில் மலையகத்தின் ஏனைய தலைமைகள் போல தொழிற்சங்கள் ஆரம்பிக்கப் போகிறாரா? என்ற கேள்வி பலரது மனதிலும் நெருப்பாய் எரிந்துக் கொண்டிருந்தது. அதேப்போல அவரும் தொழிற்சங்கம் அமைக்கும் நடவடிக்கைகளில் முன்னிற்பதனைக் காணலாம் இது அவர் எவ்விதமான அரசியல் நகர்வுகளை செய்யப் போகிறார் என்பதனை ஒரு கேள்விக்கு உள்ளாக்கியுள்ளதனைக் காணலாம். இவ்வாறான செயற்பாடுகளினால் அவரது எதிர்கால அரசியல் கேள்விக்குறியாகும் என பலதரப்பும் கருதுவது கண்கூடு. இதனைத் தாண்டி எஞ்சியிருக்கும் பலதரப்பட்ட தரப்பினையும் திருப்தி படுத்தும் வகையில் தமது அரசியல் வியூகத்தை தீர்மானிப்பாரா? அல்லது மலையகத்தை மீண்டும் "பழைய குருடி கதவை திறடி" என பாதாளத்தில் தள்ளுவாராயின், மலையக மக்களுக்கு அந்நாளில் பிராஜவுரிமை சட்டத்திற்கு ஆதரவளித்த ஜீ.ஜீ. பொன்னம்பலம் இழைத்த துரோகத்தை மீண்டும் ஒப்பிவிக்கும் செயலாகிவிடும். இருப்பினும் அவரின் அரசியல் சாணக்கியம், அரசியல் அறிவு, மலையக மக்கள் மீதான அன்பு கொண்ட இவர், அதற்கு நேர்மாறாக நடக்கமாட்டார் என்பது அனைவரின் எதிர்பார்பபாகும்.

இலங்கையில் மேற்கொள்ளப்படவுள்ள அரசியல் அமைப்பு மறுசீரமைப்புத் திட்டம் தேர்தல்முறை மாற்றம், தமிழ் பிரதிநிதித்துவத்தை இனிவரும் காலங்களில் தக்கவைத்துக் கொள்ளுவதற்கான யோசனைகள், உள்ளுராட்சி அமைப்புகள், கிராம உத்தியோகப்பிரிவுகள் என்பவற்றுக்கான அரசினது மீள் எல்லை நிர்ணயமும் மலையக பிரதேசமும், மலையக மக்களின் எதிர்கால அரசியல் நகர்வுகள். தலைநகரத்தில் மலையக இளைஞர்களின் பாதுகாப்பு மற்றும் இருப்பு, மலையக மாணவர்களின் எதிர்காலம் இளைஞர் யுவதிகளின் தொழில்வாய்ப்பு, தோட்ட தொழிலாளர்களின் வேதனம் போன்றவற்றுக்குச் சந்தாவை மையப்படுத்திய தொழிற்சங்க ரீதியற்ற அரசியல் நகர்வுகளை மேற்கொள்ளும் தன்மைகள் மற்றும் காலப்போக்கிலான அரசியல் நகர்வுகளுக்கு மலையக மக்களைத் தயார்படுத்தல் என்பனவற்றை புதிய தலைவர் ஸ்ரீறங்கா அவர்கள் கவனம் செலுத்துவார் என்பது மலையகத்தில் பல தரப்பட்ட மக்களினதும் அபிலாசைகளாக காணப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தொடர்கதை

# 'கண்ணான கண்மணிக்கு கதை கேட்க ஆசையில்லை'

மலையக இளைஞர் பேரவை கலை, இலக்கிய குழுவினரால், 1989 செப்டம்பர் காலப்பகுதியில் வெளியிடப்பட்ட தி.இரா.கோபாலனின் **'கண்ணான கண்மணிக்கு கதை கேட்க ஆசையில்லை'** நாவல் மிக முக்கியமான இலக்கியப் படைப்பாக அமைந்திருந்தது. இலக்கியத்துக்கு உயிர் இருந்தால் அதை சுற்றிலும் வாசகரகள இருப்பார்கள் என்பது கதாசிரியரின் கருத்து. 1989ம் ஆண்டு வெளிவந்த நாவலை மீண்டும் வாசக நெஞ்சங்களுக்கு தருவதிலும், கதாசிரியரின் இலக்கியப் படைப்பினை பாராட்டும் வகையிலும் தாக்கம் சஞ்சிகையில் தொடர் கதையாக தரவிருக்கின்றோம். கதாசிரியர் தனது முன்னுரையில் மலையகம் என்ற வளம் தரும் நங்கையின் வண்ண உடம்பிலே நெளியும் பசும் போர்வையை ஒரு தரம் உற்று நோக்கினேன். நோக்குங்கால் ஏற்பட்ட விசால உணர்வுகள் சரித்திரப் போர்வையில் தீட்டப்பட்ட வாழ்க்கை கவிதைகளை வாசிக்கத் தொடங்கின. உணர்வுகளின் வாசிப்பினால் கிடைத்த மாபெரும் உண்மை "கந்தன்" என்ற பாத்திரம் மலையகமெங்கும் பல்வேறு வடிவங்களிலான 'கந்தன்' எனும் வாழ்வுக் கவிதைகள் புதைந்துக் கிடப்பதை என் மனம் பார்க்க தொடங்கியது. உணர்வுகளின் வாசிப்பு, எண்ணங்களின் பார்வை இரண்டும் ஒரு வாழ்க்கைக் கோலம்தான் இந்த கதை.

இதுப்பற்றி மேலும் குறிப்பிடுகையில், சிறுகதையாக அமைந்த இந்த கதையினை வாசித்த என் அன்பு மருமகன்மார்களான திரு. கிருஷ்ணமூர்த்தி, திரு. குணசேகரன் ஆகிய இருவரும் என் உணர்வுகளை மீண்டும் தட்டியெழுப்பி, அதனை நல்ல நாவலாக வெளிவர உற்சாகப்படுத்தினார்கள். அதே வகையில் என் அன்பு நண்பன் திரு. வி.எல். பெரைரா (ஸ்தாபகர், தலைவர் - மலையகப் பேரவை) இலக்கிய உள்ளங்கொண்டவர் என்பதால் அது மீண்டும் நூலுருவாக தோற்றம் கண்டது. புத்தக வடிவில் வெளிவந்த **'கண்ணான கண்மணிக்கு கதை கேட்க ஆசையில்லை'** நாவலுக்கு முழுப் பொறுப்பையும் திரு. வி. எல். பெரைரா பெறுப்பேற்றிருந்தார். இந்த நாவலுக்கு திரு.செ.கணேசலிங்கம் (கொழும்பு) அணிந்துரை வழங்கியிருந்தார்.

**கதாசிரியர் அறிமுகம்**

தி.இரா.கோபாலன் (திருமலை இராஜகோபால்) மலையகத்தைப் பிறப்பிமாகக் கொண்ட அனுபவம் செறிந்த எழுத்தாளர். நாவலப்பிட்டி பரிசுத்த அந்திரேயாக் கல்லூரியின் பழைய மாணவரான திரு. கோபாலனின் முதற் சிறு கதை 'கண்ணாடி' 1962 ஆம் ஆண்டில் ' கலைச் செல்வி' இதழில் வெளியானது.

'நர்மதா' என்ற புனைப்பெயரில் அறுபதுகளில் கல்கியிலும் எழுதியுள்ளார். மலையக மண்வாசனையுடன் நாவல்களை படைக்கும் கோபாலன், பூண்டுலோயா கைப்புக்கலை தோட்டத்தில் வசிக்கிறார். இந்நூல் இவர் எழுதிய ஐந்தாவது நாவலாகும்.

தான் படைக்கும் ஒவ்வொரு கதாபாத்திரமும் வாசகர் மனதில் நிரந்திரமாக வாழவேண்டும் எனக்கூறும் இக்கதையாசிரியர் பயனற்ற எழுத்துக்களையும் இலக்கியங்களையும் படைப்பதை எழுத்தாளர்கள் நிறுத்திக்கொள்ள வேண்டும் என கூறுகின்றார். மலையக குழந்தைகளின் கல்வியில் மிக அக்கறை கொண்டவர் இவர்.

இலங்கையில் எழுத்தாளர்களின் சிந்தனைகள் வாசகர் மனங்களுக்குப் போய் சேருவதற்கு நீண்டகாலம் பிடிக்கும் என்பது இவரின் வாதம். மலையக எழுத்தாளர்களின் படைப்புகள் அச்சாகிப் பிரசுரமாதற்கு தொண்டர் தாபனங்கள் உதவியளிக்க வேண்டும் என அக்கால கட்டங்களிலே தனது பிரகடனத்தை வெளியிட்டவர்.

மனிதனின் நாகரீகம் மொழி – மொழியின் நாகரீகம் கவிதை" என்ற வரிகளை மீண்டும் மீண்டும் படித்தேன். இந்தக் கருத்துகளின் உண்மை எவ்வளவு ஆழமானது எத்தனை உயர்ந்தது. தமிழ் மொழியின் இயல்பை உணரும் போதெல்லாம் என் நினைவுக்கு வருவது ஆழமும் உயரமும்தான். ஆழ்ந்த தமிழ் என்று அடிக்கடி உணர்வதுண்டு.

திரு.நா.பார்த்தசாரதியின் நாவல்களைக் கையில் வைத்துக்கொண்டிருக்கும் ஒரு மனிதனின் எண்ணங்கள் இவைகள். அவருடைய கதாபாத்திரங்களின் தமிழ் வடிவங்கள் எத்தனை சிறப்புமிக்கவை. அத்தனையும் பொன் விலங்களாக மாறி என் இதயத்தைச் சிறை பிடித்தன.

ஏதேனும் எழுத வேண்டுமே என்ற துடிப்பினால் "வேதம்" என்ற பெயரில் எழுதிக் கொண்டிருந்த எனக்கு அன்புத் தொல்லை தரும் ஒரு மனித இயந்திரம் குமார். சில வேளைகளில் தொல்லைகள் மிக இன்பமாகவும் அமைவதுண்டு. குமார் பிறவிக் கலைஞன். அவனுடைய கலை வெறியை கிராமத்துக் கலைஞர்களின் வெளிப்பாடுகளை ஒலிப்பதிவு செய்து, வானொலியில் ஒலிப்பரப்புச் செய்து தீர்த்துக்கொள்வது வழக்கம். பசிக்குப் பல்வேறு நோக்கங்கள் உண்டு. குமாரின் நோக்கம் உயர்வானது. நாட்டுக் கலைகள் அவனைத் தொட்டுவிட்டால் போதும் தன்னை மறந்து ஆழ்ந்துவிடுவான்.

"என்னப்பா வேதம்" என்று வந்து கொண்டே கேட்டான். "அடடே ! ஒனக்குப் பெரிய ஆயிசு இப்பதான் ஒன்ன நெனச்சுக்கிட்டே இருந்தேன். லபக்குன்னு வந்து முன்னே நிக்கிறே"

"அதுல பாரு வேதம்! நீயும் இப்படித்தான் எந்த நாளும் சொல்ற, ஆயிசு ஆயுசுன்னு. நானோ நாளுக்கு நாளு நோயாளியாகிக்கிட்டு வாரேன். எது எப்படியோ ஒவ்வொரு நாளும் நம்ம ஆயிசுக் குறைகிறதுதான் உண்ம".

"போகட்டும் ஒ கலை வாழ்க்கை எப்படி இருக்குது. ஏதோ ஜமாய்கிறதாக் கேள்வி"

"ம்.... ம்.... ஒனக்குத் தெரியாத வாழ்க்கையா? எல்லாமே ஒரு பணிதான். சிதறிக் கெடக்குது கலைகள். கூட்டி ஒன்று சேக்கிறது என் வேலை. சுருக்கமாகச் சொல்லப்போனா நான் ஒரு தோட்டி., கலைத் தோட்டி.

"நல்லாச் சொன்ன போ. அதே வேலையத்தான நானும் பாக்கிறேன். நீ கலையத் தேடறே. நான் கலையா வாழ்ந்த வாழ்க்கைகளைத் தேடறேன்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ம்"...வேதம். நாளைக்குக் காலையில நாகரீகமில்லாத தோட்டப்பகுதிக்குப் போறோம்.
"நாகரீகமில்லன்னா...வௌங்கலேயே?.
"மனசால அவங்க நாகரீகமானவங்கதான். ஆனா உலகம் எதிர்பார்க்கிற நாகரீகம் அது இல்லியே...ரேடியோ, டெலிவிசன், கார், பங்களா, பட்டு சேலை எலக்ட்ரானிக் வாட்சு, பளபளக்கும் உடைகள்....ம்..."
"அப்புறம் சினிமா, டிராமா...லக்சரி..லக்சரி..அப்படித்தானே"
"அதேதான்...இது எல்லாத்துலயும் உண்மைமையக் காணோம்"
குமார் அலுப்பு தட்டச் சொன்னான்.
"ஆமா...உண்ம செத்துப் போயிட்டதாகக் கிட்டத்துல படிச்ச ஞாபகம்" நான் நிமிர்ந்து உட்கார்ந்தேன்.
"எங்கயோ போயி ஒளிஞ்சிங்கிட்டதாக இன்னொரு செய்தி" குமார் இப்படி சொன்னதும் இருவரும் சேர்ந்து சிரித்தோம். குமாரைக் கண்டாலே என் கவலைகளெல்லாம் மறைந்து விடும்.
அது சரி வேதம். நாளைக்கு காலையில நீயும் எங்களோட வார. ரெண்டு நாளைக்கு நிகழ்ச்சிகள் பதிவு பண்ணுறம். நீ என்னவோ எழுபது, எண்பதுகளெல்லாம் பேட்டி எடுக்கறியே, அதுக்கு ஒரு பெரியவரை "செட்" பண்ணியிருக்கிறம். அவருடைய வாலிப கால வாழ்க்கையை எழுது."
" ரொம்ப தாங்க்ஸ் குமார். அதுல பாரு இப்போதைய வாழ்க்கய நாம கண்ணாத பார்க்கறம். ஐம்பது அறுபது வருசத்துக்கு முந்தின வாழ்க்கை? நாம கேட்டுத்தானே தெரிஞ்சுக்கணும்?"
"ஆண்டவா என் "வேதம்" பயிபயித்தியத்துக்காக இப்ப இருக்கிய பெரியவங்களயெல்லாம் நூறு வயசுக்கு வாழ வெய்யி" கண்களை மூடிக் கை கூப்பினான்.
"டே..டே என்ன பயித்தியம்னு சொல்லிட்டு இதுல ஒரு பிராத்தனையா? உடு ஆள"- நான் கத்தினேன். அடுத்த நாள் "குயீன்லோ" தோட்டப் புறங்களுக்குப் போகிற பயணம் ஆயத்தம் ஆனது.
"குமார் சுறுசுறுப்பாக இயங்கினான். குமாரின் எடிட்டர் அன்று வராததால் அந்த பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன். குமார் உடுத்திக்கொண்டே பேசினான். "வேதம்.. அங்க வந்து ஓங் கெழடுகள நெனச்சிக்கிட்டே கோட்ட விட்டுறாத. எடிட்டிங் ஒழுங்கா மட்டுமல்ல பிரமாதமாகவும் இருக்கணும், வௌங்கிச்சோ"
"ஏதோ " மெக்சிமம்" நல்லா செய்யிறன் போதுமா?
"ம்..ம்..." பெரிய அதிகாரிப் போல" உம்" கொட்டினான் குமார்.
"சரிங்க..." மரியாதையாகப் பதிலளித்தேன். அதற்கு பதிலாகக் குமாரிடமிருந்து ஒரு முறைப்பு.
குமாரின் கலைப்பணியை உள்ளுக்குள் ரசித்த வண்ணம் சுறுசுறுப்படைந்தேன்.
பைல்கள் "டேப் ரெக்காடிங்" கருவிகள், உடைகள், உணவுப்பார்சல்கள் எல்லாம் வேனில் ஏற்றப்பட்டன. எங்களோடு இன்னம் இருவர், அப்புறம் டிரைவர் எல்லாமாக ஐந்துபேர்.

வெளியே வந்து கிழக்கு வாகனத்தைப் பார்த்தேன். சூரிய பகவானை வணங்கினேன். "உலகை இயக்கும் பகவானே உன் வெளிச்சமும் அதன் சக்தியும் இன்றைய தினத்தை உயிரோட்டமுள்ளதாக வைக்கட்டும். உனக்கு எங்களின் கோடி வணக்கம்" சொல்லிவிட்டுத் திரும்பினேன். குமார் பின்னால் ஒரு ஞானியைப் போல நின்றான்.
"குமார் ஒவ்வொரு நிமிசத்தையும் திட்டமிட்டுச் செலவு செய்யறியே யூ-ஆர் த கிரேட்" நான் இப்படி சொன்னதும் என் கைகளைப் பற்றினான். அவன் கண்களை உற்றுப் பார்த்தேன் அது இலேசாக்
கலங்கியிருந்தது.
வேன் மெதுவாகச் சென்று கொண்டிருந்தது.
மலையகத்து நெடுஞ்சாலை, டிரைவருக்கு மும்முனைச் சிரமம். முதலாவது சிரமம் சாலையின் வளைவுகள், இரண்டாவது தொல்லை ஏற்றம் இறக்கம், அப்புறம் ஒரு புதிய எரிச்சல்-சால்லை குழிகள். இத்தனையையும் சமாளிக்கும் வாகனச்சாரதிகள். ஐயோ பாவம்! வானில் பயணம் செய்த தமிழ்ப் பணியாளர்களின் மனோநிலை வித்தியாசமாக இருந்தது. குமாரின் கண்களுக்கு ஒவ்வொரு தேயிலைச் செடியும் அதனை இலங்கைக்கு அறிமுகப்படுத்திய " டாக்டர் த்வெயிட்சின்" கலை மேடையை அலங்கரிக்கும் நாயகர்களாக தோன்றின. நினைத்துக்கொண்டு பார்க்கின்றோமோ அதுவே நம்முடைய காட்சியாகி விடுகிறது.

வேன் சிரமத்துடன் நகர்வதுபோல இருந்தது. அது குமாருக்கு மிகவும் அசௌகரியமாகப் போவிட்டது.
கலை நிகழ்ச்சிகளின் - எனது கடமை பற்றி எனக்குள் நான் புடம் போடத் தொடங்கினேன் என் மனம் எப்போதுமே வெறுமையாக இருந்ததில்லை. அப்படி இருப்பதை நான் விரும்பவும் இல்லை. அனைத்து சூழ்நிலையும் பக்குவமாக இருந்தன, வேன் கண்டியிலிருந்து முப்பதாவது கிலோமீட்டர் தூரத்தில் போய்க்கொண்டிருந்தது. அட்டனிலிருந்து இருபது கிலோமீட்டர், இன்னும் முப்பது கிலோ மீட்டர் மலைப்பகுதியில், வேனில் பயணம் செய்த அத்தனை பேருக்குமிடையிடையே சுகமான மௌனம் பின்னல் வேலை செய்துகொண்டிருந்தது.
மௌனத்துக்கு ஆப்பு வைத்த நான் பேசினேன். "என்ன குமார் சிந்தன பெரிசா இருக்கே"
அதில்ல வேதம்".தேயிலைக்கு வயசு நம்ம நாட்டப் பொறுத்தவரை நூத்தி இருபதாச்சு, இரண்டாயிரம் ஆண்டு வரை தாங்குமா?

என்ன நூற்றி இருவது வருசம் தாங்குனது, இன்னம் பத்து வருசம் பேரு போடாதா?
முடிஞ்சது என்னவோ நூறு வருசம்தான், ஆனா போற போக்கப் பாத்தா வரப்போற பத்து வருசம் முடிஞ்சிக்கிற நூறு வருசத்துக்கு சமப்படுத்தலாம். காலம் என்னவோ என்னைப் பொறுத்த வரைக்கும் " ஈக்குவலாத் தெரியல"
அடடே! குமாருக்கும் "ஐன்ஸ்டைன் தியரி"யெல்லாம் தெரியுதே? நான்கூட ஒன்னய என்னமோன்னு நெனச்சேன்" என்று கூறி நிறுத்தினேன். குமாரின் அபாரமான கால கண்ணோட்டத்தை உணர்ந்து வியந்தேன். குமார் ஏதோ பொம்மைகளை வைத்து விளையாடும் சிறுவனைப் போல அவனுடைய கலைத் தொழிலைப் பார்த்து நான் நினைத்ததுண்டு. ஒரு மனிதனின் மேல் மட்டம் எப்படியிருந்த போதும் ஆழமான அடிமட்டத்துக்குள் துளிர்விட்டு வளரும் அற்புதச் செடிகளை இன்னொரு மனிதனால் உணர முடியவில்லையே என்பதையும் நினைக்கும் போது இந்த சமுதாயத்தின் மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.
திடிரென்று "பிரெக்" போட்டு நிறுத்தியதும் குலுங்கள் வழியாக நானும் குமாரும் இவ்வுலகுக்கு மீண்டோம் வேன் "சமர்செட்" தோட்டத்தைக் கடக்க முயன்று கொண்டிருந்த போதே இந்த "பிரேக்" வேலை செய்தது. நடுச்சாலைக்குச் சற்றுத் தள்ளி ஒரு பெரியார் விழுந்துக் கிடந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் குமாரும் உதவியாளர்களும் இறங்கினோம். அவரை அசைத்து ஓரமாக உட்கார வைத்தோம். யாரோ பிச்சைக்காரர் போல அவர் கையில் சில்லறைகளைத் திணித்துவிட்டுப் பயணத்தைத் தொடர்ந்தோம்.

“வேதம்...நல்ல வேளை அவருக்குச் சுயநினைவு அவ்வளவாக இல்லை, இருந்தா...இங்கேய பேட்டிக்காக ஒக்காந்துகுவ எங்க வேலை அம்போதான்...!.

“கிண்டலா குமார்..” என்று சொல்லிவிட்டு வெளியே பார்த்தேன். 'சமர் செட்' என்று பெரிய எழுத்தக்களான போர்டு.

“குமார்...இந்த பேரைப் பார்க்கும் போது 'சமர்செட் என்ற ஆங்கில நாவலாசிரியர்தான் நெனவுக்கு வருது. அங்கில நாவல் துறையில் அவரு செஞ்சிருக்கிகிற சாதனை... அப்பப்பா... அத்தனை பெரிய பெயர். இந்த தோட்டத்துக்கா?... கொடுத்து வைத்தவர்கள். இந்தத் தோட்டத்து மக்கள்...” என்று சொல்லிக்கொண்டே பைல்களை புரட்ட ஆரம்பித்தேன்.

“ம் குடுத்து வைச்சவுங்கதான்...அது அவுங்களுக்கு தெரிஞ்சிருந்தா? குமார் இப்படி சொன்னதும் எல்லாரும் சிரித்தோம். வேன் குறுக்குச்சாலை வழியாகச் சென்றது. ஏற்றமான மலைப்பாதை வானம் வெளுத்து வெள்ளி மழை பெய்தது. சூரியனின் ஒளி வெள்ளத்தினால் உலகம் மெதுவாக இன்பமான நடனம் ஆடுவதைப் போல எனக்குப்பட்டது.

பதினோர் மணிக்கு நாங்கள் அடைய வேண்டிய குயில்லோ தோட்டத்துக்குச் சென்றோம். 'அப்பாடா' என்று டிரைவர் வேனை அந்தத் தோட்டத்துக் கணக்கப்பிள்ளை வீட்டருகே நிறுத்தினார். அன்று சனிக்கிழமை ஆதலால் தொழிலாளர்கள் வேலைக்கு போகவில்லை. கூட்டம் கூடிவிட்டது. அம்மன் கோவில் மண்டபத்தில் எங்கள் உபகரணங்களை எடுத்துச் சென்றோம். அறுபத்துக்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகள். எனக்கு பெரும் மலைப்பாக இருந்தது.

“என்னடா இது குமார் இவ்வளவு நிகழ்ச்சிகளா?”

“இதென்ன சிம்பள்..” அலட்சியமாகப் பதிலளித்தான் மக்கள் கூட்டம் அம்மன் கோவில் நிரம்பி வழிந்தது. அம்மன் வணங்கிவிட்டு வெளியே வந்தேன். நாலைந்து பேர் ஒரு பெரியாரைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். 'ஐயா.. இவருக்கு ஒரு பேட்டி நிகழ்ச்சி, கொஞ்சம் சொகமில்ல மொதல்ல இவுருவேலய முடிச்சு அனுப்பிடுங்க ஒரு மைலுக்கு அந்தப் பக்கம் இருந்து வந்திருக்காரு” “ஆங்”..குமாரும் நானும் யோசித்தோம். உங்கள் ஆலோசனைக்கு ஐந்து நிமிடங்கள் ஆகிவிட்டன. அவர்களும் பதிலுக்காக பாத்து நின்றார்கள்.

“வேதம்...ம்...சரி...இது ஒன் நிகழ்ச்சிதானே மொதல்ல இதப்பார்போம் வந்த உடனே உனக்கு தீனி கெடச்சிருக்கு..ம் ம் ஒங்க காட்டுல மழ பெய்யுது” குமார் சொன்னான் சிரிக்காமல். மற்றவர்கள் சிரித்தார்கள்.

சற்று நேரத்தில் முதல் நிகழ்ச்சியாகப் பெரியவரின் பேட்டி ஆரம்பமானது.

நான் ஆரம்பித்தேன் “ம் ஒங்க பேரு?” “மாடசாமிங்க.. மாடன்னு எல்லாம் கூப்பிடுவாங்க!”

“வயசு எத்தனை?”

“ஏன்..இந்த ஆடி பொறந்தா எழுவதெட்டுங்க”

“ஒங்கள பத்தி ஒங்க இளமைக் காலத்தைப் பற்றி சுருக்கமாக சொல்ல முடியுமா?”

பெரியவர் யோசித்தார். இலேசான இருமல், குழி விழுந்த கன்னங்களில் “தொய்ந்த” வெள்ளை முடிகள் சிலித்தன.

“ஐயா..” நிறுத்தினார்.

“ம்... சொல்லுங்க” நான் இடைவேளையின்றி பேசினேன்.

“என்னபத்தி...நான்...ஒன்னுஞ் சொல்ல இங்க வரல...” மீண்டும் நிறுத்தினார்.

“தொடர்ந்து சொல்லுங்கோ”

“அந்தக் காலத்துல சோளங்கந்தேன்னு ஒரு தோட்டம் அதுல நானிருந்தேன்.”

“அது எத்தனை வருடக்கிற்கு முந்தி?”

“முப்பது வருசத்துக்கு முந்தி அந்தத் தோட்டத்தில 'கந்தன்னு' ஒருத்தர் இருந்தாரு அவரு கதைய சொல்லுட்டுங்களா?

“சொல்லுங்களே”

பெரியவர் விழிகளில் ஒரு மாபெரும் வெளிச்சம். அந்த வெளிச்சம் இப்படிப் பேசியது “சோளங்கந்தை கந்தன் கதைய யாரிடமாவது பொறுப்பானவங்ககிட்ட சொல்லனும் போல இருந்திச்சி...நீங்க வந்துட்டீங்க. எனக்கு எத்தனை சந்தோஷம்..!

சோளங்கந்தை கந்தனின் கதையைப் பெரியவர் தனக்கே உரிதான எளிமையான தோட்டத் தமிழ் நடையில் சொல்லத் தொடங்கினார். எனது மனம் என்னும் இலக்கிய கொம்பியூட்டர் அந்த வார்த்தைகளை வடிவமிட்டுப் பதிவு செய்யத் தொடங்கியது. குமாரின் ஒலிப்பதிவு நாடாவும் முறையாக-அழகாக சுழன்றது.

............கந்தன் வருவான்............



வாசகராவதன் மூலம் எழுத்தாளரை கௌரவிப்போம்.

## வீட்டுக்கு ரொட்டி....... 17ம் பக்க தொடர்ச்சி

இவ்வாறான முக்கியப் பிரச்சினைகளைக் கொண்டு சர்வதேசத்தின் கெடுபிடிகள் காணப்படுகின்றன. இவ்வாறான நிலையில் ஐ.தே.க அனைத்து அரசியல் தரப்புகளுக்கும் தம்மொடு இணைந்து அரசாங்கத்துக்கு எதிராக போராட அழைப்பு விடுத்திருக்கிறது. மலையகத்தில் காணப்படும் அரசியல் கட்சிகள் பெரும்பாலானவை அரசாங்கத்தின் பங்காளிகளாகவே இருக்கின்றனர். ஐ.தே.க வின் சார்பாக தேர்தல் களத்தில் நின்று வெற்றியீட்டிய கட்சிகளும் பாராளுமன்றத்தில் தனித்து இயங்குவதாக தமது முடிவுகளை வெளிபடுத்தியிருக்கும் பட்சத்தில், மலையகத்தில் அது தொடர்பான முன்னெடுப்புகள் கேள்விக்குறியே!.

மலையக மக்கள் தங்களினுடைய சம்பளவுயர்வு கோரிக்கையிலே சோர்ந்து போயிருக்கிறார்கள். இந்த சந்தர்பத்தில் வரவு செலவு திட்டத்துக்கு முன்பாகவே கோதுமை மாவினுடைய விலை அதிகரிப்பு மேலும் அவர்களிடையே மனவேதனையை தந்திருக்கின்றது. இலங்கை அரசு விவசாயிகளுக்கு வழங்கிவரும் உர மானியம் போல் கோதுமை மாவுக்கும் மானிய விலையை கோரிநிற்கிறார்கள். இது தொடர்பாக மலையக தொழிற்சங்கங்களும், அரசியல் கட்சிகளும் எதுவித கரிசனைகளையும் கொண்டிருப்பதாக தெரியவில்லை. இது தொடர்பாக ஜே.வி.பி முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் மாத்திரமே தனது அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மலையக மக்கள் தொடர்பாக வரவு-செலவு திட்டத்தில் எதுவிதமான அபிவிருத்தி திட்டங்களையும் அரசும் முன்வைக்கவில்லை. கால்நடை அபிவிருத்தி மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு மூலமாக பெருந்தோட்ட தொழிலாளர் பெற்றுக் கொள்ளப்போகும் உச்சக்கட்ட பலன் எப்படி அமையப்போகின்றது என்பது பற்றிய சந்தேகங்கள் எழுந்த வண்ணம் உள்ளன. எனவே இது போன்ற அடிப்படை தேவைகளை முன்வைத்தாவது அரசுக்கு அழுத்தம் கொடுக்க மலையக அரசியல் தலைமைகள் முன்வருவார்களா? என்பது அனைவரினதும் எதிர்பார்ப்பாகவுள்ளது. அரசியல் என்பது தேசிய ரீதியில் பானும்-பான் கீ மூனும் என்ற நகர்வில் இருந்து மலையகப் பார்வையில் வீட்டுக்கும், நாட்டுக்கும் திரு~;டியாகவே இருக்க போகிறது என்பதாக இருக்கிறது.

தொழில் வாய்ப்புகள் அனைத்தும் வட-கிழக்கை மையமாக வைத்தே திசைத்திரும்பியுள்ளது. மலையகத்தின் ஆசிரியர் தொழில் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து வேலைவாய்ப்பு வெற்றிடம் நிறைவு பெற்று விட்டதாகவே அனைத்து தரப்புகளும் பெருமூச்சு விடுகின்றன. இன்று மலையகத்தில் தொழில் பேட்டையாக மாறியிருக்கும் பாடசாலைகளும் பூரணப்படுத்தப்பட்ட கல்விக்கூடமாக மாறவில்லை. அனேக பட்டதாரிகள் தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகளுக்கு சேவைபுரிந்ததன் நன்றிக் கடனாக, அமைச்சுகளில் கூலித்தொழில் நடத்தி வருகிறார்கள். சுயசிந்தனையிலிருந்து மாறுபடுவோருக்கு பொருத்தமாக அமையும் சில தொழில்கள் பலருக்கு பொருத்தமற்றதாக அமையக்கூடும். இவ்வாறான ஓட்டம் நீண்ட கால பயணமாக அமைய முடியாது. மலையகத்தில் வருடா வருடம் 500 பட்டதாரிகளை உருவாக்குவதே தமது இலட்சியமாக கருதி வழிவழியாக வரும் மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சு பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு வழங்குதல் தொடர்பாக சிந்திக்க வேண்டும். இலங்கையின் தெற்கு பகுதியிலிருந்து ஆரம்பித்த வேலையில்லாத பிரச்சினை பின்பு அரசாங்கத்து எதிராக கிளர்ச்சியாக வடிவெடுத்து பயங்கரவாத செயலாக மாறி வந்தமையை ஈங்கு குறிப்பிடலாம். எனவே சிந்திக்க கூடிய மனிதர்களாய் எதிர்காலத்துக்கான திட்டங்களை முன்னெடுக்க வேண்டியது தலையாய கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் சிந்தனைக்காக



## இடைக்காட்டுச் சித்தர்

இடைக்காட்டு சித்தர்"-ன்னு ஒருத்தர் இருந்தார். சித்தர்கள் காலமே கி.பி பத்தாம் நூற்றாண்டுன்னு சொல்றாங்க. அதன் பின்தோ... நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர் இந்த இடைக்காட்டு சித்தர். இடைக்காடு என்பது இந்தியாவில உள்ள ஊர் போலயிருக்கு. அதனால்தான் இவருக்கு இப்பெயர்வர காரணமாக இருந்திருக்கும். ஞான மார்க்கத்துலெ ரொம்ப பற்றுள்ளவராக இவர் இருந்திருக்கார். அவர் கண்டறிஞ்ச உண்மைகளை பாமர மக்களுக்கு புரியிற மாதிரி பாடினார். பத்தாம் நூற்றாண்டிலே அவரு பாடிவச்ச பாட்டெல்லாம் இருபதொறாம் நூற்றாண்டிலே இருக்கிற நமக்கும் ரொம்ப பொருத்தமாத்தான் இருக்கு. எதைப்பார்த்தாலும் அது மேலே ஆசைப்பறது மனசோட இயல்பு. சின்னப் பிள்ளையிலேயிருந்தே இந்த குணம் இருந்துகிட்டிருக்கு! எத்தனை குழந்தைங்க? நிலாவைப் பார்த்தா உடனே அதை பிடிச்சுக்குடுன்னு அடம் பண்ண ஆரம்பிச்சுடும்! நம்மாலே அது முடியாத காரியம் நிலாவை இங்கேயிருந்து கையை நீட்டித் தொடணும்ன்னாவே நம்ம கையோட நீளம். 2.5 லட்சம் மைல் இருக்கணும். அவ்வளவு நீளமான கைக்கு எங்கே போறது..? அதனாலேதான் நிலாவைப் பிடிச்சுகுடுன்னு குழந்தை அடம் பண்ணினா நிலாவை நாம பிடிக்கறதுக்குப் பதிலா அதை இங்கே வான்னு கூப்பிடறோம்! "நிலாவை-நிலா-ஓடிவா!ன்னு கூப்பிட்டவுடனே அது ஓடியா வந்துடுது? ஏதோ அந்த நேரத்துக்கு குழந்தைக்கு ஆறதல்! அவ்வளவுதான்!

இதை எதுக்குச் சொல்றேன்னா…எது முடியிற காரியம் - எது முடியாத காரியங்கிறதை குழந்தையா இருக்கிறப்பவே புரிஞ்சிக்குன்னும்… அதுக்கு தகுந்த மாதிரி பெத்தவங்க அதை வளர்க்கணும். அப்படி வளர்காததுனாலேதான் பெரியவங்களா ஆனதக்கு அப்புறம் பிடிவாத குணம் போக மாட்டேங்குது.! பயிற்சி இருந்தா மனசை கட்டுப்படுத்துறதுக்கு அறிவ நல்லா பயன்படும்.! மனசை அறிவோட கட்டுப்பாட்டுக்குள்ளே வச்சிருக்கிறவன்தான் ஞானி! "மனங்கிறது கட்டுக்கு அடங்காத ஒரு முரட்டு மாடுங்கிறார் இடைக்காட்டு சித்தர். "அந்த மாடு ஒரு கட்டுக்குள்ளே அடங்கிப் போச்சின்னா விடுதலை கிடைச்சுட்டுதுன்னு நிச்சயமா நினைச்சுக்கோ!ங்கிறார் அவர்.

"மனம் என்னும் மாடு அடங்கின்
தாண்டவக்கோனே!- மக்தி
வாய்த்த தென்று எண்ணேடா
தாண்டவகோனே!" என்கின்றார் அவர்.

மனசை அடக்கி ஆள்றது மட்டும் போதாது, நமது மனசுலேயே ஒரு பாம்பு இருந்துகிட்டிருக்கு! கொடுமையான விசப்பாம்பு அது. அது நமக்கும் கெடதல் மத்தவங்களுக்கும் கெடுதல். அந்த பாம்பு நம்ம மனசுலே குடியிருக்கும் வரைக்கும் நாம எந்த காரியத்திலேயும் வெற்றிப்பெற முடியாது. நாம எதை அரம்பிச்சாலும் வீணாப் போயிடும் எதை செஞ்பாலும் வீணாப்போய்விடும்.

அப்பேறபட்ட பாம்பு எது தெரியுமா? அதுதான் கோபங்கிற பாம்பு. சினம்ங்கிற அந்த பாம்பு செத்துப்போனா அதுக்குப்புறம் நாம நினைக்கிதெல்லாம் நிறைவேறும்! கைகூடம்! சித்தியாகும்.!

"சினம் என்னும் பாம்பிறந்தால்
தாண்டவகோனே! –யாவும்
சித்தி என்றே நினையேடா
தாண்டவகோனே!"



அடுத்தது ஆசைங்கிறது என்னன்னு சொல்றார். அது ஒரு பசுமாடாம்! அடங்காத பசுவாம்! இந்த அடங்காத தன்மை அழியணும்! அந்த பசுவை ஒரு எல்லைக்குள்ளே கொண்டு வந்துட்டா இந்த உலகத்துலெ உள்ள உண்மைகள் புராவையும் புரிஞ்சிக்கலாமாம்!.

"ஆசை என்னும் பசு மாடின்
தாண்டவகோனே!- இந்த
அண்டம் எல்லாம் கண்டறிவாய்
தாண்டவகோனே!"



இப்படி அவரு நிறைய அறிவுரைகள் சொல்லிக்கிட்டே போறார். ஆக முதலில் மனசை அடக்கணும் இரண்டாவது சினத்தை அழிக்கணும், மூன்றாவது பேராசைக்கு இடமளிக்க கூடாது. கவலை இல்லாமலே வாழனுன்னா அதுக்கு இடைக்காட்டுச் சித்தர் சொல்ற வழி இதுதான்.

இதை கேட்கும் போது நல்லாக இருக்கும்! ஆனா கடைப்பிடிக்கிற போதுதான் சிக்கல் என்பது நம்மில் பலரதும் கேள்வி. ஆனா அதை கடைப்பிடிச்சாதானே நாம உலகத்தை வெற்றிக் கொள்ளலாம். பல சந்தர்பங்களிலே நாம ஆசையை பிடிச்சிக்கிட்டு இரக்கின்றோமா? இல்லை…ஆசை நம்மை பிடிச்சிக்கிட்டு இருக்கின்றதா என்பதைதான் புரிஞ்சிக்க முடியல..?


ஒரு கம்பளி மூட்டை ஆற்று வெள்ளத்தில் மிதந்து போய்க்கிட்டிருக்கு. கரையிலே நின்றுக்கொண்ருந்தவன் அதைப் பார்த்து ஆசைப்பட்டான் உடனே குபீர்னு வெள்ளத்துலெ பாய்ந்தான். நீந்தி போய் அந்த கம்பளி மூட்டையை பிடிச்சு கரைக்கு இழுத்தான். அவனால முடியல! ரொம்ப நேரமா போராடிக்கொண்டிருந்தான். கரையில நின்றுக்கொண்டிருந்த இன்னொருத்தன் சத்தம் போட்டான். "முடியலனா விட்டுட்டு வந்துடு…அதுக்காக வீணா எதக்கு இல்லாடிக்கிருக்கே? என்றான்.

அதுக்கு அவன்.

" நான் இதை எப்பவோ விட்டுட்டேன்! இப்ப அதுதான் என்னை விடமாட்டேங்குது! ஏன்னா. .இது கம்பளி மூட்டை இல்லே, கரடிக்குட்டி" என்றானாம்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கவனிக்கப்படுகின்றீர்கள்

மலையக தோட்டப்புற பாடசாலைகளில் புதிய மாணவர்களை பாடசாலையில் இணைத்துக் கொள்வதற்காக அவர்களின் பெற்றோர்களிடமிருந்து வசதிக்கட்டணமாக ரூபா 2500 பெறப்படுகின்ற விடயம் தொடர்பாக பல தரப்பிலும் பேசப்பட்டது. இதனை வெயில் தரும் தனியார் வானொலி அமைச்சு மட்டத்துக்கு கொண்டு சென்றது. இதனடிப்படையில் மத்திய மாகாண கல்வி அமைச்சு கவனம் செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதன் பின்னர் பணம் திருப்பி ஒப்படைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டதுடன் இனிவரும் காலங்களிலும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதனை தடுக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனாலும் அவை அதிபர்களினால் இன்னுமே மீள் ஒப்படைக்கப்படவில்லை என்பது குறித்து பெற்றோர்கள் விசனமடைகின்றார்கள்.

பிள்ளைகளின் உயர்கல்விக்கே 2500 ரூபாவை செலவிட முடியாத இன்றைய நிலையில், இப்படியான பண அறவீடும், சட்டவிரோதமான செயற்பாடுகளும் தோட்டப்புற பாடசாலைகளில் இடம்பெறுவது மேலும் கல்வியை ஊழல்படுத்தும் விடயத்தை உறுதிப்படுத்துகின்றது. இது தொடர்பாக பெற்றோர்களும், பழைய மாணவர்களும், சமூக நலன் விரும்பிகளும் கவனம் செலுத்துமாறு தாக்கம் கவனத்துக்கு கொண்டுவருகிறது.

**தோட்டப்புற பாடசாலைகளிலே இப்படியா? இப்பகுதி அதிபர்களை நகர்ப்புற பாடசாலைகளுக்கு இடம்மாற்றம் செய்தால்? ....மலையக கல்வியின் நிலைபாடு என்னவாகும்...?**

---



நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட குறித்த தோட்ட பாடசாலை கட்டிடம் அத்தோட்டத்தின் மாரியம்மன் ஆலயத்துக்கு அண்மையிலே அமைந்துள்ளது. பாடசாலை கட்டிடத்தின் வசதி அங்குள்ள பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கு போதுமானதாக அமையவில்லை என்பதே கடந்த கால நிகழ்ச்சி நிரலாக அமைந்திருந்தது.

அதற்கு தோட்ட நிர்வாகம் சமார் 45 மேற்பட்ட கூரைதகரங்களை பாடசாலை வழங்கியிருந்தது. அதிலே 15 கூரைத்தகடுகளை பயன்படுத்திவிட்டு மிகுதியானதை வீட்டுக்கு கொண்டுசெல்ல முயன்ற அதிபரை, விடயம் அறிந்த தோட்ட உதவி அதிகாரி கையும் களவுமாக மடக்கி பிடித்தார். அவ்விடயம் பொலிஸ் மட்டம் வரை சென்றதாம்.

எப்படியிருந்தாலும், கூரைதகரங்களின் பாதுகாப்புக்காகவே, தனது வீட்டுக்கு லொரி மூலம் எடுத்து சென்றதாக ஊருக்குள் சமாளிக்கிறார் அந்த அதிபர்.

**இலங்கையில் இன்னும் யுத்தம் நடந்துக் கொண்டிருக்கின்றது என்ற நினைத்தாரோ என்னவோ..! பாதுகாப்புக்கு பயப்படுகிறார்**

---

## மலையக கல்வியொழுக்கம் குறித்து !

### மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சருக்கு ஒரு வேண்டுகோள்...!


**அண்மை காலங்களில் மலையக பாடசாலைகளில், மாணவர்களின் ஒழுக்கத்தை விட ஆசிரியர்களின் ஒழுக்கம் வீழ்ச்சியடைந்துள்ளன. தோட்டப்புற பாடசாலைகளைவிட முன்னணி பாடசாலைகளிலே இவ்வாறான செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. பாடசாலை நற்பெயருக்கு அபகீர்த்தி ஏற்படும் எனக்கருதி, பாடசாலை நிர்வாகத்துக்குள்ளே அது தொடர்பான ஒழுக்க நடவடிக்கை முடக்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளன. இது மேலும் மேலும் இன்னோரன்ன ஒழுக்க மீறல்களை செயற்படுத்த தூண்டுகோளாக அமைகின்றது. இப்படியான பாடசாலைகளில் தாங்கள் கல்வி நடவடிக்கையை மேற்கொள்ள மாணவ, மாணவிகள் அஞ்சுகின்றார்கள். இது தொடர்பாக சிந்திக்க தவறுகின்ற நிர்வாகமும், சமூகமும் கண்டிக்கதக்கது.**

**உலகில் காணப்படுகின்ற தொழில்களில் மிக உன்னதமான தொழிலாக ஆசிரியத் தொழிலே காணப்படுகின்றது. பெரும்பாலான ஆசிரியர்களின் இம்மாதிரியான கீழ்தரமான செயலுக்கு தொழிற்சங்கங்கள் சார்ந்த அதிகார பலமே காரணமாக இருக்கின்றதென சமூக உயர்மட்ட குழு விவாதிக்கின்றது. கல்வி சார்ந்த நடவடிக்கையை அரசியலுக்கு அப்பால் செயற்படுத்துவது மலையக கல்வியின் சிறப்பான எதிர்காலத்துக்கு வழிவகுக்கும் என 'தாக்கம்' எச்சரிக்கை செய்வதுடன், இது தொடர்பாக மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# காரண காரியம்



தொட்டாஞ்சினுங்கிகள் விரிகின்றது. விரிந்து நின்ற தொட்டாஞ் சினுங்கிகளை மிதித்து ஒற்றையடிப் பாதையில் ஓடோடிப் போகின்றார் நாவலப்பிட்டி. மகாவலி நீர் தேக்கத்தின் விளைவாக நாவலப்பிட்டியிலிருந்து குடிபெயர்ந்தமையினாலையே அவர் பெயர் நாவலப்பிட்டி அண்ணே!, ஆனால் மாரிமுத்து என்றால் யாருக்கும் தெரியாது. பேப்பரைச் சுற்றி வாயில் பீடியாய் புகைத்துக் கொண்டு ஓடும் ஓட்டம் எதற்கோ? எல்லாம் பெரட்டுகளத்துக்குதான்.

..காலையிலையே வெல்லனா
ஐயாவைப் பார்த்தான் ஐயா வீட்டு மாட்டுக்கு
பில்லு அறுக்க.. இல்லனா அடிக்கிற வெயிலுக்கு
18 கிலோ எடுக்க முடியுமா!

என்ற யோசனையுடன் விரைந்த நாவலப்பிட்டி வழமைப் போல் ஓட்டத்தில் முதலிடம் தான். வீடு திரும்புகையில் நாவலப்பிட்டிக்கு மனைவி வசந்தி சொன்ன வார்த்தைகள்,

ரொட்டிக்கு மாவு இல்ல சம்பளம் பத்தாம் திகதிதான்
ஏற்கனவே 1500 ரூபா கடன் வேற..
இன்னைக்கு 2ம் திகதி ஆகுது சம்பளத்திற்கு தாரதா சொல்லி மாவு ஒரு கிலோ வாங்கி வாங்க

"தரம் 10"
"தமிழ் மொழியும் இலக்கியமும்"
"அரசாங்க கல்வி திணைக்களம்"
என்பன ரொட்டியின் சூட்டில் நனைந்து போகின்றது.

என்ற நினைவு வரவே ஐயாவின் கடைக் கதவைத் தட்டுகிறார் நாவலப்பிட்டி. நீண்ட அழைப்பானையின் பின் கதவை திறந்த பாஸ்கர் ஐயாவிடம் வாய் யுத்தம் நடாத்தி மாவுடன் விடை பெற்றார் நாவலப்பிட்டி. பாஸ்கரன் மனதில்

இதெல்லாம் மீட்க முடியாத
கடனோ.. தெரியல

ஒரு பக்கம் இடிந்து விழுந்த மண் சுவர்களும்,. ரெட்டில் அலங்கரித்த கதவும் நாவலப்பிட்டியை வரவழைத்தது. வசந்தி மாவினை ரொட்டியாக்குகின்றாள் ரொட்டி காலை உணவாகின்றது. ஒரு துண்டு ரொட்டியை மடித்து உப்பு பானை மேல் வைத்து விட்டு ஒரு துண்டை சிறு பேப்பரில் சுற்றுகிறாள் வசந்தி பேப்பரில் அச்சிட்டிருந்த

"தரம் 10"
"தமிழ் மொழியும் இலக்கியமும்"
"அரசாங்க கல்வி திணைக்களம்"

என்பன ரொட்டியின் சூட்டில் நனைந்து போகின்றது. இருவரும் ஆயத்தமாகி விடைபெறுகின்றார்கள் மண் வீட்டை விட்டு. கையில் அறுவாவுடன் நாவலப்பிட்டி மீண்டும் பாஸ்கர ஐயாவிடம் பீடிக்காய் யாசகம் கடவுளிடம் பயனில்லை.. கடை மேசையிலிருந்த பேப்பரை சுருட்டிக் கொண்டு விரைந்தான். அவன் வழமையாக பில்லறுக்கும் இடம் பாடசாலை ஓரம்.. வெள்ளை நிறத்தில் செல்வங்கள் செல்வதை எட்டிப் பார்த்த நாவலப்பிட்டிக்கு தன் மகள் மாயாவின் ஞாபகம் வருகிறது..!

மாயா பத்தாம் வகுப்பில் படித்து கொண்டிருந்த போது. நாவலப்பிட்டி காய்சலில் படுத்து விட்டார். வீட்டில் சமைத்த உணவு ஒரு நேரம் தான், மிகுதி நேரம் தாகத்திற்கு தண்ணீர் தான் மாயா பதினோராம் வகுப்பிற்கு செல்வதற்கான தேவைகள் நிறைவேற்றப்படவில்லை. வீட்டிலேயே நிறுத்தப்பட்டாள். வருடம் தொடங்கி இரண்டு வாரங்கள் ஓடியது ஊரில் பொங்கல் நிகழ்சிகள் அமோகமானது. நாவலப்பிட்டியின் வீட்டில் மூன்று நேரம் பொங்கத்தான் அரிசியில்லை காரணம் ஒரு மாதத்திற்கு முன்பு தான் நாவலப்பிட்டியின் மூத்த மகன் விஜய்க்கு கல்யாணம் நடந்தது. விஜயும் தோட்டத்தில் பிறந்தவன் தான். கற்றது பல்கலைக் கழகம் என்பதனால் கல்யாணம்

அலங்கரித்த பந்தல்.
ஊரெங்கும் வாழை மரம்
நகர மண்டபத்தில் கல்யாணம்.
தாலி மட்டும் இரண்டு பவுன்.
ஊருக்கே சாப்பாடு..
போவதற்கு பஸ்.
விருந்திற்கு போத்தல்.

கல்யாணம் முடிந்தது விஜயும் நுவரெலியாவில் தன் மாமனார் வீட்டை நோக்கிச் சென்றான். சென்றவன் சென்றவன் தான். நாவலப்பிட்டி மட்டும் ஊருக்கே கடன்..

கடனுக்கே உழைப்பானது மாயாவும் வீட்டை காக்கும் இயந்திரமானால். உயர கற்றல் உதாசினமானது.

பொங்கல் விழா ஊரெங்கும் தோரணம், தெருவெங்கும் தெய்வீகப் பாடல்கள். அடுத்த வீட்டில் மட்டும் சினிமாப் பாடல் கோயில் மணி சத்தத்தையே விழுங்குகிறது. வெளியில் வந்து பார்த்த நாவலப்பிட்டி, "அட ரமேஸ் தம்பி கொழும்பிலிருந்து வந்திருக்கு...." "ரமேஸ் நல்லாருக்காயா..." ஆமா அண்ணா எப்படி இருக்கிங்க...." என்னப்பா செய்ய அதே வேலதாய்யா ... எப்படி வேல..... எப்படி சம்பளம்......"நல்ல சம்பளம் அண்ணே! முதலாளி தெய்வம் மாதிரி..... நல்ல இடத்துல நம்ம ஆனந்தன்னே என்ன சேர்த்துவிட்டாரண்ணே..." நம்ம ஆனந்தா...?"

ஆனந்தத்தின் வேலை ஊரில் வேலையின்றி அலைபவர்களை கொழும்பிற்கு அழைத்துச் சென்று வேலை வாங்கி தருவதுதான். ஊரில் பெரும் மதிப்பு அவருக்கு. ஏதோ யோசனையில் நாவலப்பிட்டி நடக்கிறார். நீண்ட யோசனையின் பின்பு மாயாவும் ஆனந்தத்தின் உதவியுடன் கொழும்பை நோக்கிப் பிரவேசிக்கிறாள். வீட்டு வேலைக்காகச் சென்ற மாயா மாதமொரு முறை கடிதம் போடுவாள். கடிதத்தோடு பணமும் வரும். ஞாபகங்களால் அசைபோட்ட அருவாவை நிறுத்தி வேலையை முடித்து பில்லுக்கட்டை கணக்கு வீட்டில் சேர்த்த கையுடன் தபால்காரன் முத்துவின் வீடு நோக்கி நகர்ந்தார்.முத்துவை கண்டதும்

"அண்ணே நம்ம மாயாவுக்கு லெட்டர் எழுதும் அண்ணே ..எழுதலாம். நாவலப்பிட்டி
"கொஞ்சம் உட்காரு வாரேன்".

என்று உரைத்த முத்து பேனாவினையும், ஒற்றைத்தாள் ஒன்றினையும் தினகரன் பேப்பரையும் எடுத்து வந்து வீட்டின் முன் அறையின் நாட்காளிலில் அமர்கின்றான்.

சொல்லு நாவலப்பிட்டி.
அண்ணே .. மாயா நல்லாயிருக்கானு எழுதுங்க அண்ணே,
கூடவே நானும் வசந்தியும் நலம்னு எழுதுங்க அண்ணே.

என்றவாறே அருகிலிருந்த பத்திரிகையில் ஏதோ படத்தைப் பார்த்த நாவலப்பிட்டி முகம் சிலிர்க்க உடல் வியர்க்க, "....அண்ணே இத கொஞ்சம் வாசிங்க அண்ணே...." "வத்தளை சிறுமி மாயாவின் சடலம் மீட்பு....."என்ற பத்திரிக்கை தலைப்பை தயங்கி தயங்கி வாசித்தார் முத்து.... "ஐயையோ.....ஐயையோ மாயா....மாயா...." என கதறி வீடு நோக்கி ஓடினார் நாவலப்பிட்டி மதிய நேர இடைவேளையில் வந்திருந்த வசந்தியைக் கண்டதும் "ஐயோ வசந்தி.... மோசம் போய்டமடி நம்ம மாயா .... நம்ம மாயா....

என தொண்டை அடைப்பட விடயத்தை கூறவும் மயங்கி விழுந்தாள் தாய். நடாத்துகின்றனர், கோசங்கள் எழுப்பப்படுகின்றன.

மலையகப் பேரவையின் வெளியீடு ஒன்று

தூங்குகின்ற மலையகத் தோழா

தூங்கு தூங்கு

வி.எல்.பெரைரா
1989.10.27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக காந்தி

# சி.வி வேலுப்பிள்ளையின் வாழ்நாளில் சில சம்பவங்கள்



பகிர்ந்துக் கொள்கிறார் சி.எஸ்.காந்தி



கவிஞனும், புலவனும் வறுமைக்கும் இரத்த உறவாகவே வாழ்ந்து போகிறான். மனிதன் இருக்கும் போது கண்டு கொள்வதையும் பார்க்கிலும், இறந்த பின்பே புகழ்பாடி திரிகின்ற இனமாக இருக்கிறான். மலையக காந்தி என்று அழைக்கப்படும் சி.எஸ். காந்தியும் அப்பேறபட்ட இலக்கிய பரம்பரையிலிருந்து வாழ்ந்துவரும் ஒருவராக இருக்கிறார். மலையக சமூகம் எதையும் உள்ளுணர்வோடு பார்ப்பதை தவிர்த்துவரும் சமூகமாக இன்று மாறிவருகிறது. இப்பண்பு கலை, இலக்கியத் துறை சார்ந்தவர்களை ஓரம் கட்டுகின்ற நிலைக்கு தன்னை சார்ந்துள்ளது எனலாம். இவ்வாறான நிலையில் மலையகத்தின் மூத்த இலக்கிவாதியும், பேச்சாளரும், பத்திரிகையாளருமாகிய சி.எஸ்.காந்தியை பற்றி நினைவு கூறி, பெருமைப்பட தாக்கம் கடமைப்பட்டுள்ளது.

சி.எஸ்.காந்தி சி.வி.வேலுப்பிள்ளையின் மைத்துனராவார், என்ற விடயம் பலருக்கும் தெரியாமல் இருக்கிறது. சி.எஸ்.காந்தி பலதுறை சார்ந்த விற்பனர். பாடசாலையில் ஆங்கில ஆசிரியாக கடமைப்புரிந்து, பின்னர் பத்திரிகைத்துறையில் கால்பதித்தார். Daily News ஆங்கில பத்திரிகையில் அமரர். அன்டன் பாலசிங்கத்துடன் இணையாசிரியராக கடமைப்புரிந்தார். இவரின் மாணாக்கர் பல முன்னணி பத்திரிகையாசிரியர்களாக இருக்கிறார்கள். மலையகத்தின் இலக்கியத்துறையுடன் நீண்ட நாள் உறவை மேற் கொண்டு வருபவர். இவர் பல சாகித்திய விருதுகளையும் பெற்றவர். இன்று சுடரொளி ஆசிரியர்களில்

## சி.வியின் வாழ்க்கையோடு...

சி.வியின் தாயார் எனது தந்தையின் தங்கை. இருவரும் உடன் பிறந்தவர்கள். எனவே அவர் எனக்கு அத்தை. அன்னாரின் புத்திரரான சி.வி. எனது மைத்துனர் இது எங்கள் உறவு முறை.

நான் சி.வி. வாழ்ந்த அதே இல்லத்தில் பிறந்தவன் அதனால் விபரம் தெரிந்த காலம் தொட்டு அவரை அறிவேன். மாணவர் பிராயத்தில் நன்கு அறிவேன்.

சி.வி. தலங்கமையில் குடும்பஸ்தரானார். அவரது குடும்ப இல்லம் அங்குள்ளது. சுமார் பதினெட்டு வருடங்கள் வரை அங்கு நான் தங்கியுள்ளளேன். அப்போது நானொரு பத்திரிகையாளன். எனவே அவரை பல கோணங்களில் நானறிவேன்.

## தாக்கம் குறித்து ~சி.வி.வேலுப்பிள்ளை

சி.வியுடனான எனது இறுதி சந்திப்பு அவரது இல்லத்தில் நிகழ்ந்தது. அப்போது மலையக தொழிற் சங்கங்களின் சஞ்சிகைகள், அவற்றின் இலட்சியம், தாக்கம் ஆகிய குறித்து எனது பொதுவான அபிப்பிராயத்தை அவர் வினாவினார்.

அப்போது நானொரு பத்திரிகையாளன், அதனால்தான் இந்த அனுகுமுறை. எனது அபிப்பிராயத்தை நான் குறிப்பிடேன். அப்போது தாக்கம், ஞாயிறு ஆகிய சஞ்சிகைகள் குறித்தும் குறிப்பிட்டேன். இவ்விரு பெயர்களை கேட்டதும், அவர் பேச முற்பட்டார். "இவ்விரு சஞ்சிகைகளும் இலக்கிய தரமுடையவை, இவற்றின் எழுத்துகளில் தீர்க்க தரிசன கண்ணோட்டமுடையது" என்றார்.

,இவற்றை நடத்தும் வி.எல். பெரைராவிடம் ஏதோவொரு விசேட தன்மை காண்பதாகவும் அவர் குறிப்பிட்டார். ஒரு எழுத்தாளரின் அப்பழுக்கற்ற இதயத்தை அப்போது என்னால் புரிந்துக் கொள்ள முடிந்தது. அந்த சுதந்திர இதயத்துக்கு தொழிற் சங்க வட்டத்தால் வேலி போட முடிய வில்லை, தடைபோட இயலவில்லை.

திரு. வி.எல். பெரைராவும், திரு சி.வியும் கொள்கை ரீதியில் வேறுபாட்டைக் கொண்டவர்களாக இருந்தாலும், அறிவுக்கடலில், உரையாமல் என்னும் தோணியில் ஒருமித்து அடிக்கடி பிரயாணம் செய்து வந்தவர்கள். "தாக்கம்", "ஞாயிறு" ஆகிய சஞ்சிகைகளுக்கு ஆக்கங்கள் அளிக்க முன்வருவீர்களா? என்றேன். "அத்தகைய சஞ்சிகைகளுக்கு ஆக்கங்கள் மாத்திரமல்ல, ஊக்கமும் அளிக்க வேண்டும் இது ஒரு எழுத்தாளரின் தார்மீக கடமை" என்றார் அவர். எனது இறுதி சந்திப்பில், எச்சஞ்சிகைகளில் தீர்க்க தரிசன கண்ணோட்டமுள்ளது என்று கூறினாரோ! அச்சஞ்சிகைகளில் ஒன்றான தாக்கத்திற்கு, இப்போது அமரரான அவரைப்பற்றி எழுதுவது சாலப்பொருத்தமான செயல் என எண்ணுகிறேன். அவர் குறிப்பிட்டது போல இதுவொரு தார்மீக கடமை மாத்திரமல்ல இத்தருணத்தில் இதுவொரு ஆத்மார்த்த பணியென கருதுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்துலகில் சி.வியின் ஆக்கங்கள்.

சி.வி ஆங்கில எழுத்துலகில் ஓர் இடத்தை ஈட்டியவர். தமிழ் எழுத்துலகில் ஓரிடத்தை தட்டிக் கொண்டவர். மலையக எழுத்துலகில் ஓர் உயரிய பீடத்தை அமைத்தக் கொண்டவர். மலையக தொழிற் சங்க வரலாற்றில் ஒரு அப்பழுக்கற்ற நிரந்திர இடத்தை உருவாக்கிக் கொண்டவர். வ.உ.சி என்ற மூன்றெழுத்துக்கள் கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனாரைக் குறிக்கும். ம.பொ.சி என்ற மூன்றெழுத்துக்கள் சிலம்பு செல்வர் ம.பொ. சிவஞான கிராமணியாரைக் குறிக்கும். மு.வ. என்ற ஈரெழுத்தக்கள் பேராசியரும், எழுத்தாளரும், நாவலாசிரியருமான டாக்டர். மு. வரதராசனாரைக் குறிக்கும். ஆர்.பி என்ற ஈரெழுத்து பேராசியரும், சொல்லின் செல்வருமான ஆர்.பி. சேதுப்பிள்ளையை குறிக்கும். சி.எஸ் என்ற ஈரெழுத்துக்கள் இந்திய முன்னால் அமைச்சர் சி. சுப்பிரமணியத்தை சுட்டும். சி.வி என்ற இவ்விரு எழுத்துக்கள் சி.வி.வேலுப்பிள்ளையைக் குறிக்கும்.

சி.வி. ஓர் ஆங்கில கவிஞர், எழுத்தாளர், நாவலாசிரியர் அதுபோல அவர் ஒரு தமிழ் எழுத்தாளர், நாவலாசிரியர், சமூதாய அபிமானி. அதைத்தவிர அவரொரு தொழிற்சங்கவாதி.சி.வியின் "வீடற்றவன்" "இனி நான் பாடமாட்டேன்" ஆகிய இரு நாவல்களும், இன்னும் பல கட்டுரைகளும் வீரகேசரி, ஞாயிறு இதழ்களில் வெளிவந்துள்ளன. "எல்லைப்புறம்" "சுந்தரி" "பார்வதி" ஆகிய நாவல்களும், உரைநடை சித்திரங்களும் தினகரன் ஞாயிறு இதழ்களில் பிரசுரமாகியிருந்தன. மலையக நாடோடி பாடல்கள் தொடர்பான விளக்க கட்டுரைத் தொடர் "ஈழநாடு" இதழ்களில் வெளியாகியுள்ளது. பல கட்டுரைகள் "செய்தி" இதழ்களில் மலர்ந்துள்ளன. தமிழக கி.வா. ஜகந்நாதனின் மஞ்சரியிலும் அவரது கட்டுரை இடம் பெற்றுள்ளது.சி.வியின் "சுந்தரி" ஆங்கில "ட்ரீபியூன்" இதழ்களில் வெளிவந்துள்ளது. "தேயிலை தோட்டத்திலே" ஆங்கில கவிதைகள் "டைம்ஸ்" ஞாயிறு இதழ்களில் வெளிவந்துள்ளன. மலையக அவலங்களை படம் பிடித்து காட்டும் அனேக கட்டுரைகள் "ஒப்சேவர்" ஞாயிறு இதழ்களில் பிரசுரமாகியுள்ளன. இவரின் ஆக்கங்களில் அநேகமானவை இந்திய ஆங்கில பத்திரிகைகளிலும், ஏனைய பல சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன.

"தேயிலை தோட்டத்திலே" ஆங்கில கவிதை தொகுப்பு நூலுரு பெற்றுள்ளது. இதன் தமிழாக்கமும் நூலுரு எடுத்துள்ளது. பல ஆங்கில ஆக்கங்களை கொண்ட தொகுப்பு "போர்ன்-டு லேபர்" எனும் தலைப்பில் புத்தக ரூபமாக வெளிவந்துள்ளது. இவரின் ஆங்கில நாடகமொன்றும் நூலுரு பெற்றுள்ளளது. "முதல் படி" எனும் தலைப்பிலான ஒரு தமிழ் நூலொன்றையும் சி.வி வெளியிட்டுள்ளார். "மதன காமராசன்" கதைகள் சி.வியின் மனதை பெரிதும் கவர்ந்தவை அனைத்து கதைகளும் மாணிக்கங்கள் என அடிக்கடி கூறுவார். அவற்றில் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்தார் அவை "டெய்லி மிரர்" இதழ்களில் வெளிவந்தன. சி.வியின் நாவல்களும், ஏனைய பல ஆக்கங்களும் நூல்களாக வெளிவர வில்லை.

இலங்கை, இந்திய காங்கிரஸ் குடியுரிமை பறிப்புக்கு கடும் ஆட்சேபனை தெரிவித்தது, பாராளுமன்ற வளவில் சத்தியகிரக போராட்டமொன்றையும் நடத்தியது. சத்திய கிரக போராட்ட ஞாபகார்த்தமாகவே சி.வி "தேயிலைத் தோட்டத்திலே" என்ற ஆங்கில கவிதைகளை வடித்தார். ஆரம்பத்தில் இக்கவிதை தொகுப்பு ஒரு சில அம்சங்களை மாத்திரமே உள்ளடக்கியிருந்தது.
அக்காலத்தில் இந்திய ஆங்கில எழுத்தாளர் ஜக்மோகன் இலங்கை வந்தார், இங்குள்ள எழுத்தாளர்களை சந்தித்தார், இவர்களை அறிமுகம் செய்யும் பணியில் ஈடுப்பட்டார். இவரும், சி.வியும் நெருங்கிய நண்பர்களாயினர். திரு. ஜக்மோகனின் வேண்டுகோளுக்கிணங்க "தேயிலை தோட்டத்திலே" கவிதை தொகுப்பை சி.வி விரிவுப்படுத்தினார். பின்னர் நூலுருவில் கொண்டு வர முற்பட்டார். இநநூலில் ஆங்கில தொகுப்புக்கு திரு. ஜக்மோகனே முகவுரை வழங்கியுள்ளார்.

சம்பவங்கள் இன்னும் தொடரும்

காரணகாரியம்.. 24ம் பக்கத் தொடர்ச்சி..

"ஒழிப்போம் ஒழிப்போம் .."
"சிறுவர்களை வேலைக்கு கொண்டு செல்லும் தரகர்களை ஒழிப்போம்".
பாடசாலை இடைவிலகலை தண்டிப்போம்,
கல்வி தொடர்பாக பெற்றோருக்கு அறிவூட்டுவோம்.
எடுப்போம். எடுப்போம்
மாயாவின் மரணத்திற்கு
சட்டத் தீர்வு எடுப்போம்.
வாசகங்களுக்கு பஞ்சமில்லை, தரகர் ஆனந்தத்தை மட்டும் காணோம். நீண்ட நாளாய் ஊருக்கு வரவேயில்லை. நீண்ட துயரில் கண்ணீர் மழையுடன் மாயாவின் சடலம் மயானத்தில் மலர்களோடு மறைகின்றது. புலனாய்வு மட்டும் மாதா மாதமாய் தொடர்கிறது.
சில காலங்களின் பின்பு.
வேறொரு தரகரின் உதவியுடன் மலர் விழியும் கொழும்புக்கு இரயிலில் ஏறுகின்றாள்
மலர்விழியும் மாயாவின் சக நண்பிதான்..

............க.ஹெலன்

"நீங்கள்தான் அரசியல் அடிமைகளாய் வாழ்கின்றீர்கள்!
உங்கள் பிள்ளைகளையும் ஏன் அடிமையாக்குகின்றீர்கள்.
அவர்களை சுதந்திரமாக வாழவிடுங்கள்"
-தாக்கம்-



க.ஹெலன்குமார் தலவாகலை றூப் தோட்டத்தினை பிறப்பிடமாக் கொண்டவர். உயர்தர கல்வியை பாரதி த.வி நிறைவுசெய்து, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்துறை விடுகை வருட உள்வாரி மாணவனாக கல்விப்பயில்கிறார். சமூக சேவையாக K.H.K கல்வியகத்தை நிருவகித்து வருகிறார். இவரின் மாணாக்கர் அனேகர் பல்கலைக்கழக அனுமதிப்பெற்று கல்விபயில்வது குறிப்பிடத்தக்கது. மலையகத்தில் கல்வி மூலமான அபிவிருத்தியை விரும்புகிறார். சிறந்த இலக்கிய இரசணையாளர்.

முடிவெடுக்க தயாராயிருங்கள்..!
நீங்கள் எடுக்கிற முடிவே
உங்கள் விதியை வடிவமைக்கிறது.
உங்கள் சமூகத்தையும் சேர்த்துத்தான்.!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காத்திருக்கிறேன்....!

!பத்திரமாய் இருக்கிறது
!பாதுகாப்பு பெட்டறையில்
!உன் கடிதம்
!அவ்வவ்போது எடுத்துப் பார்க்கிறேன்
!பிரிக்கும் போதே
!மடிப்புகளில் விரிச்சல்
!பழுப்பேறி விட்டாலும்
!பழைய தாளிலும் உன்
!பளிங்கு உடல்வாசம்
!முத்தான கையெழுத்து உன்
!முறவலைப் போல
!ஒவ்வொருவருக்கும்
!கையெழுத்துப்
!பிரத்தியேகமாம்
!தனி மனித
!அந்தரங்கள்
!மன நிஜத்தின்
!நிழல்
!கையெழுத்தில்
!அவரவர்தம்
!தலையெழுத்தைக்
!கூறுலாமாம்.
!எனக்கு தெரியவில்லை
!சில விசயங்கள்
!தெரியாமலிருப்பதே
!நல்லதுதான்
!கவிதையாய் எழுதிவிட்டுக்
!கடிதமென்று சொல்வாய்
!கவிதைக்குதான்
!பொய் அழகு
!வாழ்க்கைக்கு அல்ல
!உண்மைகளை உதறிவிட்டு
!ஒருநாள் சென்றுவிட்டாய்..!
!மறந்தேதான் போனாயா?
!என்றாவது நீ
!வருவாயென்று
!காத்திருக்கும் என்னோடு
!உன் கடிதம்
! ~கைஷலஜா

நினைவு
உறக்கத்திலும்
மறக்காதிருக்கின்றது.
கனவுகளாய்
நீ மட்டும்
என்னருகில்.!

~ வித்தியார்த்தி

# கவிதைகள்

## அது ஒரு பருவம்

நாணிக்குறுகி காலவிரலால் செம்மண்ணில்
நீளக்கோடுகள் கீறி
என்னோடு நீ ஒரு வார்த்தை
பேசி முடிப்பதற்குள்
பிய்தெறிந்த ரோஜா
இதழ்கள்தான் எத்தனை..?

அன்பே வரண்டுபோன
என் வாழ்க்கையின் பாதையில்
சிறு அருவியாய்
ஒரு பூவாய்
உன்னை நான் சந்தித்தேன்..!

அது ஒரு பருவம் எம்பார்வையில்
மொட்டுவைத்த அந்த
மெல்லிய காதலைச் சொல்வதற்குள்
காலச்சுழற்சி
கண்காணாத் தூரத்தில்
எம்மைப் பிரிந்து..!

அன்பே இன்னும் எமக்குள்
இழையோடும் காதல்
இருந்துமென்ன
இப்போது
இருவரும்
இருவேறு திசைகளில்.!

~~வித்தகன்~~

வித்தியார்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகம் சந்தித்த மக்கள் தலைவர்


## அமரர்.திரு. எஸ்.சோமசுந்தரம்

இலங்கை வாழ் இந்தியா வழ்சாவளி மக்களின் நலனுக்காக உழைத்து மறைந்த தலைவர்களில் ஒருவரான திரு. எஸ். சோமசுந்தரம் அவர்கள் 13.10.1990 இல் தமிழகத்தில் காலமானார். கண்டி, கலஹா தெல் தோட்டத்தை சேர்ந்த திரு.திருமதி. சங்கரன் தம்பதியினரின் ஏக புதல்வனாக உதித்தவர்தான் திரு. சோமசுந்தரம் அவர்களாவார். கண்டி திருத்துவ கல்லூரியில் படிப்பை முடித்து பல்கலைக்கழக பிரவேச பரீட்சை எடுத்து விட்டு சிலகாலம் சட்டக் கல்லூரியிலும் பயின்றார். படிப்பை முடித்துக்கொண்டு பட்டம் பதவிகளை தேடி ஓடாமல் மக்களுக்கு தனது கல்வி பயன்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் 1935 ஆம் ஆண்டு "கண்டி போஸ் சங்கம்" மூலம் தனது பொது நல வாழ்வை ஆரம்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

"சோமா" என மக்களினால் அன்பாக அழைக்கப்பட்ட இவர், 1939 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இலங்கை இந்திய காங்கிரஸின் ஆரம்ப கால உறுப்பினர்களில் ஒருவராவர். சம்பள சபைகள் முன் இவர் மகஜர்கள் சமர்ப்பித்து வாதாடியதனை அமரர்.பெரிய சுந்தரம் பாராட்டியுள்ளார். அரசாங்கம் அக்காலத்தில் இலங்கை மக்களுக்கு அதாவது இந்தியா வம்சாவளி மக்களுக்கு செய்யப்பட்ட அநீதிகளை காந்தியடிகளிடம் எடுத்து சொல்ல சென்ற தூதுதுக்குழுவில் இவரும் சென்றமை குறிப்பிடத்தக்கது. முல்லோயா தோட்டத்தில் கோவிந்தன் என்ற தொழிலாளி பொலிஸ் படையினால் சுடப்பட்ட போது அது சம்பந்தமான விசாரணைக் கமி'ன் முன் கோவிந்தனை பொலிஸ் சுட்டது தவறு என்பதை நிரூபிக்கும் வகையில் சாட்சியங்களை ஒழுங்குப்படுத்தி வழக்கில் வெற்றியும் கண்டதில் திரு. "சோமா"வின் பங்கு அளப்பரியதாகும்.

1935 முதல் 1960 வரை மலையக மக்களுக்கு சேவையாற்றிய இப்பெருமகன் இலங்கை-இந்திய காங்கிரஸில் இணைக்காரியதரிசியாகவும், இன்றைய இ.தொ.காவின் பொதுச் செயலாளராகவும் சிறப்பாக செயல்பட்டுள்ளார். 1952 இல் இடம்பெற்ற சத்தியாகிரக போராட்டத்தில் முன்னணித் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். 1947 மதுரட்ட தொகுதியில் போட்டியிட்டு தோல்வி கண்டாலும் தொழிலாளர் சேவையில் முக்கிய தலைவராகவே செயல்பட்டார்.

சர்வதேச தொழிற்சங்க மகா நாடுகளில் இலங்கையின் தொழிலாளர் பிரதிநிதியாக கலந்துக் கொண்டு நாட்டிற்கு புகழ் தேடி தந்துள்ளார். மலையக மக்களின் நலனுக்காக உழைத்து மறைந்த இப்பெருமகனின் சேவைக்கு, மலையக மக்கள் என்றும் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.



## மாடசாமி பூசாரியின்...



**கேள்வி:** கிராம அபிவிருத்தி திட்டம் மூலம் தோட்டப்புறம் அபிவிருத்தி காணுமா?

உமா. பொகவந்தலாவா.

**பதில்** : நிச்சயமாக ! தோட்டங்கள் கிராமமாக மாறும் போது..!

**கேள்வி** : அரசியல் வாதிகளை நம்ப வேண்டாம் என்கிறார்களே?

எஸ். சசி நானுஓயா

**பதில்** : அரசியல் அப்படியாகிவிட்டது. .

**கேள்வி:** அடைமழையில் மக்கள் அவதிப்படுகின்றார்களே?

ஆர்.கனகசபை தலவாகலை.

**பதில்:** தேர்தல் மழையில் குதுகலித்தார்கள். அடை மழையில் அவதியுருகின்றார்கள். இன்பமும் துன்பமும் கலந்ததே வாழ்க்கை என்பது இயற்கையின் நியதி.

**கேள்வி:** இன்று மலையகத்தில் குடிபழக்கம் அதிகமாகி விட்டதாமே?

எஸ்.சுப்பரமணிய...ன்

**பதில்:** தேர்தலில் புதிதாக குடித்து பழகியவர்கள் விடுவதாயில்லையாம். சும்மா கொடுத்தால் சோப்பும் சுவைக்குமாமே..! மலையகத்தில் குடி நுரை கக்குகின்றது.

**கேள்வி:** "சீபா" குறிவைத்த "ஐபா"வின் நிலை என்ன?

எஸ்சுரேஸ். பீரெட். டிக்கோயா

**பதில்:** பொருளாதாரத்தினை இலக்கு வைத்த இலங்கையின் "ஐபா" நிகழ்வு, தொடக்கத்திலே இலங்கைக்கு சுமார் 600 கோடிகளை ந'டமேற்படுத்தியுள்ளது.. பல்தரப்பு அரங்கில் சூடுப்பிடித்த விடயமாகவே இதுபேசப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாக்ஸீய பொருளாதார முறையைத் தின்ற தராண்மைவாத முதலாளித்துவம்

தோட்டத் தொழிலாளர்கள் தாங்கள் வாங்கும் சம்பளம் நிர்வாகம் கொடுக்கும் தர்ம சம்பளமல்ல. தொழிலாளி தன் உடல் உழைப்பை விற்று தான் அக்கூலியைப் பெறுகிறான். சாதாரண ஒரு தொழிலாளி ஒரு தொழில் ஸ்தாபனத்தில் அல்லது களத்தில் தனது கூலிக்கான உழைப்பை நான்கு மணித்தியாலயத்துக்குள்ளேயே எஜமானுக்கு வழங்கி விடுகிறான். மிகுதி நான்கு மணித்தியால உழைப்பு தன் எஜமானின் இலாபத்தில் போய் சேருகின்றது. இந்தவகையில் தோட்டத் தொழிலாளர்கள் இலாபத்தை ஈட்டிக் கொடுக்கிறார்களே அன்றி ந'டத்தை ஈட்டிக் கொடுக்கவில்லை. ஒரு தோட்டம் ந'டத்தில் இயங்குகின்றதென்றால் ஊழல், தவறான நிருவாகம் ஆகியவையே காரணங்களாக இருக்க முடியும். தோட்ட நிர்வாகிகள் இன்று என்ன செய்கிறார்கள் என்று கேட்கத் தோனுகின்றது. மந்தைய நாட்களில் நிர்வாகிகள் தோட்டத்தில் வேலை செய்தார்கள் தம் உயிர் போல விசுவாசித்தார்கள். இதன் பயனாக தோட்டங்கள் சிறப்பாக காணப்பட்டன இதனால்தான் தோட்டங்கள் இன்று வரை வாழுகின்றன. இப்போதைய போக்கு ஒரு குறுகிய நோக்கத்திற்காக மாத்திரமே பயன்படுத்தப்படுகின்றது.

### தோட்ட நிர்வாகிகளின் பரம்பரைத் தொழிலாகும் தோட்ட நிர்வாகம்

நிர்வாகம் இன்று பெருபான்மையான மக்கள் கூட்டத்தின் சொத்தாக மாறியுள்ளது. ஒரு சில தமிழ் நிர்வாகிகளும் சொந்த தோட்டங்களில் இருக்கிறார்கள். பரம்பரை பரம்பரையாகவே தோட்ட நிர்வாகிகள் தோற்றம் பெறுகின்றார்கள். இலங்கையின் சொர்க்கம் தோட்டப் புற நிர்வாகிகளிடமே இருக்கின்றது என மக்கள் விடுதலை முன்னணி ஒரு சமயம் கூறியிருந்தது ஞாபகத்திற்கு வருகின்றது.மலையகம் இன்று எத்தனையோ பட்டதாரிகளை பெற்றிருக்கிறது. ஆனால் பரம்பரை வழியாக தீர்மானிப்பது ஆண்டான் அடிமை சமூதாயத்தை நினைவுப்படுத்துகிறது.

### தொழிலாளர் கட்டுபாடும் தொழிலாளர் நிருவாகமும்.

பெருந்தோட்ட தேயிலைத் தோட்டங்கள் பெரும்பாலும் தனியார் கம்பனிகளுக்கு கையளிக்கப்பட்டு இரண்டு தாசாப்தங்கள் கடந்து விட்டோம். இந்நிலையிலும் தனியார் கம்பனிகிடையிலும் தொழிலாளர்களுக்கிடையிலும் பாரிய இடைவெளிகள் காணப்படுகின்றன. ஒரு தனியார்துறை ஸ்தாபனத்தில் இலாபத்தை சரியான ரீதியில் தொழிலாளர்களுக்கு பகிர்ந்து கொடுக்க வேண்டும். நட்டங்களைத் தடுக்கக்கூடிய இந்த ஸ்தாபனத்தில் வரவு-செலவுப் புத்தகங்களைப் பார்க்கக்கூடிய் இலாப நஸ்டங்களை அறியகூடிய உரிமை தொழிலாளர்களுக்குண்டு.

ஒரு முதலாளித்து சமூக அமைப்பில் தொழிலாளருக்குக் கொடுக்க கூடிய, கூடிய சலுகை இதுதான் என்று சொல்லலாம். இதனைத் தாம் நாம் தொழிலாளர் கட்டுபாடு (Workers Control) என்கின்றோம். இப்படியான ஒரு நிலையில் நாம் இத்தாலி பியட்கார் உற்பத்தி நிறுவனத்தைப் பார்க்கலாம். இலங்கை அரசு சோ'லிச ஜனநாயக குடியரசு என அழைக்கப்படுகிறது. சோ'லிசம் என்பது தொழிலாளர்களின் நலன்களில் அக்கறைக் கொள்வதையே காட்டுகின்றது. இப்படியிருக்க சோ'லிச என்ற பதத்தின் கீழ் வாழும் இலங்கைத் தொழிலாளர்களில் மலையக தேயிலை தொழிலாளர்களின் நலன்களில் அக்கறைக் கொள்ளாதிருப்பதினை எவ்வகையினுள் அடக்கிப்பபார்ப்பது?. எனவே தேயிலைத் தோட்டங்களில் வாழும் தொழிலாளர்களின் நிருவாகத்துக்கு கீழ் கொண்டுவரப்பட வேண்டும். தோட்டத்தில், தொழிலாளர்கள் மத்தியில் தகுந்த பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து பயிற்சி கொடுத்து நிருவாகத்தை நடத்த நடத்தச் செய்தால் நட்டம் ஏற்படுவதற்கான வழியேயில்லை.
ஒரு சோ'லிச அமைப்பில் ஒரு தொழிலாள நிருவாகம் இருக்க வேண்டுமேயன்றி சுரண்டுகின்ற துரைமார் நிருவாகங்கள் இருத்தல் ஆகா? ஆதலால் தொழிலாளருடைய நிருவாகம் செயல் படுவதற்கு வழிவகுக்க நாம் வழியுறுத்துவோம்.

# கேள்வி பதில்கள்

**கேள்வி**: இப்போதைய இந்திய தமிழ் திரைப்படங்களின் பாடல் காட்சிக்கு மாத்திரம் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவிடப்படுகிறதே?

**எஸ். ஆனந்தன். ராகலை**

**பதில்**: 1948ம் ஆண்டு திரு.எஸ்.எஸ்.வாசன் தயாரித்த சந்திரலேகா படத்தை ஜெமினி பிக்சர் வெளியிட்டது. அதில் இடம்பெறும் ஒரு பாடல் காட்சிக்கு மாத்திரம் ரூபா 5 லட்சம் செலவிடப்பட்டது. அதன் பெறுமதி இப்போ[illegible]க்கு என்ன என்று கணக்கிட்டு பாருங்களேன்.


மலையக மக்கள் என்ன பால்குடிக்கும் பாப்பாக்களா?

**கேள்வி:** பாராளுமன்றத்தில் 'நம்மவர்' முன்வைத்த தனித்து செயற்படுதல் கொள்கை குறித்து?

**எம்.லோறன்ஸ். டிக்கோயா**

**பதில்:** தாங்கள் எதிர்கட்சியில் இல்லை என்பதினை ஆளும் கட்சிக்கு காட்டும் சமிங்ஞை! அழைத்தால் மறுப்பானேன்.

கேள்வி: காதல் புனிதமாகுமா?

**கு.கார்த்திகா. நுவரெலியா**

பதில்: புனிதம் காதலில் இருந்தால்

**கேள்வி**:யேசு நாதர் மறுபடியும் பிறந்திருந்தால்..?

**ஆர்.ரமேஸ். பொறலந்த**

**பதில்**:இங்கு நடப்பவைகளைக் கண்டு மறுபடியும் இறந்திருப்பார்!

**கேள்வி:** வட, கிழக்கில் இந்தியா வம்சாவழி தமிழ் மக்கள் உள்ளனரா?

**செ.செல்வராஜ். நானுஓயா**

**பதில்:** இந்திய கள்ளதோணி என்ற பெயருக்கு அவர்களும் சொந்த காரர்கள்தான். அத்[illegible] மலையகத்திலிருந்து 1972ம் ஆண்டு காலப்பகுதிகளில் வறுமைநிலை காரணமாகவும், சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தினாலும், வட கிழக்கிலுள்ள மன்னார், கிளிநொச்சி, முல்லைத் தீவு, வவுனியா போன்ற பிரதேசங்களில் குடியேறினார்கள். தற்பொழுது வவுனியா மாவட்டத்தில் மலையக மக்கள் 45 சதவீதம் தொடக்கம் 60 வீதம் வரை வாழ்கிறார்கள்.

எதிர்பார்ப்பு என்ன?


**கேள்வி:** கலைஞர். கருணாநிதி மீண்டும் இலங்கை பிரச்சினையில் ஆர்வம் செலுத்துகிறாரே?

**ஆர்.ராஜசுந்தரம். சாமிமலை**

**பதில்:** இது ஒன்றும் புதிதல்ல. 1990ம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து இதையே மீண்டும், மீண்டும் செய்கிறார்! சொல்கிறார்!. நடிப்புக்கு வயதில்லை என்கிறார். நடிப்புக்கு நல்ல கலைஞர். அவ்வளவுதான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்கள் கற்றலும் கற்கும் முறையும்;

### கல்வியின் அவசியம்

பொதுவாக மாணவர் சமுதாயம் இன்று கல்வியினை கட்டாயம் கற்க வேண்டிய பொறுப்புடையவர்களாக இருக்கின்றார்கள். கல்வி என்பதன் மூலம்தான் அவர்கள் சமூக அந்தஸ்த்தினை பெற்றுக்கொள்கிறார்கள். ஆனால் கல்வி கற்கும் மாணவர்களின் நிலைபாடானது மாறுபாடு கொண்டதாக அமைகின்றது. இதற்கான பின்னணி காரணங்கள் சமூக ரீதியிலும், தனியாள் ஆளுமையின் அடிப்படையிலும் அதற்கான பிரதிபலிப்பு கற்றல் தொடர்பான விடயத்தில் பங்களிப்பு செய்கிறது. இவ்வாறான கற்றல் கற்கும் முறையைப் பற்றி சரியான ஒரு தெளிவுப்பாடு என்பது இன்றைய கல்வி கற்கும் மாணவர்களிடையே இல்லை. இது தனியாள் முறையிலும், சமூக ரீதியிலும் மாறுபாடு கொண்டதாகவே அமைகிறது. தனியாள் ஆளுமை தொடர்பான சில செயற்பாடு அதன் முன்னேற்றத்துக்கும், பின்னடைவுக்கும் காரணமாக அமைகின்றது. எனவே இதற்கான காரணங்கள் தொடர்பாகவே இக்கட்டுரை அமைகின்றது. அத்துடன் சமூகம் எதிர்கொள்ளும் ஆளுமை, தொழில் முன்னேற்றம் என்பவற்றில் அதிக கவனம் செலுத்துகின்றது.

அந்தவகையில் கற்றல் அல்லது கல்வி என்பது மனிதனின் சிறந்த வளர்ச்சி என்பதினை குறித்து நிற்கின்றது. மனதோடு தொடர்புடைய விடயமாக கல்வி முன்னிலை வகிக்கின்றது. மனதின் மற்ற எல்லா கருவிகளும் தொழில்களும் கற்றலுக்கென்றே வருகின்றன. இவ்வாறான கற்றல் அல்லது கல்வி என்பதன் தன்மைப் பற்றியும். கல்வியின் இயல்பு, அதன் தன்மை, அதன் முறைகள் அதன் கட்டளைகள், கற்றலின் பலாபலன்கள் எவைகள் என்பதினை ஆராய வேண்டியுள்ளது. இன்றைய சமூதாயம் கல்விசார் நடவடிக்கையில் கல்விசார் எண்ணக்கரு தொடர்பாக தெட்டதெளிவான எண்ணப்பாடு காணப்படுகின்ற போதும் அதன் செயற்பாட்டு ரீதியில் ஒருமித்த தெளிவு நிலை ஒன்று இல்லாமலே இருக்கின்றது. இதனுடன் அடியொட்டியே இதன்சார் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகிறது. இதன்போது நிலமையற்ற கல்வியினை அவர்களுக்கு புகட்ட முனைகின்றது இதன் பிரதிபலன் அடைய முடியாமற் போகிறது. எனவேதான் இது தொடர்பாக ஒரு சரியான அறிமுகம் அல்லது வரைவிலக்கணம்மினை கொடுக்க வேண்டிய கடமை எம்மிடம் உண்டு. எனவேதான் கல்வி தொடர்பான செயற்பாடுகளையும், நடவடிக்கைகளையும் முன்னெடக்க முன்பு கற்றல் அல்லது கல்வி தொடர்பாக ஆராய வேண்டியுள்ளது.

கல்வி என்பது பற்றி பல்வேறு உள்நாட்டு, பிறநாட்டு கல்வியலாளர்களும், தத்துவவாதிகளும், கருத்துக்களை முன்மொழிந்துள்ளார்கள். அதன்படி வெங்கட் ராமையா என்பவர் "ஒருவனுடைய வாழ்க்கையை கடந்து, முறையைச் சொல்லிக் கொடுக்கும் தன்மையுள்ளது" என்கிறார். ஐலொட்டா என்பவர் " நிகழ்ச்சினை அனுபவித்து வந்தமை உண்டாக்கும் நடத்தை மாறுதல் கல்வி" எனவும், skinner என்பவர் " கற்றல் நடத்தையில் பொருத்தப்பாட்டை அடைவதாகும்" எனவும், கற்றல் நீண்டதும், உறுதியாக நிலைத்து நிற்பதுமான ஒரு நடத்தை மாற்றம்" எனவும், ளுஅவைா என்பவர்" கற்பித்தலின் விளைவாகவே கற்றல் அவசியமாக திகழ்ந்து விடவில்லை" தனியே ஆசிரிய கற்பித்தல் மூலம் மட்டுமே நிகழ்ந்துவிடுவதில்லை, இது பிற உணர்வுகளுடனும் தொடர்புப்பட்டது" என்கிறார்.

இல் பட்ரிக் என்ற அறிஞர் "கற்றல் என்னும் பதத்திற்கு சில நரம்புப் பொருத்தங்களை உண்டு பண்ணி அலைகள் வலியுறுத்துவதும், அதே நேரத்தில் வேறு சில நரம்பு பொருத்தங்களை வலிகுறைப்பதும் என்பதேயாகும். அதே நேரத்தில் இன்னுமொரு பதத்தில் கல்வியானது குணத்தாலும், நடத்தையுடனும் இணைத்து காட்டப்பட்ட ஒரு வகை வளர்ச்சியாகும். இதனை நாம் ஒன்றுப்படுத்தி சுருக்கமாக கூறும்போது "கல்வியானது உடலின் மாறுதல்களையும் நடத்தையின் மாறுதல்களையும் சீர்படுத்தி வருவதினை நாம் கற்றல் அல்லது கல்வி என்று கூறலாம். கல்வி என்பதனை நாம் சரியான வரைவிலக்கப்படுத்தி, அது தொடர்பான தெளிவுப்பாட்டுடன் தொடரும் போதே கல்வியில் முழுப்பயனையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பது எமது நோக்கமாக அமைகிறது. இதனையே திருவள்ளுவர்,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக"

என்ற குறலின் மூலம் முழுமையான விளக்கத்தினை கல்விக்கு கொடுக்கிறார். மாணவரொருவர் தமது உள்ளார்ந்த தன்மைக்கேற்ப வளர்ச்சிப் பெற்று, அதன் சந்தர்பங்களுக்கும், வயதிற்கும் தக்கவாறு குணம், நடத்தைகள். என்பதினை சரிசெய்து அதன் மூலம் தமது ஆளுமைமையை சரியாக நகர்த்தி கொள்ளக் கூடியதாக அமைவது கல்வி என பொதுவாக கூறமுடியும்.

தொடரும் ...................

ஜுலை 01 ம் திகதி உலக நகைச்சுவை தினம்

ஜுலை 11ம் திகதி உலக மக்கள் தொகை தினம்

## சிரிப்பெனும் மருந்தை தினம் தினம் அருந்துங்கள்.

சிரியுங்கள், உலகம் உங்களுடன் சேர்ந்து சிரிக்கும் அழுங்கள்.. நீங்கள் ஒருவரே அழுதுக்கொண்டிருப்பீர்கள்.....ஸ்டீவன்சன்

சிரிப்பு ஆக்கபூர்வமானது. சிரியுங்கள், மனம் சுத்தமாகின்றது. ஆரோக்கியமடைகின்றது. மனம் ஆரோக்கியமடைந்தால் அதைத்தொடர்ந்து உடம்பும் ஆரோக்கிம் அடையும். அப்படி ஒரு மருந்து இருப்பதை நாம் மறந்து விடுகின்றோம். அவ்வளவுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்துக் களம்

# சமூக மாற்றத்துடன் கூடிய முன்னேற்றம் - மலையக புத்திஜீவிகளின் எதிர்பார்ப்பு

மாறுதல் இல்லாமல் ஒரு சமூகம் ஒரே மாதிரியாக இருக்க முடியாது. இதன் பின்னணிகளே பல்வகையான முன்னேற்றகரமான சமூகங்களில் வெளிப்பாடாக அமைந்திருந்தன. இது இயற்கையின் நியதி என கருதும் மனித சிந்தனை, அதனை குறுகிய காலத்துக்குள் எதிர்பார்க்கின்ற காலம் நவீன காலமாயிருக்கின்றது. எனவே மனித சக்தியுடன் கூடிய சமூக மாற்றங்கள், சில நேரங்களில் முன்னுக்கு பின் முரணான கருத்துகளையும் விளைவுகளைகளையும் தரக்கூடியதாகவுள்ளன.

சமூக மாற்றம் தொடர்பில் கருத்தியல்கள் பல விளக்கங்களை தந்துக்கொண்டிருக்கின்றன. குறிப்பாக சமூக மாற்றம் என்பதை நவீன காலம், சமூகவியல் கருத்துகளுக்கே முதன்மையளிக்கிறது. எனவே இதன் தாட்பரியம் சமூக உறவுகளில் அல்லது சமூக வாழ்வில் இடம்பெறும் மாற்றங்களை முதன்மைப்படுத்துகின்றனவாகவே இருக்கின்றன. இந்நிலையில் சமூக மாற்றம் என்பதினை இரு வேறுப்பட்ட சமூக சக்திகளே தீர்மானிக்கின்றன எனக் காணலாம். அவை உட்சக்தி, வெளிச்சக்தி என்பவையாகும். பொதுவாக உட்சக்தி என்பது சமூகத்தில் புதிய கருத்தியல்கள், கருத்துக்கள், கண்டுபிடிப்புகள், நவீன பழக்கவழக்கங்கள், அறிவியல் தொடர்பாடல்கள் ஆகும். வெளிச்சக்தி என்பது பிற சமூகங்களுடன் ஏற்படும் உறவுகள், தொடர்புகள் என்பவற்றை ஒப்பீட்டு ரீதியாக இடம்பெறுகின்ற நிகழ்வுகளையே குறிக்கும்.

இவ்வாறான காரணிகள், சக்திகள், எல்லா சமூகங்களிலும் உள்ளிருந்தே மாற்றத்தை ஏற்படுத்தும். சமூகத்தில் வாழும் இரு வேறுப்பட்ட மக்களை கொண்டே அக்காரணிகள் தீர்மானிக்கப்படுகின்றன. அவை முறையே,

1.சாதாரண மக்கள்

2.அறிவுள்ளோர் அல்லது புத்திஜீவிகள்.

சாதாரண மக்கள் என்றவகையில் இவர்களுக்கு சமூகத்தின் நிலைபாடு தொடர்பாக அதிக கவனம் இருக்காது. இயற்கையான நியதியின் கீழ் தமது வாழ்க்கையை நகர்த்தி சென்றுக் கொண்டிருக்கும் கூட்டத்தினரை குறிக்கும். இவர்களுடைய எண்ணப்பாடுகள் தங்களுடைய வாழ்க்கை சுழற்சிகளுக்குள் குறுக்கப்பட்டிருக்கும். பொது சமூகம் தொடர்பில் இவர்களது கவனிப்பு குறைவாகவோ அல்லது இல்லாமலோ இருக்கும். ஆனால் இதே சமூகத்தினுள் வாழ்ந்தாலும், அதற்கு மாறான கொள்கைகளைக் கொண்டிருப்பவர்கள் புத்திஜீவிகளாவார்கள். பொதுவாக புத்திஜீவிகள் என்பவர்களைப் பற்றியே சமூக முன்னேற்றத்துடன் கூடிய அபிவிருத்தியில் இணைத்துக் கொள்ளவிருக்கின்றோம். அவர்களின் நிலைபாடு தொடர்பாக கருத்துக்களம் ஆராயவிருக்கிறது.

இன்று அறிவுள்ளோர்கள் அனைவரும் கல்விமான்களாக இருப்பதில்லை. அதேபோல் கல்விமான்கள் அனைவரும் அறிவுள்ளோர்களாக இருப்பதுவும் இல்லை. கல்விமான்களிலும் புத்திஜீவிகள் எத்தனை பேர் இருக்கின்றார்கள் என்பது மலையக வரலாற்றில் கேள்விக்குறியே.! எனவே புத்திஜீவிகள் என்பவரை நாம் இங்கு இனங்காட்டக்கூடிய தேவையிருக்கின்றது. சமூக நலனில் அதிக கவனம் செலுத்தும் நபர்களாக இருப்பவர்கள் அத்துடன் சமூக மாற்றம், சமூக முன்னேற்றம் என்பதில் அதிக அக்கறைக் கொண்டிருப்பவர்களை நாம் சமூக புத்திஜீவிகள், சமூகப்பற்றாளர்கள், சமூக ஆர்வலர்கள், என்பவர்களில் புத்திஜீவிகளே மாற்றத்துடன் கூடிய முன்னேற்றத்தினை எதிர்பார்த்து அதற்கான காரணிகளை உருவாக்க முனைபவர்களாக இருக்கின்றனர். இதனையே "அந்தோனி கிறேம்ஸி" என்ற அரசியல் தத்துவஞானி, தான் எழுதிய "சிறைச்சாலை குறிப்பேடுகள்" (prison note Books) என்பதில், சமூக முன்னேற்றம், மாற்றம் என்பதில் மெய்யறிவுடன் கூடிய அறிவுக் கொண்ட புத்திஜீவிகளையே, ஒழுங்கமைப்புடன் கூடிய அபிவிருத்தி சமூகத்தில் எதிர்பார்த்து நிற்கின்றார்.

இதிலே, குறிப்பிட்ட முக்கியமான எண்ணக்கருக்கள் சமூக மாற்றம், சமூக முன்னேற்றம் என்பதில் அதிக அக்கறை கொண்டிருந்தது. இதிலே புத்திஜீவிகளின் வகிபங்கு தொடர்பில் ஆழமான சில சிந்தனைகள் சமூக மாற்றத்துடன் கூடிய முன்னேற்றத்தினை அளவிடும் அளவுகோளாக மதிப்பிடுகின்றார்.

கிறேம்ஸி புத்திஜீவிகளை இரண்டு பிரிவுகளில் அடக்கிப்பார்கின்றார்.

1. மரபு ரீதியான புத்திஜீவிகள்
2. உறுப்பமைதி வாய்ந்த புத்திஜீவிகள்.

மரபு ரீதியான புத்திஜீவிகள் தாம் சுதந்திரமானவர்களாக கருதுகின்றார்கள், ஏனெனில் இவர்கள் சமூகத்தில் அரசியல் தளத்தில் காணப்படுவதன் காரணமாகவும், ஆளும் வர்க்கத்துடன் இணைந்திருப்பதனாலுமாகும். இது மத்திய கால நிலமானிய சமூகத்திலிருந்தே தொன்று தொட்டு வருகின்றதொன்றாகும். இந்த புத்திஜீவிகள் வரிசையில் மதகுருமார்களே மேலாதிக்கம் கொண்டிருந்ததன் காரணமாக சுதந்திரமான நிலைபாடு தோற்றம் பெறலாயின.

உறுப்பமைதி வாய்ந்த புத்திஜீவிகள் எனும்போது, சுதந்திரம் என்பது ஒருவித மாயையை குறிப்பிடுவதேயன்றி அவர்களுக்கு என்ற வர்க்க நிலைபாடு உள்ளது என்பதனையே குறிக்கும். இவர்கள் தாம் வாழும் பிரிவின் வர்க்க உணர்வுகளை பிரதிபலிக்கின்றார்கள்.

**தாக்கம்**

சிறந்த அரசியல், சமூக, பொருளாதார விமர்சன கட்டுரைகளும், உங்கள் திறமைகளை வெளிக்கொணரும் ஆக்கங்களையும் தாக்கம் கோருகின்றது. அத்துடன் கருத்துக் களத்தில் உங்கள் கருத்துக்களை முன்வைப்பதோடு, வாசகர் விமர்சன பகுதியிலும் இணைந்துக் கொள்ளலாம். ஆக்கங்களில் திருத்தம் மேற்கொள்ள அனைத்து உரிமையும் ஆசிரியருக்கு உண்டு.

ஆ-ர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு சமூக குழுவும் தமக்கான புத்திஜீவிகளை பெற்றுள்ளன. இப்பிரிவு என்பது சமூகத்தில் தவிர்க்க முடியாத ஒன்று என கிறேம்ஸி கருதவில்லை. புத்திஜீவிகள் வரலாற்று ரீதியில் முற்போக்கு சிந்தனையை கொண்டிருப்பினும் முக்கிய கட்டங்களில் புத்திஜீவிகளுக்கு இடையிலான ஒருமைப்பாட்டுணர்வு வெளிப்படுத்துவது சாத்தியமற்றதாகக் காணப்படுகிறது. எவ்வாறிருப்பினும், சமூக முன்னேற்றம், அதன் மாற்றம் தொடர்பில் புத்திஜீவிகள் பங்களாற்றுகை நடைமுறை சார்ந்ததாக இருக்க வேண்டும் என கருதுகின்றார். நடைமுறை வாழ்வில் ஒன்றுப்பட்டு செயற்பட வேண்டும் என்பதில் அக்கறைக் கொள்கிறார்.

இவ்வாறான நிலையில் சமூக மாற்றத்துடன் கூடிய முன்னேற்றம் என்பதினை கருத்திற் கொண்டு, மலையக சமூகத்தில் புத்திஜீவிகளின் வகிபங்கு என்ன என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும். சமூக மாற்றத்துடன் கூடிய முன்னேற்றம் என்பதில் தாக்கம் செலுத்தும் அனைத்துக் காரணிகளையும் உருவாக்கும் முக்கியப்பொறுப்பு சமூக புத்திஜீவிகளிடம் இருக்க வேண்டும். இவ்வாறான சிந்தனை எதிர்பார்ப்புடன் இருக்கின்ற சிந்தனையாளர்களிடம் இன்று ஒரு விதமான சிக்கல் நிலை உருவாகியுள்ளது. அதாவது மலையகத்தின் முன்னேற்றத்துக்கும், அதன் வளர்ச்சிக்கும், மலையக புத்திஜீவிகளின் வகிபங்கு எத்தகைய தன்மையை கொண்டிருக்கின்றது? என்பது மிகப் பெரிய கேள்வியாகவிருக்கின்றது. கிறேம்ஸி கண்ட ஆட்சியில் மாயையான நிலைபாடும், அதிகார தொனியும் கொண்ட மரபு சார் புத்திஜீவிகளின் பண்புகள், இன்று மலையகத்தில் புதிய தலைமுறைகளிடமும், அதேபோல் மிக இறுக்கமான நிலையிலிருந்த மலையகத்தை மீட்டெடுத்த முற்போக்கான சிந்தனைக் கொண்டவர்களாக காணப்பட்ட புத்திஜீவிகளிடம், நவீன சிந்தனை காணப்படுகின்மை காலத்தின் கோலமாகவிருக்கின்றது.

அதற்கான முழுமையான காரணம் என்ன? புத்திஜீவிகளின் நிலைப்பாடு இன்று எத்தகைய தன்மையில் நகர்ந்துக் கொண்டிருக்கின்றது? உண்மையான புத்திஜீவிகளின் நிலைப்பாடு எத்தகைய தன்மையில் காணப்பட வேண்டும்? புத்திஜீவிகளின் வாழ்க்கையில் மலையக தொழிற் சங்கங்கள் எப்படியான தாக்கத்தினை செலுத்தியிருக்கின்றது? என்பது பற்றிய உங்கள் கருத்துக்களை இந்த தாக்கத்தின் கருத்து களத்தினூடாக பகிர்ந்துக் கொள்ளலாம்.

## மலையக கலைச்சார கழகம்

**அழிந்துச் செல்லும் மலையக கலைகளுக்கும், இளம் தலைமுறையினரது திறமைகளுக்கும் புத்துயிர் ஊட்டும் வகையில் மலையக கலாச்சார கழகத்தினால் மலையக பிரதேசங்களை ஒருங்கிணைத்து மலையக கலாச்சாரத்தை மேம்படுத்த போட்டி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இதன் முதற்கட்டமாக நோர்வூட், சாமிமலை, பொகவந்தலாவ பிரதேசங்களில் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு ஏனைய பகுதிகளிலிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அனைத்துப் போட்டிகளும் திறந்த போட்டிகளாக இடம்பெறும். பிரதேசவாரியாக போட்டிகள் நடாத்தப்பட்டு முழு மலையகம் தழுவிய வகையிலும் நடைபெறவுள்ளது. பரிசுகள் பிரதேசவாரியாகவும், மலையக வாரியாகவும் வழங்கப்படவுள்ளன.**

### போட்டிகள்

| | |
|---|---|
| எழுத்துப் போட்டி | கவிதை |
| நாடகம் | சமூக நாடகங்கள் |
| | இலக்கிய நாடகம் |
| பேச்சு திறன் | விவாதம் |
| | பட்டிமன்றம் |
| | பேச்சுப் போட்டி |
| நாடனம் | தனி நடனம |
| | குழு நடனம் |
| | கிராமிய நடனம் |
| | பாரம்பரிய நடனம் |
| பாடல் | வில்லுப்பாட்டு |
| | அபிநய பாடல்கள் |
| | புதிய நிர்மான பாடல்கள் |
| | மலையக பாடல்கள் |
| | தலாட்டு, ஒப்பாரி, |
| | கொலவைப்பாடல் |
| | நாட்டார் பாடல். |
| கூத்துக்கள் | மலையக கலாச்சார கூத்துக்கள் |
| இசை வாத்தியம் | தோல் வாத்தியங்கள் |
| | காற்று வாத்தியங்கள் |

உங்களது விண்ணப்பங்களை **A4** தாளில் முழு தகவல்கள் அடங்கிய வகையில் சுயமாக தயாரித்து கீழ்காணும் முகவரிக்கு 10திகதி செப்டம்பர். 2010 க்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

**அனுப்ப வேண்டிய முகவரி**

மலையக கலாச்சார கழகம்
155 1/1 Aடிம்புள வீதி,
ஹட்டன்.

தொடர்புக்கு :- 0719504769 -0759575859

மின்னஞ்சல் முகவரி:- mcc_hillcountry@gmail.com

"இருபதிலாகட்டும், எண்பதிலாகட்டும்
கற்பதை நிறுத்துகிறவர்கள்
முதுமையுற்றவர்கள்தான்
எவர் தொடர்ந்து கற்கிறாரோ அவர்
தொடர்ந்தும் இளமையாயிருப்பார்.
வாழ்க்கையில் மகத்தான காரியம் - உங்கள்
மனதை இளமையாய் வைத்திருப்பதுதான்"
தாக்கம்

ஆயத்தப்படுவதற்கான மனத்திட்டம் இல்லாவிடில்
வெற்றிக்கான ஆசை அர்த்தமற்றதுதான்

தாக்கம் குறித்து நிறை கண்டால் நண்பரிடம் கூறுங்கள்
குறை கண்டால் எங்களிடம் கூறுங்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலையகப் பேரவை வெளியீடு

# தாக்கம்

மலையக மக்கள் சிந்தனையில்...!

## தாக்கம் சந்தா விண்ணப்பப் படிவம்

பெயர்:~
நிரந்தர முகவரி:~
தொழில்:~
தொலைபேசி தொலை நகல்:~
தாக்கம் அனுப்ப வேண்டிய முகவரி :~

இத்துடன் ரூபா ......... க்கான காசுக் கட்டளையை இல ....... இணைத்துள்ளேன்.

திகதி                                                  கையொப்பம்

தாக்கம் சஞ்சிகைக்கு சந்தா செலுத்த விரும்புவோர், இலங்கை வங்கி, சேமிப்புக் கணக்குஎண் 7648780 Bank of Ceylon வங்கியின் எந்த கிளையிலிருந்தும் தாக்கம் கணக்கு எண்ணுக்கு சந்தா அல்லது சஞ்சிகை விலையை பணமாக வைப்பு செய்யலாம். தாக்கம் சஞ்சிகைக்கு சந்தா பணம் அனுப்புவர்கள் செலுத்தப்பட்ட தொகை, இடம்,மேலதிகமான தேவைகளைக் குறிப்பிட்டு தாக்கம் அலுவலகத்திற்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தவும். அல்லது msspksnthan@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்புக் கொள்ளவும்.

| | |
|---|---|
| தனி இதழ் | : ரூ.70. |
| ஆண்டு சந்தா | : ரூ.800. |
| இரண்டு வருடச் சந்தா | : ரூ.1500. |

## தாக்கம் விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| பின் அட்டை | : ரூ.10,000 |
| முன் உள்அட்டை | : ரூ.8,000 |
| பின் உள்அட்டை | : ரூ.8,000 |
| உள் பக்கங்கள்(அரை) | : ரூ.4,000 |
| நடு இரு பக்கம் | : ரூ.6,000 |

தொடர்புக்கு அணுக வேண்டியது

ஹட்டன்

155 1/1, டிம்புள ரோட், ஹட்டன்

| | |
|---|---|
| S.Sureshkumar | :0719504769 |
| S.Umameshwaran | :0713438622 |
| S.Selvarajah | :0728883192 |
| S.Jaganathan | :0714788225 |

கொழும்பு

65 A. வாசல வீதி,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு- 13

S.Dusiyanthan
0719881676

நுவரெலியா


S.Selvarajah
-0728883192

S.Partheepakanthan
-0759575859

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தின் திருப்பு முனைகளா?





பழைய உலகின் இலக்கிய உணர்ச்சிகளை அறுத்துப் பார்த்து நிராகரிப்பதையும், புதிய உலகின் இலக்கியங்களைக் கண்டு உற்சாகம் அடைவதையும் உங்களின் அரசியல் வாழ்க்கைதான் தீர்மானிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org